Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Restaurant Tilko



10% Disscount

மே மாதம் மட்டும்

(உணவு மட்டும்)

(Fully Air Condationed)

Tilko Jaffna City Hotel

Tel : 021 222 5969, Fax:021 222 7291

Wdb:www.cityhoteljaffna.com

e-mail : info@cityhoteljaffna.com

TILKO (C/1501)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகர்சி 13 சனிக்கிழமை (26.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 238

கண்டனத்திற்குரியது



04

அவலத்தில் பிழைப்பு



08

அதிகரிக்க தீர்மானம்



09

பொன்சேகா வியூகம்



10

வெளிச்சத்தில் வேலணை



12

# ஆணைக்குழு அடிப்படையில் தெரிவுக்குழுவின் செயற்பாடு

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் அடிப்படையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் அமையும் என அரசாங்கம் அமெரிக்காவிற்கு வாக்குறுதி அளித்துள்ளது.

அண்மையில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் முன்வைத்த செயற்திட்டத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் 33 பிரதான பரிந்துரைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் நாடாளுமன்ற மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேசியக் கொள்கை, இறுதிக் கட்ட யுத்தம், மனித உரிமை மற்றும் தேசிய பாதுகாப்பு, மீள்குடியேற்றம், அபிவிருத்தி ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் அரசாங்கம் அமெரிக்காவிற்கு விளக்கம் அளித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு பல்வேறு அமைச்சுக்களும் திணைக்களங்களும் ஒருங்கிணைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

# மனிதாபிமான உதவிகள் வழங்குவதில் நெருக்கடி

## ஐ.நா. அறிவிப்பு

(ஜெனிவா)

இலங்கைக்கு தொடர்ச்சியாக மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

முன்னாள் யுத்த வலயத்தில் மனிதாபிமான உதவிகளை வழங்க 147 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

எனினும் உதவிகளை வழங்குவதற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# சண்டிலிப்பாய் சிறுவன் தாயாரிடம் ஒப்படைப்பு

(திருநெல்வேலி)

கடத்தப்பட்டு பின்னர் மீட்கப்புட்ட சண்டிலிப்பாய் சிறுவனை மல்லாகம் நீதவான் நேற்றைய தினம் தாயாருடன் சேர்ந்து வாழ உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பரமநாதன் ரஜிராம் (வயது - 13) என்னும் சிறுவன் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் சண்டிலிப்பாயில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது வானில் வந்த சிலரால் கடத்திச் செல்லப்பட்டான். பின்னர் இவன் காத்தான்குடிக்கு கொண்டு செல்லப்பட்டு சுன்ன சடங்கு செய்யப்பட்டு முஸ்லிமாக மாற்றப்பட்டு கொத்தடிமையாக முஸ்லிம் வீடு ஒன்றில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தான்.

ஒரு வருடம் கடந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் நபர்களுடன் வீதியோர புடவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த போது சிறுவனின் உறவினர்களால் இவன் அடையாளம்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு குடாநாட்டிலும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு நிகழ்ச்சித் திட்டம் யாழ். குடாநாட்டிலும் நேற்றைய தினம் ஆரம்பமானது.

தேசிய வீடமைப்பு அதிகார சபை வளாகத்தில் அதன் முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான வீடமைப்பு நிதி காசோலைகளை வழங்கி வைத்தார்.

ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு திட்டத்தின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் தெரிவு

19 ஆம் பக்கம் பார்க்க



# மனித உரிமை மீறல்களை தடுக்கத் தவறியது அரசு

## கடுந்தொனியில் சாடுகிறது அமெரிக்கா



(வொஷிங்டன்)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

200 நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான 2011 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹலாரி கிளின்டன் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பாக அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சட்டத்துக்கும், நீதிக்கும் புறம்பான படுகொலைச சம்பவங்களே முக்கிய மனித உரிமை மீறல்களாக அமைந்துள்ளன. படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய படுகொலைகள் அரசியல் ரீதியான காரணங்களை அடிப்படையாகக் கொண்டவை. குடியியல் செயற்பாட்டாளர்கள், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் அரசாங்கத்தின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். ஊடகவியலாளர்கள் சுய தணிக்கையை பின்பற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

இலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பில் எவ்வித பொறுப்புக்கூறலும் இடம் பெறவில்லை. படைத்தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.தே.க., கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைவு

(கொழும்பு)

தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான எதிர்க்கட்சி பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியல் அடுத்த மாதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் தற்போது இந்தக் குழுவில் இணைய விருப்பம் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் உறுப்பினர்களின் பெயர்கள் இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க

# காணாமற்போன ஒருவரை மீட்டுத்தருவதாக பண மோசடி

(யாழ்ப்பாணம்)

காணாமற்போன ஒருவரை மீட்டுத்தருவதாகக் கூறி இருபாலையைச் சேர்ந்த ஒருவரை ஏமாற்றி ஒரு இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்டவர் குறித்து யாழ். மனித உரிமை ஆணைக் குழு காரியாலயத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் இருபாலையைச் சேர்ந்த காணாமற்போன ஒருவரை மீட்டுத் தருவதாகவும் அதற்கு முற்கூட்டியே ஒரு இலட்சம் ரூபாவைத் தரவேண்டும் என்று காணாமற்போனவரது உறவினர்களிடத்தில் கூறியிருக்கின்றார்.

அதனையடுத்து அவர்களும் அவர் தெரிவித்தது போன்று ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையில் ஒரு இலட்சம் ரூபாவை

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை மீது சர்வதேச விசாரணை ஏற்றுக்கொள்ள ரஷ்யா மறுப்பு




(மொஸ்கோ)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அழுத்தம் கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லவ்ரோவை மொஸ்கோவில் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை

19 ஆம் பக்கம் பார்க்க

# நல்லூர் முருகன் ஆலயச் சூழலில் வீதிகள் அனைத்தும் காப்பற் மயம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தைச் சூழவுள்ள வீதிகளைச் செப்பனிட்டு காப்பற் வீதியாக மாற்றுவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேற்படி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பிக்கவிருப்பதால் அதற்கு முன்னர் இந்த வீதியின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு யாழ்.மாநகரசபை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் துரித வீதி அபிவிருத்தி நடவடிக்கை காரணமாக எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மேற்படி ஆலயச்சுற்றாடல் ஊடான வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது.

எனவே மேற்படி திகதியில் இருந்து வீதி அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும் வரை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு போக்குவரத்தில் ஈடுபடுவோரை யாழ்.மாநகரசபை கேட்டுக் கொண்டுள்ளது.

## பூட் சிற்றியில் திருட்டு சூத்திரதாரிக்குச் சிறை

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் உள்ள பூட் சிற்றி ஒன்றில் பால் ரின்களைத் திருடிய ஒருவருக்கு யாழ்.நீதிமன்று நேற்று 3 மாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கடந்த 10 ஆம் திகதி ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான இரண்டு பால் ரின்களை மேற்படி நிலையத்திலிருந்து நெடுந்தீவைச் சேர்ந்த ஜோசப் ஜெரோம் என்பவர் திருடியிருந்தார்.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 11 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டிருந்தார்.

நேற்று இவர் மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் போது இவர் குற்றவாளியாகக் காணப்பட்டு 3 மாத காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் 1000 ரூபா அபராதமும் செலுத்தும்படி கட்டளை இடப்பட்டது.

அபராதம் செலுத்தத் தவறின் ஒரு வார கால சிறைத்தண்டனை எனவும் உத்தரவிடப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறியதால் இவர் சிறைவாசம் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது.

இவர் மீது பல முற்குற்றங்கள இருப்பதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. (137)

## ‘நேச்சர் க்ளிக்’ புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் வே.வசந்தரூபனின் "நேச்சர் க்ளிக்" என்னும் புகைப்படக் கண்காட்சி நாளையும், நாளை மறுதினமும் இல. 15 றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலா முற்றத்தில் நடைபெறவுள்ளது.

இரு நாட்களும் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை இக்கண்காட்சி நடைபெறும்.

இதேவேளை, திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி மாதந்தோறும் நடத்துகின்ற கலை நிலா அரங்க நிகழ்வுகள் இன்று மாலை 4.30 மணிக்கு இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரி இயங்கும் கலைக்கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், பாட்டு, ஓர்கன் இசை போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (52)

## “திவிநெகும” விசேட கண்காட்சி

(முழங்காவில்)

மகிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் மனைக் கைத்தொழிலுக்கு விருப்பமுள்ள பயனாளிகளை அறிவூட்டும் கண்காட்சி நிகழ்வு இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்கவிழா இன்று முற்பகல் 9.00 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

“திவிநெகும” மனைப்பொருளாதார அலகுகள் 25 இலட்சம் நிகழ்ச்சித் திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரது ஒருங்கிணைப்புடனும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழும் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (112)

## அலங்கார உற்சவம்

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியிலுள்ள சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கோலாகலத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இவ் உற்சவம் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளதுடன், எதிர்வரும் 2ஆம் திகதி வரை தினமும் காலை, மாலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. (கே)

## பண மோசடி செய்த சந்தேக நபருக்கு பிணை

(திருநெல்வேலி)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ஒருவரிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றி மோசடி செய்த சந்தேக நபர் ஒருவர் நேற்று யாழ்.நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் கந்தர்மடம் விநாயகர் வீதியைச் சேர்ந்த வீ.பிரசாத் என்பவர் சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த ஒவருரிடம், தன்னை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றி மோசடி செய் ததாக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

நேற்று இவர் யாழ்.பொலிஸாரினால் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இவரை விசாரணை செய்த நீதவான் மா.கணேசராசா 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட் பிணையில் செல்வதற்கு உத்தரவிட்டார். பிணையாளிகள் இருவரும் யாழ்.நீதிமன்ற எல்லைக்குள் இருப்பவர்களாக இருக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. (137)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**VACANCY**

Further to the advertisement puplished for post of Technical Officer Grade.II Seg.A. Amendment is given below;

**POST - TECHNICAL OFFICER GRADE.II SEG.A**
(Vacancies exist at the Department of physics and Computer Unit)

**Qualifications:**
National Diploma in Technology in the relevant field of specialization or its equivalent qualifications

Registrar
25.05.2012 (C/1509)



# ஊர்காவற்றுறை பிரதேச சபை

## வேலைக்கான கேள்வி அறிவித்தல் – 2012

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் விநியோகித்தல் - 30.05.2012 முற்பகல் 10.00 மணி முதல் 10.06.2012 முற்பகல் 10.00 மணி வரை

கேள்வி ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி - 13.06.2012 முற்பகல் 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 13.06.2012 முற்பகல் 11.00 மணி

1. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப்பத்திரப் பணத்துடன் மீளளிக்கப்படாத 12% பெறுதி சேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை “தவிசாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை” என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடல் வேண்டும்.

   மறு பிரதியை “பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.” என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விபரம் | வேண்டப்படும் இக்ராட் தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம் (VAT, NBT வரிகள் நீங்கலாக |
|---|---|---|---|---|
| | ஊர்காவற்றுறை பஸ்தரிப்பு நிலைய நிர்மாண வேலை | C-10 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 500.00 |

ம.ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

26.05.2012

(C/1510)


## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



4 ஆவது அகவையில்




பெயர் : ர.கிறேஸ் ஜஸ்மின்
முகவரி : சத்தியபுரம்,
உடுவில் தெற்கு,
உடுவில்

நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார் ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை.

- பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## நாட்டின் வளமும் வலுவும்

புலம்பெயர்ந்து வாழும் மக்கள் என்னதான் நாடுகடந்த அரசாங்கம், சுயநிர்ணயம் என்று தமிழ்த் தேசிய வீரம் பேசிக் கொண்டிருந்தாலும் அவர்களறியாமலே மெல்ல மெல்ல தஞ்சம் புகுந்த அந்தந்த நாடுகளைச் சேர்ந்தவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. புலம்பெயர்ந்து செல்ல நேர்வதில் உள்ள மிக முக்கிய பிரச்சினையே நம் அடையாளங்களை இழத்தல் என்பதுதான்.

ஊரோடு ஒத்து வாழ் என்பதும் ரோமில் ரோமானியன் போல் இரு என்பதும் உலகெங்கும் உள்ள மக்களின் பொது இயல்பாகவே இருக்கிறது. எந்த நாட்டினராக இருந்தாலும், தொடரும் தலைமுறைகள் தாம் குடியேறிய மண்ணில் தங்களுக்கு தனித்துவம் தரும் அடையாளங்களை அவமானமாகக் கருதி அவற்றை இழந்து ஒரு பெருங்கூட்டத்தில் தங்களைக் கரைத்துக் கொள்ள முயற்சி செய்வதுதான் உலக இயல்பாக இருக்கிறது.

படிப்பு, வாழ்க்கை வசதிகள், வாழும் முறைகளை உள்வாங்கிக் கொள்ளல் மூலம் போய்ச் சேர்ந்த நாட்டுப் பிரசைகளாகவே அவர்கள் மாறுவதில் ஒன்றும் வியப்பில்லை. இவர்கள் புலம்பெயர்ந்து சென்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் அங்கே பயன்படுத்தப்படாமல் மீந்து கிடக்கும் பெருமளவு நிலங்களில் குடியேற்றுவதற்கும், அங்கு வேலை செய்வதற்கும் மக்கள் தேவைப்படுவதால் குடிவரவை அனுமதிக்கிறார்கள். அமெரிக்கா வருடந்தோறும் 55 ஆயிரம் பேரை உலகெங்கிலுமிருந்து தனது நாட்டுக் குடியுரிமை பெற அழைக்கிறது. இவ்வாறு குடியுரிமை வழங்குவதில் கனடா முதலிடம் வகிக்கிறது.

ஆனாலும், கடந்த காலங்களில் மக்கள் தொகைப் பற்றாக் குறையால் தங்கள் நாடுகளுக்கு குடிவரவை அனுமதித்த ஐரோப்பிய நாடுகள் பல இப்போது மக்கள் தொகைப் பெருக்கத்தால் பல்வேறு பிரச்சினைகள் உருவானபின், இந்த வந்தேறு குடிகளை எப்படித் திருப்பி அனுப்புவது என்பதில் கவனமாக இருக்கின்றன.

போய்க் குடியேறியவர்களோ தங்கள் நாடுகளுக்கு இனி என்றாவது முழுமையாகத் திரும்பி வந்து வாழ விரும்புவார்கள் என்று தோன்றவில்லை. இவர்கள் தற்போதுள்ள நாடுகளில் குடியுரிமை பெறுவதிலும், சொத்துகள் சேர்ப்பதிலும், அந்த வாழ்க்கை வசதிகளின் அடிமைகளாகி விட்டிருப்பதையும் பார்க்கும்போது, சில காலத்துக்கு இங்கு வந்து வந்து திரும்பிச் செல்லும் பயணிகளாகவும், அடுத்தடுத்த சந்ததிகள் வராமலே விடக்கூடிய நிலைமையும்தான் அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்த புலம்பெயர்ந்து வந்தவர்களினால் உருவான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் பல நாடுகள் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளன. அதிகரிக்கும் மக்கள் தொகை என்பது, அந்தந்த நாடுகளிலும் பற்றாக்குறைகளையும் சமூகச் சிக்கலையும்தான் உருவாக்கும்.

முன்னாள் உலக வங்கியின் தலைவர் றொபேர்ட் மக்னமாரா தன் கட்டுரை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். "எதிர்கால உலகின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கப் போவது வளர்ந்துவரும் மக்கள் தொகைதான். பின்தங்கிய, வளர்முக நாடுகள் மக்கள் தொகையை நிலைப்படுத்தவும், இருக்கும் மக்களின் ஆற்றலைப் பெருக்கவும் முனைய வேண்டும். இதற்கு மானுடம் தவறுமேயானால், ஏழைகளின் வாழ்வு மேலும் தாழ்ந்த நிலைக்கும், வசதியுள்ளவர்களின் வாழ்வு எட்ட முடியாத உச்சத்துக்கும் சென்றுவிடும்" என்கிறார் அவர்.

சமூகம் பொறுப்புடன் செயற்பட்டு, அறிவின் அடிப்படையில் வாழ ஆரம்பிக்கும் போதுதான் அந்த மக்கள் வளமாக மாறுவார்கள். நாட்டின் வலுவாக இருப்பார்கள்.

- ஆசிரியர்

# செய்மதி தொழில்நுட்பம் முதலீட்டுச் சபை ஒப்பந்தம்

(கொழும்பு)

முதலீட்டுச் சபையுடன் செய்மதித் தொழில்நுட்பம் சம்பந்தமான கம்பனி ஒன்று ஒப்பந்தம் ஒன்றை நேற்று முன்தினம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி அமைக்கப்படவுள்ள செய்மதி நிறுவனம் இலங்கையின் முதலாவது செய்மதிக் கம்பனியாக அமையும். 20 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இக் கம்பனி சீனாவின் அரச உரிமையுள்ள சீனா கிறேற் வோல் இண்டர்ஸ்ட்றி கோர்ப்பறேசன் உடன் பிரத்தியேக பங்குதாரர் ஒப்பந்தம் ஒன்றையும் செய்துள்ளது.

இது செய்மதிகளின் வடிவமைப்பு, தயாரிப்பு, செய்மதிகளை ஏவுதல், சந்தை வாய்ப்புக்களைத் தேடுதல் போன்றவற்றை மேற்கொள்ளும் ஒரு நிறுவனமாகும். இது 1980 இல் உருவாக்கப்பட்டது. சீன அரசினால் இது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் இதற்கு செய்மதிகளை வழங்கலும் வர்த்தக சேவைகளை மேற்கொள்ளவும் சர்வதேச விண் ஒத்துழைப்பை மேற்கொள்ளவும் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சர்வதேச வாடிக்கையாளர்களுடன் ஒன்பது ஒப்பந்தங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. இக் கம்பனி உள்ளூரிலும் பல செய்மதிகளை நெறிப்படுத்தியுள்ளது. 2011 ஆம் ஆண்டில் அமெரிக்காவையும் மிஞ்சியதாக இச்செய்மதியின் செயற்பாடுகள் அமைந்தன. சி.ஜி. டபிள்யூ. ஐ.சி.சீனாவின் வான்துறை கைத்தொழிலின் சர்வதேச அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது.

வான்துறைப் பொருட்கள் சேவைகளுக்காக சி.ஜி.டபிள்யூ. ஐ.சி.சிறப்பான சேவை முறையை ஒழுங்குபடுத்தியுள்ளது. வர்த்தகமய நெறிப்பாட்டுச சேவைகளுக்கு முழுமையான தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச் சேவைகள் பலவகையிலும் அமைகின்றன. செய்மதி ஏற்றுமதி, செய்மதி கட்டுப்பாட்டு நிலைய நிர்மாணம், செய்மதி பயன்பாடு திட்ட நிதி வழங்குதல், திட்ட காப்புறுதி தொழில்நுட்ப பயிற்சி இதில் அடங்கும்.

சகல வகையான தொலை தொடர்புச் சேவைகளை சுப்பியம் சற் வழங்கும். இதன் மூலம் ஈ-கவர்மன்ற் மற்றும் ஈ - லேர்னிங் போன்ற வசதிகளும் இதனால் கிட்டும். யுத்தத்துக்குப் பின்னரான இலங்கை பொருளாதாரத்தில் இது முதலீட்டு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

## போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைதாகினர்

போலி ஆயிரம் நாணயத்தாள்களை வைத்திருந்த இரண்டு சந்தேகநபர்கள் கஹவத்தை மொரதொட்டமுல்ல பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரதேசவாசிகள் சந்தேகநபர்கள் இருவரையும் பிடித்து நேற்று முன்தினம் இரவு பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள் ஒன்றை வர்த்தக நிலையமொன்றில் வழங்கியதால் எழுந்த சந்தேகத்தின் காரணமாக பிரதேச மக்கள் சந்தேகநபர்களை பின் தொடர்ந்து சென்று பிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவர்களிட மிருந்து 48 போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள் களும் மீட்கப்பட்டுள்ளன.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே மின்தடை அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை உரும்பிராய் மேற்குப் பிரதேசம், மருதனார் மடம் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், கந்தர்மடப்பிரதேசம், பட்டணப்பகுதி, நீங்கலாக யாழ்.மாநகரசபை பகுதி, ஸ்ரான்லி வீதி, தட்டாதெருப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# முப்பரிமாண நூலகமாக மாற்றப்படும் பருத்தித்துறை பிரதேச நூல் நிலையம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச சபையின் நூல் நிலையம் வாசகர்களை கவரும் விதத்தில் முப்பரிமாண நூலகமாக மாற்றப்படவுள்ளதாக நூலகர் திருமதி சுதர்சன் நளினி தெரிவித்துள்ளார்.

மணற்காடு பொது நூலகத்தில் கடந்த ஒரு வருடகாலமாக சிறந்த சேவையாற்றி தற்போது கடந்த 10 ஆம் திகதி முதல் பருத்தித்துறை பிரதேச சபை நூலகத்திற்கு மாற்றம் பெற்று கடமையாற்றிவரும் இவர் எமது செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடமாடும் நூல் நிலையத்தை செயற்படுத்தி கிராமங்கள் தோறும் உள்ள சிறார்கள், மற்றும மாணவர்களின் கல்வியறிவு, ஒழுக்கம், ஒற்றுமை, போன்றவற்றை மேம்படுத்தி சிறந்த சமூகமாக மாற்றுவதே எனது நோக்கமாகும். அந்தவகையில் மாணவர்கள் சிறுவயதில் இருந்து நூல் நிலையத்தை அறிந்து அறிவு, ஆற்றல், வளர்க்க உதவும் நிலையமாக நூல் நிலையங்கள் பயன்படுத்தப்படவுள்ளது.

கடந்த யுத்த காலத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில் கல்வியிழந்து இருக்கும் மாணவர்களின் கல்விக்காக பிரதேச சபையின் உதவியுடன் அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஒத்துழைப்பு வழங்குவேன். அத்துடன கலாசார நிகழ்வுகளையும் எதிர்காலத்தில் திறம்படச் செய்வதுடன் கலைஞர்களை ஊக்குவித்து வழிப்படுத்துவதற்கான செயற்றிட்டங்களையும் முன்னெடுப்பதுடன் பண்டைய கால அரும் பொருட்களையும் சேகரித்து நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வேன் என அவர் மேலும் தெரிவித்தார். (116)

# தமிழ்க் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும்

### மனோ கணேசன் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ்க் கைதிகள் விவகாரம் தொடர்பில் கட்சிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மத்தியில் ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் சிறைக் கைதிகளாக, வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய அனைத்துப் பிரதேசங்களைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். அதே போல இந்தப் பிரச்சினை தொடர்பான போராட்டங்களில், இன்று தமிழ் கட்சிகள் மாத்திரம் அல்லாமல் பல்வேறு தென்னிலங்கை முற்போக்கு கட்சிகளும், தொண்டு நிறுவன அணியினரும் பங்குபற்ற தொடங்கியுள்ளார்கள். அத்துடன் கொழும்பிலுள்ள சர்வதேச பிரதிநிதிகளும் இந்தப் பிரச்சினையில் இன்று விசேட அக்கறை செலுத்த ஆரம்பித்துள்ளார்கள். இந்த மாறிவரும் நல்ல சூழலை எவரும் மாசு படுத்திவிடக்கூடாது.

எனவே இந்த விவகாரத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மத்தியில் ஒருங்கிணைந்த சிந்தனையும், செயல்பாடும் இருக்க வேண்டும். குறிப்பாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் விசேட அவதானத்துடன் செயற்பட வேண்டும் என நெருக்கடிமிக்க போர் நடைபெற்ற காலகட்டங்களில், தமிழர் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டிய வரலாறு எமது கட்சிக்கு உண்டு. இன்றும் அதே வரலாறு சகோதர கட்சிகளுடன் இணைந்து தொடர்கிறது. இன்றைய போருக்கு பிந்திய சூழலில், தமிழர் மீதான அநீதிகளுக்கு எதிராக, தமிழ் மற்றும் முற்போக்கு கட்சிகள் ஐக்கியப்பட வேண்டும் என்பதையே தமிழ் மக்களும், சிறையிருக்கும் கைதிகளும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் விரும்பியுள்ளார்கள். இதில் எவருக்கும் மாறுபட்ட கருத்துகள் இருக்க முடியாது என்றார்.

# ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவை பல நிறுவனங்கள் செலுத்தவில்லை

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு நிறுவனங்கள், நிலையங்களிலும் பணியாற்றும் பல ஊழியர்களுக்கான சேமலாநிதி செலுத்தப்படுவதில்லை என பலராலும் குறை கூறப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள், சிறிய தொழிலகங்கள், உணவகங்கள், மருந்தகங்கள், வெதுப்பகங்கள் எனப் பல்வேறுபட்ட வியாபார நிலையங்களிலும் பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றார்கள். இவற்றில் சிலருக்கு மட்டுமே சேமலாபநிதி செலுத்தப்படுவதாகவும் பலருக்குச் செலுத்தப்படுவதில்லை எனவும் கவலை தொிவிக்கப்பட்டுள்ளது.

சில உணவகங்களில் அதிகாலையில் இருந்து இரவு வரை ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். மருந்தகங்கள் பலவற்றில் குறைந்த ஊதியத்தில் பல இளம் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். பல வர்த்தக நிலையங்களில் பல வருடங்களாகத் தொடர்ச்சியாகப் பல ஊழியர்கள் வேலை பார்க்கின்றார்கள். சிறு தொழிலகங்களில் பலர் பணியாற்றுகின்றார்கள். இவர்களில் பலருக்கு இந்நிதி தொழில் வழங்குவோரால் செலுத்தப்படுவதில்லை எனத் தெரியவந்துள்ளது.

திணைக்களத்தின் ஊழியர் பற்றாக்குறை இருந்தும் இயன்றளவு யாழ்.மாவட்டத்தில் ஊழியர் சேமலாபநிதி செலுத்தாத தொழில் தருவோர் மீது தாங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என தொழிற் திணைக்களம் கூறினாலும் அதன் செயற்பாடு மோசமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் தொழில் வழங்குவோருடன் ஊழியர்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதால் நிதி செலுத்தாத உரிமையாளர்களைக் கண்டுபிடிப்பது கடினமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள நகர, பட்டின, கிராமப் புறங்களில் உள்ள பல நிறுவனங்கள், நிலையங்கள், தொழிலகங்கள் பல ஆயிரக்கணக்கான பெண்களும், ஆண்களும் பணி புரிகிறார்கள். இவர்களில் சிலருக்கு மட்டுமே சேமலாபநிதி செலுத்தப்படுவதாகவும் பலருக்கு இது செலுத்தப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது.

தம்மிடம் வேலை பார்க்கும் ஊழியரது சேமலாபநிதியை உரிய முறையில் செலுத்த வேண்டியது தொழில் வழங்குவோரின் தலையாய கடமையாகும். அவற்றைக் கண்காணித்து ஊழியர்களின் நிதியை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொழில் திணைக்களத்தின் பாரிய பொறுப்பாகும் எனப் பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(137)




சர்வதேச லயன்ஸ் கழக வருடாந்த மாநாடும் செயற்பாடுகளுக்கான விருது வழங்கும் நிகழ்வும் கடந்த 12ஆம் திகதி நீர்கொழும்பு ஜெட்விங் புளூ ஹோட்டலில் இடம்பெற்றது.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சிறந்த தலைமை, இளைஞர் மேம்பாடு, முதியோர் அனுசரணை, தகவல் தொழில்நுட்பம், விவசாய மேம்பாடு அடங்கலான ஐந்து அதியுயர் விருதுகளைப் பெற்றது. அவ்விருதுகளை கழகத் தலைவர் லயன் எஸ்.ஜெ.செல்வராஜா பெற்றுக் கொண்டார்.

## மண்டைதீவுப் பிரதேச சபையின் கிளைக் காரியாலயம் புனரமைப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராமங்களின் முன்னாள் கிராம சபைக் கிளைக காரியாலமாக இருந்து தற்போது வேலணைப் பிரதேச சபையின் கிளைக் காரியாலயமாகவும், கிராமிய நூல் நிலையமாகவும் இயங்கி வரும் கட்டடத்தின் கூரை திருத்த வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சபைத் தவிசாளரின் பணிப்புரையின் பேரில் இந்த வேலைத் திட்டம் பல ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் புறாக்களின் தொல்லை அதிகரித்துள்ளதால், வாசிகசாலை, நூல் நிலையம் இயங்கும் இந்தப் பிரதேச சபைக் கட்டடத்தின் மேல் தளப்பகுதிக்கும் ஏனைய தேவைக்குரிய இடங்களிலும் இரும்புக் கம்பி வலைகள் பொருத்தும் வேலைகளும் ஆரம்பித்து நடைபெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(23)

## வடமராட்சிப் பிரதேசத்தில் தீவிர டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையினரால் வடமராட்சிப் பகுதியில டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு வார காலப்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையும் காலல 8 மணி தொடக்கம் 3.30 மணி வரையும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் வழிகாட்டலிலும் மேற்பார்வையின் கீழும் இடம்பெற்றது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு போசனை அமைச்சு ஆகியன இணைந்து டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை இலங்கை முழுவதும் பிரகடனப்படுத்தியிருந்தது.

இதன்பிரகாரம் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையினராலும் வடமராட்சி கிழக்குப் பகுதியை 7 வலயமாகவும், பருத்தித்துறைப் பகுதியை 7 வலயமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், உலக உணவு சுகாதாரத் தொண்டாகள் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று நுளம்பு பெருகும் இடங்களையும் அவதானித்ததுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

இதன்போது நுளம்புக் குடம்பிகள் காணப்படும் இடங்கள் இனங்காணப்பட்டு அத்தகைய வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனையவர்களுக்கு எச்சரிகை வழங்கபட்டது. அத்துடன் சுகாதாரத் திணைக்களத்தினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் கையளிக்கப்பட்டது.

(116)

## சுதேச வைத்திய மாநாடு இன்று வவுனியாவில்

(வேலணை)

வடமாகாண ஆயுர்வேத பாதுகாப்பு சபைகளின் இணைய அனுசரணையுடன் ஸ்ரீலங்கா சுதேச பாரம்பரிய வைத்தியர்களின் இணையம் ஏற்பாடு செய்துள்ள சுதேச வைத்திய மாநாடு இன்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா நகரில் உள்ள இந்திரன் ஹோட்ட லில் வைத்திய கலாநிதி எஸ்.செல்வ மகேந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண சுதேச மருத்துவ பணிப்பாளர் டாக்டர் திருமதி சியாமா துரைரெத்தினம், ஆயுர்வேத திணைக்கள தேசிய பாரம்பரிய நிறுவன அதிகாரி வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி விக்கினவேணி செல்வநாதன், இந்து அரச ஊழியர் இணையத் தலைவர் வி.கே.தனபாலன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இதில் சகல சுதேச, பாரம்பரிய வைத்தியர்களையும் கலந்துகொள்ளுமாறு மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்களான டாக்டர்கள் கே.வி.கே. திருலோகமூர்த்தி, இ.சற்குருநாதன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(05)

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் இரண்டாம் குறுக்கு வீதி தற்போது திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு சல்லிக் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

பாசையூர் புனித அந்தோனியார் திருவிழா ஆரம்பமாவதற்கு முன்னர் இத்திருத்த வேலைகள் நடைபெறவுள்ளது. எனினும் தேர்வலம் வரும் உள்வீதிகளில் சிலவற்றில் சேதங்களும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(21)

## “கண்டனன் சீதையை” இசைநாடக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் உருவான கண்டனன சீதையை என்னும் இசைநாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் இசை நாடகமானது அருணாசலக்கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இதன் எழுத்துருவை யே.ம.யோசப் மேரி, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் உருவாக்கியுள்ளனர். இசையமைப்பு, இசைப் பயிற்சி மற்றும் இசை நெறியாள்கையை யாழ்.பல்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் வழங்கவுள்ளார். இந்நாடகமானது கடந்த 11.03.2012 திகதியன்று கைலாசபதி கலையரங்கில் அரங்கு நிறைந்த காட்சியாக மேடையேற்றப்பட்டது. அன்றையதினம் இவ் ஆற்றுகையை பார்வையிட முடியாமல் போன இரசிகர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக கொள்ளலாம் என நாடக அரங்கக் கல்லூரியின் பதிவாளர் க.ஞானபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

## நூலகங்களின் பார்வை

(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் நூலக அபிவிருத்திச் செயற்பாட்டினை மேம்படுத்தும் முகமாக தீவக அபிவிருத்திக் குழுவினால் காரைநகர் பிரதேச சபையின் நூலகங்கள் பார்வையிடப்பட்டன.

அங்கு நூலகத்திற்கான இடவசதி, தளபாடவசதி மற்றும் ஆளணிகள் என்பன பற்றாக்குறையாக இருந்தமை அவதானிக்கப்பட்டன. எனவே இந்நூலகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளமை சுட்டிக்காட்டப்படுவதாக நூலக அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.



## நுங்கு வெட்டப்படுவது கண்டனத்துக்குரிய செயல்

(யாழ்ப்பாணம்)

மருத்துவ ரீதியான சிறப்பான குணவியல்பினைக் கொணடுள்ள நுங்கு தற்போது வியாபாரத்துக்காக அதிகளவில் வெட்டப்படுவது மிகவும் கண்டனத்துக்குரிய செயல் என்று பனை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

இந்நுங்குக் குலைகள் வெட்டப்படுவதால் பனையின் இனப்பெருக்கம் அழிக்கப்படுகின்றது. பனை வித்தின் வளர்ச்சிப் பருவத்தில் பூ, குரும்பை, நுஙகு, பழம் என நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

முதற்பருவம் பூந்துணர்கள், இவை கள், பதனீர் என்பன பெறப்பட்டு மென்பானங்கள், பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனம்பாணி என்பன உற்பத்தி செய்யப்படுவதற்காக சீவப்படுகின்றன. இதனால் இப்பனைகளிலிருந்து பழங்கள் உற்பத்தியாவதில்லை. பனைப் பரம்பலுக்கான செயற்பாடுகள் இல்லை.

ஏனையவை குரும்பைப் பருவத்தில் சில தாக்கங்களால் வீழ்ந்து விடுகின்றது. நுங்குப் பருத்தில் அணில்கள் அரிப்பதனாலும், காற்றினாலும் அடிபட்டு நுங்குகள் வீழ்கின்றது. சிலர் சிறு குழந்தைகளின் மருத்துவத் தேவைக்காகவும், விருப்பத்திற்காகவும் வெட்டி அருந்துகின்றனர். இவற்றிலிருந்து மீள்சியடையும் நுங்குகள் முற்றிப் பழங்களாகி வீழ்வதினால் பனங்களி, பனாட்டு, பனங்கிழங்கு, புழுக்கொடியல், ஒடியல் என்கின்ற மிகுந்த ஊட்டச்சத்து மிக்க உணவுகளைப் பெறுகின்றோம். இதன் கழிவான ஊமல் சிறந்த எரிபொருளாகப் பயன்படுத்தப் படுகின்றது.

எமது மக்கள் இந்நற்பயன்களை அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் எமது பிரதேசத்தில் பனை வளர்த்தல் மிக அத்தியாவசியமான கடமையாக உணரப்பட வேண்டும். இக்கடமையை மேற்கொள்ள வேண்டிய நாமே வியாபாரத்திற்காக பனை வித்தான நுங்கினை வெட்டி விற்பனை செய்வது கர்ப்பத்திலே கருக்கலைப்புச் செய்வதற்கு சமமான ஒன்றாகவே கருதவேண்டும் என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# பிள்ளைகளின் கல்விக்கான சூழலை பெற்றோர்களே ஏற்படுத்த வேண்டும்

## –வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்

(வடமராட்சி)

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்விக்காக தமது விருப்பு வெறுப்புக்களை தியாகம் செய்வது அவசியமாகும் அதன் மூலமே பிள்ளைகளின் கற்றலுக்கான சூழலை வீட்டில் ஏற்படுத்த முடியும் என வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற புலோலி மெ.மி.த.க பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இப்பாடசாலை பின் தங்கிய வறுமையான சூழலில் வசிக்கும் பிள்ளைகளின் கற்றலுக்கு பாடசாலைகள் இருக்கின்ற போதிலும் எல்லா மாணவர்களுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். என்ற நோக்கில் இன்று இந்த விளையாட்டுப் போட்டி நடைபெறுகின்றது.

பொதுவாக பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் யாவும் மார்ச் மாதத்துக்கு முன்னர் நிறைவேறி தற்போது மாவட்ட மட்ட போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இப்பாடசாலையில் மாணவர்கள் தமது விளையாட்டுத்திறனை வெளிப்படுத்துவதற்கு மைதானம் இல்லை. அதனாலேயே இந்த தோட்டக்காணியில் இன்று நடத்த வேண்டியுள்ளது.

இப்பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களின் முயற்சியின் மூலமும் பங்களிப்பு மூலமும் தேவையான நிதியை திரட்டி போட்டிகளை நடத்தியிருப்பது பாராட்டத்தக்கதாகும். மேலும் மாணவர்களின் முழுமையான ஆளுமையை வளர்த்தெடுக்கும் நோக்கில் பலவகையான இணைப்பாடவிதான செயற்பாடுகளை வழங்கி வருவதுடன் பொருத்தமான கல்விச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவது சிறப்பானதாகும்.

அந்தவகையில் பிள்ளைகளை நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பதில் பெரும் பங்காற்ற வேண்டியவர்கள். பெற்றோரும், சமூகமும் தான். சிறந்த ஒழுக்கமுள்ள பிள்ளைகள் தான் சிறந்த கல்வியைப் பெற்றுக் கெள்ள முடியும் எனவே பாடசாலை சமூகமும் இணைந்து பிள்ளைகளின் கல்வியையும் பாடசாலையையும் கட்டியமைக்க ஒன்றுபட வேண்டும் என்றார். (116)

# செட்டி வீதி உப ஒழுங்கை மாநகர சபையால் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

செட்டி வீதி உபஒழுங்கை யாழ்.மாநகர சபையினால் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. சிறிய ஒழுங்கையாக காணப்படும் இவ்வீதி புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக காணப்பட்ட நிலையில் இப்பகுதி மக்கள் போக்குவரத்துக்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். அத்துடன் மழை காலங்களிலும் வெள்ளநீர் தேங்கி காணப்பட்டது.

இந்த நிலையில் இப்பகுதி மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளை இலகுபடுத்தும் முகமாக 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இப்புனரமைப்பு பணிகள் மாநகரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மறவன்புலோமத்தி நித்தர் புலம் திருவருள் மிகு பெரியதம்பிரான் ஆலய புனருத்தான பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 6.00 மணி முதல் 7.47 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணிமுதல் அடியார்களின் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் பூர்வாங்க கிரியைகள் வழிபாடுகளும் இடம்பெறவுள்ளது.

# பரமர் சங்கமம்



புகைத்தலால் வரக்கூடிய தீமைகளை செய்திகள் மற்றும் வைத்தியக் கட்டுரைகளில் சமீபகாலமாக வாசித்து வருகிறோம்.

அதிலும் இன்னுமொருவர் புகைக்கும் தழுவல் மற்றவரைப் பாதிப்பதுதான் அதிகமெனவும் அறிவுறுத்தப் பட்டு வருகிறது.

அதனால் பொது இடங்கள் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அதேவேளை வயதில் குறைந்தவர்களுக்கு புகைத்தல் பொருட்களை விற்பனைசெய்யும் வர்த்தகர்களும் நீதிமன்றம் சென்று நான் காயிரம் ரூபாவரை அபராதம் செலுத்தியமையையும் பத்திரிகைகளில் வாசிக்கிறோம்.

டெங்கு, மலோரியா நோய்களைப் பரப்பும் நுளம்பு வகைகளை அழிப்பதற்கும் இந்தப்புகையைத்தான் பயன்படுத்துகிறார்கள். மூச்சை முட்டும் படியாக அந்தப் புகை விசிறப்படுகிறது.

பொம்மை வெளி, கோபேயன் மணல் சுடலைப் பகுதிகளில் கொட்டப்பட்டு வருகின்ற குப்பைகளைக் கொழுத்தி விடுவதாலும் கண்களைத்திறக்க முடியாத அளவுக்குப் புகை காற்றில் எழுந்து சுற்றுச் சூழலில் இருக்கின்ற குடியிருப்புகளுக்கும் பரவ விடப்படுகின்றது.

இவற்றை எல்லாம் விட மிகவும் மெலிதான புகையை வெளிப் படுத்தும் சிகரட், சுருட்டு, பீடிகள் புகைப்பதால் மக்களுக்கு ஆபத்தான நோய்கள் பரவுவதாக அறிவிக்கப்படுவதுதான் விந்தை!

சமீபத்தில் நடிகர் விஜய் நடித்த ஷதுப்பாக்கி; படத்தில் அவர் சிகரட் பிடிப்பதுபோல் படமாக்கப்பட்ட காட்சி அந்தப்படத்தில் இருந்து நீக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நல்ல விசயம் இருபத்தைந்து வருடாங்களுக்கு முன்பாக ரஜனியும், கமலஹாசனும் நடித்து வெளிவந்த மூன்று முடிச்சு திரைப்படத்தில் ரஜனி சிகரட் பத்தும் ஸ்டையிலே அவருக்குப் புகழைத்தேடிக் கொடுத்தது எண்டால் மிகையில்லை.

அவ்விதம் காலத்துக்குக் காலம் பல்வேறு விடயங்களை தமிழ்த் திரைப்படங்களிலிருந்து நற் பழக்க வழுங்கங்களை சமுதாயத்தில் வளர்க்கக் கையாளப்பட்டு வந்துள்ளன.

எம்.ஜி.ஆர். நடிக்கும் படங்களில் மதுபானம் அருந்துவதை தவிர்த்து வந்ததுமல்லாமல் முதலமைச்சராக இருந்த காலத்தில் தமிழ் நாட்டில் மதுபானப் பாவனையையே இல்லாமல் செய்திருந்தார்.

அதனால் பெரிய பொருளாதாரத் தாக்கத்தை அனுபவித்து பிற் பாடுநீக்கப்பட்ட தெல்லாம் சரித்திரம் இப்போ புகைப்பிடித்தலைப் படங்களில் நீக்கி இருப்பது வரவேற்கத்தக்கது.

இதுபோல் இன்னமும் பல விடயங்கள் நீக்கப்பட்ட வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக இளவயதில் பாலியல் ஆசைகளைத் தூண்டும் காட்சிகள் தமிழ்ப் படங்களில் மிகமிக அதிகம் இதனை எப்பசெய்யப்போகிறார்கள்? இல்ல தெரியாமல் கேக்கிறன்...

# தென்மராட்சி பகுதியில் பனை மரத்திற்கு கிராக்கி

(வரணி)

தென்மராட்சி பகுதியில் தற்போது பனை மரத்துக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போது தரமான பனை 6 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது.

முன்னர் பனை தறிப்பதற்கு பாஸ் நடைமுறையில்லாதிருந்த நிலையில் பனை மரங்கள் கண்டபடி பரவலாக தறிக்கப்பட்டு வந்ததுடன் இதனால் அடுத்த இளம் சந்ததிக்கு அதன் பயன் கிடைகக்கூடிய சந்தர்ப்பம் இல்லாது காணப்பட்டது.

இந்த நிலையில் பனை வளத்தைப் பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்தினால் பாஸ் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து உரிய அனுமதி பெற்ற பின்னரே பனை மரத்ததை தறிக்க அனுமதி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. இதனால் பனை மரம் தறிப்பவர்கள் அனுமதி பெற்றே பனை தறிப்பு வேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை அனுமதியின்றி களவாக பனைமரம் தறிப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் பொலிஸாரினால் கைது செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (150)

# மணிக்கூட்டுக்கு அலங்காரம்

(குருநகர்)

யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்தின் அடித்தளத்தைச் சுற்றி அலங்கார வளைவு அமைக்கப்பட்டுள்ளது.

அதனுள்ளே பூச்செடிகள் வைத்து வளர்க்கும் நோக்கில் அதற்கான நிலம் பண்படுத்தும் பணிகளில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் மின், நீர் விநியோகங்களை மேற்கொள்ளும் விதத்தில் சுற்றுவட்ட வீதியில் கிழக்குப் புறமாக நிலமகண்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனினும் கோபுர மணிக்கூடுகள் பழுதடைந்து மூன்று மாதங்களாகத் தாண்டியும் இன்னமும் நேரங்களைக் காட்டாமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (68)

# முரசின் இன்றைய பலன்

(26.05.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 13 ஆம் திகதி. பஞ்சமி 11.04 வரை.
நட்சத்திரம் பூசம், சித்தயோகம். முன்னிரவு 08.56 வரை. ஷஷ்டி விரதம்.
இராகுகாலம் 08.52 - 10.22 வரை. சுபநேரம் 2.52 - 4.22 வரை.
எமகண்டம் 1.22 - 2.52 வரை. குளிகைகாலம் 5.52 - 7.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பொன் பெருள் சேரும், வீண் பழி கேட்டல், பிணை போவதை தவிர்க்கவும், உணவில் கவனம். |
| ரிஷபம் | சுலபமான வெற்றி, குடும்பத்தில் அன்னியோனயம், பூர்வீக சொத்துக்களால் இலாபம். |
| மிதுனம் | வீண் செலவுகள், ஆரோக்கியத்தில் பாதிப்பு; பேச்சில் நிதானம் வேண்டும், ஆதரவு கிட்டும். |
| கடகம் | வாழ்வில் மேன்மை, எதிர்பாராத செலவுகள், தேவைக்கேற்ப பணவரவு, இலாபம் குறைவு. |
| சிம்மம் | செலவுக்கு மேல் செலவு, வாக்குறுதிகளை காப்பாற்றுவீர்கள், நவீன பொருட்கள் சேரும். |
| கன்னி | கல்வியில் ஊக்கம், பூர்வீக சொத்துக்களால் இலாபம், சௌபாக்கியங்கள் கிடைக்கும். |
| துலாம் | பெரியோர் மீது பக்தி, உணவு விடயத்தில் அவதானம், பூர்வீக உடமைகளால் நன்மை. |
| விருச்சிகம் | தொழில் சிறப்பு, தேவையற்ற வழக்குகள், பணப்பரிமாற்றத்தில் கவனம், செலவுகள். |
| தனுசு | வெற்றிவாய்ப்பு, பதவி உயர்வுக்கு இடமுண்டு, மகான்களின் ஆசி கிட்டும், திட்டமிடல். |
| மகரம் | குடும்பத்தில் அன்பு, மங்களகரமான காரியங்கள் கைகூடும், பிரிந்தவர் கூடுவார். |
| கும்பம் | புதிய முயற்சிகள், விடாமுயற்சி வெற்றி தரும், எதிலும் மந்தமான நிலை, சிந்தித்து செயல்படு. |
| மீனம் | பந்தயத்தில் வெற்றி, தூர இடமாற்றம், அன்னியரால் போட்டி, உடல் நலனில் கவனம். |

# ஒழுங்கீன விசாரணை

CRICKET KENYA

கடந்த உலகக்கிண்ணத் தொடரில் இடம்பெற்றிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் ஒழுங்கீனங்கள் குறித்து கென்யா கிரிக்கெட் அணியின் வீரரொருவரை சர்வதேசக் கிரிக்கெட் சபை விசாரணை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கெதிரான போட்டி தொடர்பாகவேஇந்த விசாரணை இடம்பெற்று வருகிறது.

கடந்த உலகக்கிண்ணத்தின் 6ஆவது போட்டியாக அம்பாந்தோட்டையில்இடம்பெற்ற இப்போட்டியில் கென்யா அணி 205 ஓட்டங்களால் படுதோல்வியடைந்திருந்தது.

குறித்த போட்டியில் சந்தேகப்படத்தக்க சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தை அடுத்துகுறித்த கென்யா வீரர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும், விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த வீரரை தேசிய அணி தொடர்பாக விடயங்களில் ஈடுபடுத்த வேண்டாம் எனவும் சர்வதேசக் கிரிக்கெட் சபை - கென்யா கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தியுள்ளது.

அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை, கென்யா அணி 112 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. குறித்த போட்டியில் இடம்பெற்ற எந்த சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெறுகிறது என்பது குறித்த தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என்றபோதிலும், அப்போட்டியில் கென்யா அணி சார்பாக வீசப்பட்ட 37 அகலப்பந்துகள் (வைட் போல்) தொடர்பானதாக இவ் விசாரணை அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வழக்கங்களின் படி சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழலொழிப்புஅமைப்பு நடாத்தும் விசாரணைகள் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபை கருத்தெதனையும் வெளிப்படுத்த விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளது.

# இலங்கை அணி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணிக்கெதிரான ருவெண்ரி 20, ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர்களுக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ருவெண்ரி 20 தொடருக்கான அணியில் 14 வீரர்கள் இடம்பெற்றுள்ளதோடு, ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியில் 15 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ருவெண்ரி 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணியில் நீண்ட காலத்திற்குப் பின்னர் கௌஷல்ய லொக்குஆராய்ச்சி இடம்பெற்றுள்ளார். அவரோடு இசுரு உதானவும் நீண்ட காலத்திற்குப் பின் இலங்கைத் தேசிய அணியில் இடம்பெற்றுள்ளார். இவ்வணியில் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் இடம்பெறவில்லை.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணியில் ஜீவன் மெண்டிஸ் மீளவும் அழைக்கப்பட்டுள்ளதோடு,டில்ஹார பெர்ணான்டோ, நுவான் பிரதீப் ஆகியோரும் அணிக்குள் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியில் இடம்பெற்ற ஜுவன் மெண்டிஸ் - ருவெண்ரி 20 போட்டிகளுக்கான அணியில் இடம்பெறவில்லை. தவிர, அவுஸ்ரேலியா முக்கோணத் தொடரில் பங்குபற்றிய பர்வீஸ் மஹரூபிற்கு இத்தொடரில் இரண்டு அணிகளிலும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. அத்தோடு இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்குபற்றிய சுழற்பந்து வீச்சாளர் சுராஜ் ரந்தீவிற்கும் இரண்டு அணிகளிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

ருவெண்ரி 20 அணி:

மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்சான், குமார் சங்கக்கார, டினேஷ் சந்திமால், அன்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, கௌஷல்ய லொக்குஆராய்ச்சி, திஸ்ஸர பெரேரா, நுவான் குலசேகர, சச்சித்திர சேனநாயக்க, லசித் மலிங்க, சாமர கப்புகெதர, உபுல் தரங்க, இசுரு உதான.

ஒருநாள் போட்டி அணி:

மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்சான், குமார் சங்கக்கார, டினேஷ் சந்திமால், அன்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, ஜுவன் மெண்டிஸ், திஸ்ஸர பெரேரா, நுவான் குலசேகர, சச்சித்திர சேனநாயக்க, லசித் மலிங்க, ரங்கன ஹேரத், உபுல் தரங்க, நுவான் பிரதீப், டில்ஹார பெர்ணான்டோ.

# இறுதிப் போட்டியில் சானியா ஜோடி

(பிரஸ்ஸல்ஸ்)

பிரஸ்ஸல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றுக்கு இந்தியாவின் சானியா மிர்சா-அமெரிக்காவின் மடேக் சான்ட்ஸ் ஜோடி முன்னேறியுள்ளது.

பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் நகரில் நடைபெற்று வரும் இத்தொடரின் அரையிறுதியில் 6-3, 4-6, 10-5 என்ற செட் கணக்கில் அவுஸ்ரேலியாவின் அனாஸ்டாசியா ரொடினோவா - கேஸீ டெல்லாக்வா ஜோடியை வீழ்த்தியது.

மடேக்குடன் இணைந்து இரண்டாவது முறையாக இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார் சானியா. இதற்கு முன்பு 2009ஆம் ஆண்டு இவர்கள் இருவரும் இணைந்து சின்சினாட்டி ஓப்பனில் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

இதில் சானியா, பட்டம் வெல்லும் பட்சத்தில் இந்த சீசனில் அவர் வெல்லும் 2ஆவது பட்டமாக இது அமையும். அவருடைய ரென்னிஸ் வாழ்க்கையில் 14ஆவது பட்டமாக அமையும்.

இறுதிப் போட்டியில் எதிராளிகளுக்கு கடும் நெருக்கடி கொடுத்து கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிப்போம். அத்துடன் பிரெஞ் ஓப்பன் தொடரிற்கு இரு சிறப்பாக பயிற்சியாகவும் அமையும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார் சானியா.

# பொறுப்பான ஆட்டம் வெற்றிக்கு அடித்தளம்

(பெங்களூர்)

மும்பை அணிக்கு எதிராக பத்ரிநாத்-மைக்கல் ஹசி ஜோடியின் பொறுப்பான ஆட்டம் வெற்றிக்கு வித்திட்டது என, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மும்பை அணிக்கு எதிரான போட்டியின் வெற்றிக்கு பத்ரிநாத், மைக்கல் ஹசி அமைத்த கூட்டணி முக்கிய காரணம். இல்லையென்றால், சென்னை அணி 160 ரன்களுக்கும் குறைவாக தான் எடுத்திருக்க முடியும். இதனை மும்பை இந்தியன்ஸ் துடுப்பாட்ட வீரர்கள் எளிதாக சேஸ் செய்திருப்பார்கள். இந்த ஜோடி, அணியை சரிவிலிருந்து மீட்க உதவியது மட்டுமல்லாமல், டோனி மற்றும் பிராவோவின் அதிரடி ஆட்டத்திற்கும் வழிவகுத்தது. இதனால் 187 ரன்கள் என்ற இமாலய இலக்கை பதிவு செய்து, மும்பை அணிக்கு மனதளவில் நெருக்கடி கொடுக்க முடிந்தது. இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி யைப் பொறுத்த வரையில் எழுச்சியும், வீழ்ச்சியும் சமஅள வில் இருந்தது. கிண்ணம் வெல்லும் வாய்ப்பு எமக்கு இருந்தாலும் போட்டியின் சூழ்நிலை சில நேரங்களில் மாற்றத்தைக் கொண்டு வந்துவிடும். இருப்பினும் முதலில் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவது தற்போதைய இலக்கு எனத் தெரிவித்தார்.

# டோனியின் அதிரடி திருப்புமுனை
## தோல்வி குறித்து ஹர்பஜன் விளக்கம்

(பெங்களூர்)

சென்னை கப்டன் டோனியின் அதிரடி அரைசதம் திருப்பம் ஏற்படுத்தியது. இவரை விரைவில் வெளியேற்றியிருந்தால், போட்டி எங்களுக்கு சாதகமாக அமைந்திருக்கும் என, மும்பை இந்தியன்ஸ் கப்டன் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

சென்னை அணிக்கு எதிராக தோல்வி அடைந்து, ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில் இருந்து வெளியேறியது வருத்தம் அளிக்கிறது. எங்கள் அணி பந்து வீச்சாளார்கள், முதலிரண்டு ஓவரில் அடுத்தடுத்து இரண்டு விக்கெட் கைப்பற்றி, போட்டியை சிறப்பாக தொடக்கினர். ஆனால் இவர்கள் தொடர்ந்தும் அதை தக்கவைத்துக் கொள்ள தவறியதால், சென்னை அணி துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கியது. குறிப்பாக அதிவேகமாக அரைசதம் அடித்த சென்னை அணி கப்டன் டோனி, அதிரடியாக ரன் சேர்த்த டுவைன் பிராவோ உள்ளிட்டோர் ஆட்டத்தின் போக்கை மாற்றிவிட்டனர். இதனால் சென்னை அணிக்கு கூடுதலாக 50 முதல் 60 ரன்கள் கிடைத்தது.

எங்கள் அணியின் துடுப்பாட்டத்தின் போது சச்சின், டுவைன் ஸ்மித் விக்கெட்டை விரைவில் இழந்தது பாதிப்பை ஏற்படுத்தியது. இவர்கள் வெளியேறிய ஒரு சில ஓவரில் ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக் ஆட்டமிழப்பே, பின்வரிசையில் களமிறங்கிய துடுப்பாட்ட வீரர்களின் மனதளவில் நெருக்கடி அதிகரித்தது. மொத்தத்தில் இப்போட்டியில் சென்னை அணியைக் காட்டிலும், எங்கள் அணியின் செயல்பாடு திருப்திகரமாக இல்லாததால், தோல்வி அடைய நேரிட்டது.

இத்தொடரில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வலுவான நிலையில் இருந்தாலும் அதன் மூலம் அவர்கள் கிண்ணத்தை இலகுவாகக் கைப்பற்றிக் கொள்ள முடியாது. இருப்பினும் மேலோட்டமாகப் பார்க்கின்ற போது கொல்கத்தாவுக்கு வாய்ப்பிருப்பதாகவே தெரிகின்றது எனத் தெரிவித்தார்.

# நடாலை எதிர்கொள்வது சவால்மிக்கது

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நடாலை எதிர்கொள்வதே சவால் மிக்கது என முதல் நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிச் தெரிவித்தார். பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் எப்பொழுதும் சவால் மிக்கதொன்று. இதில் நடாலை எவர் வீழ்துகின்றாரோ அவருக்கு கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்பு இருக்கின்றது. இந்த முறை பிரெஞ் ஓப்பனில் கிண்ணம் வெல்ல வேண்டும் என்பது எனது கனவு. அந்தக் கனவு எந்தளவிற்கு கனவாகும் என்பது பற்றி எனக்கு தற்போது சொல்லத் தெரியவில்லை. இருப்பினும் முடிந்தளவு இத்தொடரில் சாதிக்க முயற்சிப்பேன் என்றார்.

# பாகிஸ்தான் வீரர்களுக்கு ஊதிய உயர்வு

(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் பாகிஸ்தான் வீரர்களுக்கான ஒப்பந்தம் வழங்கப்படும் போதே இந்த ஊதிய உயர்வு வழங்கப்படவுள்ளது. இவ்வீரர்களுக்கு 15 தொடக்கம் 25 சதவீதம் வரையிலான ஊதிய உயர்வு வழங்கப்படவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்தோடு போட்டி ஊதியங்களும் 10 தொடக்கம் 25 சதவீதத்தால் அதிகரிப்படுவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்த கிரிக்கெட் சபை அதிகாரியொருவர், ஆகவே வீரர்களுக்கு இவ்வாண்டு ஒப்பந்தத்தில் ஏராளமான நன்மைகள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வீரர்களுக்கான ஆண்டு ஒப்பந்தம் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி நிறைவடைந்திருந்த போதிலும் பல்வேறு காரணங்களினால் இதுவரை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஊதிய ஊயர்வு வீரர்களை மகிழ்ச்சிப்படுத்தும் என நம்புகின்றோம். அத்துடன் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் மீண்டும் ஆரம்பமாவதற்கான வாய்ப்புக்கள் உருவாகி வரும் நிலையில் அத்தொடர்கள் மூலம் பாகிஸ்தானுக்கு மேலும் வருமானம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் மூலம் கிரிக்கெட் வீரர்கள் முதல் கிரிக்கெட் சபைக்கும் நல்ல எதிர்காலம் உருவாகும் என்ற நம்பிக்கை உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் நேற்றைய தினம் மைதானத்திற்குச் சென்றிருந்த சீனாவின் லி நா, பெல்ஜியத்தின் கிம்கிளஸ்ட், ஸ்பெயினின் நடால் ஆகியோர் உரையாடி மகிழ்வதைக் காணலாம்.

# பற்றீசியன்ஸ், ஜொனியன்ஸ் இன்று பலப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த இறுதிப் போட்டியில் யாழ். பற்றீசியன்ஸ் அணியும் யாழ். ஜொனியன்ஸ் அணியும் மோதவுள்ளன.


ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்குபற்றின.

இருப்பினும் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்களுக்கு யாழ். சென்றல், யாழ். பற்றீசியன்ஸ், ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார் போன்ற நான்கு அணிகள் தகுதி பெற்றன.


முதலாவது அரையிறுதிப் போட்டியில் பற்றீசியன்ஸ் அணியும், யாழ். சென்றல் அணி மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி 30 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங் களைப் பெற்றது. இதில் லிவிங் ரன் 36, கிளிங்ரன் 29, நோபேட் 25, ஜெகான் 19, சுதர்சன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யசிந்தன் நான்கு, ஜொகான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 186 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி 23.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்று, 71 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் ஜெசிந்தன் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பாலேந்திரா, மயூரன் தலா 14, டோனா 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்ரன் மூன்று, நிதர்ஷன் இரண்டு, சஜீந்திரன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இதன் மூலம் பற்றீசியன்ஸ் அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.



ஜொனியன்ஸ்



பற்றீசியன்ஸ்

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 27 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காண்டீபன் ஆட்டமிழக்காது 52, விதுஷன் 29, றஜிந்தன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பகீதரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 197 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி அகிலன், காண்டீபன் ஆகியோர் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாது ஒரு சம இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 25 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பகீதரன் 24, மதுஷன் 23, மணிவண்ணன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அகிலன், காண்டீபன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியில் 35 ஓட்டங்களால் வெற்றி பெற்ற ஜொனியன்ஸ் அணி இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது.

யாழ். மாவட்டத்தின் இரண்டு பெரும் அணிகள் இன்றைய தினம் இறுதிப் போட்டியில் மோவுள்ளமை கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரு விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அன்ரனீஸ், பொம்மேர்ஸ் இறுதிப் போட்டிக்குத்தகுதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட வடமராட்சி பிரதேசத்திற்குட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு மணற்காடு சென். அன்ரனீஸ் மற்றும் வதிரி பொம்மேர்ஸ் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

அணிக்கு 11 பேர் கொண்ட இக்கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் அண்மையில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதன் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மணற்காடு சென். அன்ரனீஸ் அணியும், வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியும் மோதின. ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை இரு அணி வீரர்களும் வெளிப்படுத்தினர். மிகவும் விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற இப்போட்டியில் மணற்காடு சென். அன்ரனீஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் அணியும் கம்பர்மலை யங்கமன்ஸ் அணியும் மோதின. ஆட்டத்தின் தொடக்கத்திலிருந்தே பொம்மேர்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. பொம்மேர்ஸ் அணி வீரர்களின் வேகமான ஆட்டத்திற்கு முன்னால் கம்பர்மலை யங்கமன்ஸ் அணி மண்டியிடவே செய்தது. இறுதியில் பொம்மேர்ஸ் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (12)

## வீதி அபிவிருத்தி சபையின்

# வருடாந்த விளையாட்டு இன்று துரையப்பாவில்

(யாழ்ப்பாணம்)

மத்திய வீதிஅபிவிருத்தி அதிகார சபை நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா இன்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர்களும் இந்த விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இன்று நடைபெறும் இப்போட்டி நிகழ்வில் மத்திய வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் உட்பட உயர் அதிகார்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வை அனைத்துத் தரப்பினரும் நேரில் வந்து கண்டுகளிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள அணிகளுக்கிடையே நடத்தப்படவுள்ள பிரிவு மூன்றுக்கான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இன்று வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் அரியாலை சென்றல் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி மோதவுள்ளன.

இச்சுற்றுப் போட்டித் தொடரில் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இப்போட்டித் தொடரில் யாழ். கிரிக்கெட் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற பல முன்னணி அணிகள் பங்கு கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.




யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணியினர், பொறுப்பாசிரியர், பயிற்றுனருடன் நிற்பதைக் காணலாம். (படப்பிடிப்பு: சுரேஸ்)

> **“பெருந்திரள் மக்கள் பாரம்பரியமான - முரண்தன்மையை அடிப்படைப் பொருளாகக் கொண்ட ஊடகப் போக்கையே ஆதரிக்கிறார்கள். அவர்களுக்கு அது பழகிவிட்டது. அது தங்களுக்கு நல்லதல்ல என்று தெரிந்தாலும் அவர்கள் அதையே பின்பற்றுகிறார்கள்.”**

# சனங்களின் அவலத்திற் பிழைப்பை நடத்தும் ஒரு கொடுமை!



நம் ஊடகத்துறையில் குறிப்பிடத்தக்க எந்த வளர்ச்சியும் ஏற்படவில்லை. அதே அணுகுமுறைகளில்தான் எல்லா ஊடகங்களும் இயங்குகின்றன. அந்தந்தத் தரப்புகளின் ஏவற் சக்திகளைப்போலவே ஊடகங்கள் தொழிற்படுகின்றன. பெரும்பாலும் எல்லாமே பிரச்சார அலகுகளாகவே தங்களைக் கட்டமைத்துள்ளன.

போருக்குப் பிந்திய நிலையில் எவ்வாறு சமூக நிலைமைகளை அணுகுவது? எப்படி மக்களை அவர்களின் கடந்த காலப் பாதிப்புகளிலிருந்தும் காயங்களிலிருந்தும் மீள வைப்பது? போரினால் பாதிப்புக்குள்ளானவர்களின் உளச் சமனிலையை எவ்வாறு பேணுவது? போன்ற அடிப்படையான விசயங்களில் பல அமைப்புகளும் ஊடகவியலாளர்களுக்கான பட்டறைகளை நடத்தியிருக்கின்றன. இன்னும் நடத்தி வருகின்றன.

பட்டறைகளுக்கு வருவோர் அங்கே வழங்கப்படும் சான்றிதழையும் கொடுப்பனவையும் வாங்கிக் கொள்ளவே வருகிறார்கள். மற்றும்படி அங்கே கூறப்படும் விசயங்களை அந்த மண்டபங்களிலேயே விட்டிட்டு வெளியேறுகிறார்கள்.

ஆகவே, தாங்கள் அறிவதற்கு மாறாகவே பின்னர் இந்த ஊடகவியலாளர்கள் செயற்படுகிறார்கள்.

அரசியற் கட்சிகளுக்கும் இலங்கையின் ஊடகங்களுக்குமிடையில் பெரிய வேறுபாடெல்லாம் இல்லை. சில மாற்று ஊடகங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றுக்குப் பொது வெளியில் அதிக வரவேற்பில்லை. பெருந்திரள் மக்கள் பாரம்பரியமான - முரண்தன்மையை அடிப்படைப் பொருளாகக் கொண்ட ஊடகப் போக்கையே ஆதரிக்கிறார்கள். அவர்களுக்கு அது பழகிவிட்டது. அது தங்களுக்கு நல்லதல்ல என்று தெரிந்தாலும் அவர்கள் அதையே பின்பற்றுகிறார்கள்.

ஆகவே ஊடகங்களும் அந்தப் போக்கையேஆதரித்து வளர்த்துக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு எப்போதும் சந்தை முக்கியம். சந்தையைப் பற்றிச் சிந்திப்பவர்களால் ஒரு போதுமே சீரியஸான நல்ல காரியங்களைப் பற்றிச் சிந்திக்க முடியாது. இதற்கு நல்ல உதாரணம், தமிழ்ச் சினிமா.

சந்தை வாய்ப்பையும் பெருந்திரளின் ஆதரவையும் தக்க வைக்க விரும்பும் தமிழ்ச்சினிமாவின் மலினமான உத்திகளை நீங்கள் நன்றாக அறிவீர்கள். பெரும்பாலான தமிழ்ப்படங்கள் ஓரே மாதிரியானவை. அங்கே மலினமான உத்திகளோடு வில்லன் - கதாநாயகன் போன்ற முரணும் பயன்படுத்தப்படுகின்றன. இங்கே ஊடகத்துறையிலும் ஏறக்குறைய அதே நிலைதான். அரசியல் முரண்களை அந்த இடத்தில் வைத்துக் கையாள்கின்றனர் ஊடகவியலாளர்கள்.

அதற்கு இங்கே இனவாதமும் இனப்பிரச்சினையும் பயன்படுத்தப்படுகிறது.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஈழகேசரி என்ற பத்திரிகை எவ்வளவு சமூகப் பொறுப்போடு வெளிவந்தது? அரசியலிலும் மக்களின் வாழ்க்கை நோக்கிலும் இலக்கியத்திலும் அது கொண்டிருந்த அக்கறையின் பாதியளவிற்கூட இன்றைய பத்திரிகைகள் இல்லை. ஆனால், அப்போது ஊடகத் துறையைப் பற்றிய கற்கைகள் - கோட்பாட்டு விளக்கங்கள் எதைப் பற்றியும் அறியாமலே அவ்வளவு செழுமையாக பத்திரிகையை வெளியிட்டார்கள்.

ஈழகேசரியின் முதல் அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டதை இங்கே கவனிக்க வேண்டும்............. பத்திரிகைகளை நடத்துவோர் தேச நன்மைக்காக வேண்டியவைகளைக் காய்தல் உவத்தலகற்றி, நடுவு நிலையோடும் கால தேச வர்த்தமானங்களுக்கேற்றவாறு எடுத்துரைத்தல்வேண்டும்.தாம்நினைத்த செயலை முடிப்பதற்காகவோ அல்லது ஒரு சிலர் மீது கொண்ட குரோதங் காரணமாகவோ, அன்றிச் செல்வச் செருக்காலோ, அறியாமையாலோ ஒருவரை ஒருவர் தூசித்தலும் சாதி மத சம்மந்தமான விதண்டாவாதங்கள் சொல்வதும் ஏனையோருடைய மனதைப் புண்படுத்துவதுமான வீண் செயல்களிற் காலத்தைக் கழிக்காது, அறநூல்வழி நின்று திறமையோடும் ஒத்துழைப்பதே சாலச்சிறப்புடையதாம்என்று அதிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழகேசரி முடிந்தவரையில் இந்த அடிப் படைடையப் பராமரித்தது.

ஆனால், இன்றைய நிலை?

சற்று வித்தியாசமாக, யதார்த்தத்தோடு இணைந்து செயற்பட விரும்பும் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஒரு தடவை தங்களுடைய ஆசிரிய பீடத்தினருக்கு விளக்கமளித்த விசயத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தம் என நினைக்கிறேன்.

“உண்மை என்ன என்று எங்களுக்குத் தெரியும். எதெல்லாம் சரியென்றும் எங்களுக்கு விளங்கும். ஆனால், அதற்காக நாங்கள் மற்றவர்களை விட்டு விலகித் தனித்து நிற்க முடியாது. அவர்கள் ஓடுகிற வழியில்தான் நாங்களும் ஓடவேணும். ஊரோடு சேர்ந்து ஓடாது விட்டால் எங்களை ஒதுக்கி விடுவார்கள். ஆகவே மற்றப் பத்திரிகைகள் என்ன செய்கின்றனவோ அதைத்தான் நாங்களும் செய்ய வேண்டியுள்ளது” என்று அந்தப் பத்திரிகை ஆசிரியர் தெரிவித்தார்.

இதைச் சொல்லும்போது அவருடைய மனச்சாட்சிக்கும் அறிவுக்கும் இது தவறென்று தெரிந்திருக்கிறது. ஆனால் அவரால் புதிய பாதையொன்றைப் பற்றிச் சிந்திக்க முடியவில்லை. ஓடுகின்ற பாதையில் சேர்ந்து ஓடுவதே அதிக சிரமமற்றது என்று கருகிறார் அவர்.

இதைப்போல இன்னொரு முதன்மைப் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை அண்மையில் ஏற்றிருந்த இளைய பத்திரிகையாளர் ஒருவர் ஒரு உரையாடலின் போது சொன்னார், “சனங்கள் எதை விரும்புகிறார்களோ அதைத்தான் நாங்கள் கொடுக்க வேணும். சனங்கள் எங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்காகவே அவர்கள் எங்களுக்குவிளம்பரங்களைத் தருகிறார்கள். எங்களின் பத்திரிகையை வாங்குவதற்கு அவர்களிடம் ஏதோ ஒரு எதிர்பார்ப்பிருக்கு. எங்களிடம் எதையோ எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அதை நாங்கள் கொடுக்கத்தான் வேணும். அவர்களுடைய எதிர்பார்ப்பை நாங்கள் நிறைவேற்றத்தான் வேணும்” என்று.

ஈழகேசரிக் காலத்துக்கும் தற்போதைய நிலைக்குமிடையில் எவ்வளவு இறக்கம் என்று பார்த்தீர்களா? ஏறக்குறைய வணிக ரீதியாகச் சிந்திக்கும் தமிழ்ச் சினிமாத் தயாரிப்பாளர்களைப் போலவேஇவர்களும் சிந்திக்கிறார்கள்.

எப்போதும் எதிர்த்தரப்பு ஒன்றினைச் சாடியும் தாக்கியும் வரும் செய்திகள் இவர்களுக்கு இதமூட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால், எரிகின்ற நெருப்புக்குத் தொடர்ந்து எண்ணெயை ஊற்றிக் கொண்டேயிருக்கலாமா? இப்படி எண்ணெய் ஊற்றும்போக்கை வளர்த்தபடியாற்தானே தமிழர்கள் இரத்தம் சிந்தும் ஒரு அரசியலுக்கு வரவேண்டியிருந்தது. இந்த நிலைதான் சிங்களத் தரப்பிலும்.

இலங்கையில் தமிழ் சிங்கள ஊடகங்கள் எதுவும் இந்தக் குறைபாட்டுக்கு விலக்கல்ல.

யுத்தத்தின் படிப்பினைகளை எந்தத் தரப்பும் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அரசியற் கட்சிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், படித்தவர்கள், மதத்தலைவர்கள் யாரிடமும் மாற்றங்களைக் காணவேயில்லை. இந்த நிலையில் எப்படி அரசிடமும் அதிகார அமைப்புகளிலும் மாற்றங்களைக் காண இயலும்?

முழு நாடுமே அச்சுறுத்தலுக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. வெளிச்சக்திகள் இலங்கையைத் தங்களுக்கான போட்டிக் களமாக்குவதற்கு-ஒரு விளையாட்டுத் திடலாக்குவதற்காகப் போட்டியிடுகின்றன. அரசியல் ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம், கருத்து நிலை ஆதிக்கம், கலாசார ஆதிக்கம் என்று தொடர்ந்து பல ஆதிக்கங்கள் இலங்கையின் மீது ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதெல்லாம் எவ்வளவு ஆபத்தான காரியங்கள்? பலவீனப்பட்டிருக்கும் நாட்டிலும் பலவீனப்பட்டிருக்கும் சமூகங்களிடமும் பலவீனமான மனிதர்களிடத்திலும் வெளித்தாக்கங்கள் இலகுவாக ஏற்பட்டுவிடுவது இயல்பு.

ஆனால், இதையெல்லாம் யாருமே புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதற்காக இவர்கள் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. எரிகின்ற நெருப்பிலே தங்களைக் குளிர்காய வைத்துக் கொள்கிறார்கள்.

வரலாற்றிலிருந்து எதைக் கற்றுக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே எங்களின் பயணங்களும் வெற்றி தோல்விகளும் அமையும் என்று சொல்வார்கள்? நாங்கள் எதைக் கற்றுக்கொண்டிருக்கிறோம்? ஏனென்றால், இன்னும் பழைய வழித்தடங்களிலேயே சுற்றுவதைத் தவிர வேறு எதையும் தெரியாமலிருக்கும் நிலையே காணப்படுகிறது.

பின்னடைவைச் சந்தித்த சமூகங்கள், போரில் ஈடுபட்ட தரப்புகள் எல்லாம் புதிய திசைகளை நோக்கியே பயணித்துள்ளன. போர் அப்படியான ஒரு புரிதலையும் பாடத்தையும் மனிதர்களுக்குக் கொடுக்கும். போரின் பின்னர் அப்படியான ஒரு தரிசனம் மனிதனுக்குக் கிடைக்கிறது.

இதற்கு உலக வரலாற்றில் நிறைய உதாரணங்களுள்ளன.

மக்களை விழிப்படைய வைப்பதில், அரசியலிற் செயற்படுவோரை நெறிப்படுத்தி ஒழுங்கு படுத்துவதில் ஊடகங்களுக்கே அதிக பங்குண்டு. எனவேதான் அவை நாட்டின் பிரதான சக்திகளில் ஒன்றென மதிக்கப்படுகின்றன. ஊடகவியலாளர்களுக்கான மதிப்பும் இதன்பாற்பட்டதே. ஆனால், சனங்களை அவையே இன்று மாய வலைகளால் கட்டி வைத்துள்ளன. இதற்குச் சமாந்தரமாக அரசியல் நிலவரம் உள்ளது. எல்லாமே கடுமையான - அதே நிலைப்பாடுகளுடன்தான் இருக்கின்றன. ஆகவே நிலைமை யுத்தகாலத்தை ஒத்ததாகவே இருக்கிறது.

கடினமான நிலை மாறாத வரையில் எதிலும் நெகிழ்ச்சியிருக்காது. யுத்தத்தின் போது மெல்ல மெல்ல மூடப்பட்டு வந்த சகல வெளிகளையும் மெல்ல மெல்லத் திறக்க வேண்டியது ஊடகங்கள், அரசியற் கட்சிகள், மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றின் பணியாகும்.

ஆனால் இவை எதுவும் அந்தப் பணியைச் செய்யவும் இல்லை. அதைப் பற்றிச் சிந்திக்கவும் இல்லை. மேலும் யுத்தகாலத்திலிருந்ததைப் போல, இனங்களுக்கிடையில் இருக்கும் முரண்நிலையைப் பயன்படுத்தித் தமது நலன்களைப் பேணவே முற்படுகின்றன.

அமைதியைப் பற்றிக் கதைத்துக்கொண்டே அமைதிக்கெதிராகச் செயற்படுவது என்று இதைச் சொல்லலாம். முன்னர் சமாதானத்தைப் பற்றியும் யுத்த நிறுத்தத்தைப் பற்றியும் கதைத்துக்கொண்டே யுத்தத்துக்கான சூழலை உருவாக்கிய அனுபவம் இவற்றிற்குண்டு. ஆகவே சனங்களின் அவலத்திற் பிழைப்பை நடத்தும் ஒரு கொடுமை இது எனலாம். வரலாற்றைப் பின்னோக்கி இழுக்கும் காரியம் இது.

இந்த நிலையில், அமைதி கிட்டாது. அமைதியை நோக்கிச் செல்லாத நிலைமை என்பது கடினமானதாகவே இருக்கும். இந்தக் கடின நிலையில் மனித உரிமைகள் கேள்விக்குரிய ஒன்றே. ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் போன்ற பலவும் இன்னும் நெருக்கடி நிலையிற்தான் உள்ளன. இந்த நிலையை மாற்றுவதற்கு போருக்குப் பிறகு யார் முறையாகச் செயற்பட்டிருக்கிறார்கள்? அங்கங்கே முனைப்புகள் உள்ளன. ஆனால் அவற்றைப் பேரியக் கமாக - மக்களின் எழுச்சியோடு அரங்கிற்குக் கொண்டு வருவதற்கு யாருமே இல்லை.

இலங்கையின் இன்றைய இறுக்கமான நிலைமைகளுக்காகவோ அல்லது அதை எதிர்த்ததற்காகவோ எந்த அரசியற் தலைவர்களும் சிறைப்பிடிக்கப்படவில்லை. அல்லது மக்களோடு யாரும் போராடுவதற்காக வீதியிலிறங்கவில்லை.

ஆகவே நிலைமைகள் கடினமானவையாகவே உள்ளன. ஆனாலும் இந்தக் கடினமான நிலைமையை உடைக்க வேண்டும். அது முடியும். ஒரு கட்டம்வரையில் முன்னகர்ந்து விட்டால் பின்னர் அது வழியைத் திறந்தும் விடும்.

நாட்டை இலகு படுத்துங்கள். நெகிழ்ச்சியே இன்றைய உலகின் சிறந்த அணுகுமுறை. இது பிள்ளை வளர்ப்புக்கும் பொருந்தும். குடும்ப உறவுக்கும் பொருந்தும். நாட்டுக்கும் பொருந்தும். அரசியலுக்கும் பொருந்தும்.

மூடப்பட்ட அமைப்புகளின் - அணுகுமுறைகளின் - காலம் முடிவடைந்து விட்டது.

- நன்றி: pulveli.blogspot.com

# பொலநறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட அதிகளவான தமிழ் சாசனங்கள்

(கொழும்பு)

இலங்கை மக்களுக்கு தொல பொருட்கள், கலை, கலாசாரம், பாரம்பரியம் தொடர்பான போதிய அறிவு கிடையாது என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை பாடத்திட்டத்தில் வரலாறுப் பாடம் இரு மொழிகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. எனினும் இப்பாடத்தில் அதிகளவான மாணவர்கள் சித்தியடைய தவறுகின்றனர்.

பொலநறுவையில் அமைந்திருக்கும் மூன்று ஆலயங்களில் உள்ள வாசிக்கப்படாத கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக ஊடகங்களுக்கு தகவல் வழங்கிய போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலநறுவையில் மூன்றாம் ஐந்தாம் சிவாலயம் மற்றும் நான்காம் விஷ்ணு கோவில் என்பவற்றில் இச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச்சாசனங்கள் சுமார் 100 வருங்களுக்கு முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. கால ஓட்டத்தில் எழுத்துக்கள் இயற்கை காரணிகளால் சிதைவடைந்துள்ளன. எனினும் நுட்பமான முறையில் படிமம் எடுக்கும் பொருட்டு அவற்றில் எழுதப்பட்டிருப்பவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

அதிகளவான தமிழ் சாசனங்கள் திருகோணமலையிலேயே இருப்பதாக தற்கால சான்றுகள் உள்ளன. ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சாசனங்களை வாசிப்பதன் மூலம் பொலநறுவையில் அதிகளவான தமிழ் சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன என நிரூபிக்க முடியும்.

சாசனங்களை வாசித்து வெளியிடுவதற்கான முயற்சிகள் மிக விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச வைத்திய அதிகாரிகள் சங்க பணிப்பகிஷ்கரிப்புக்கு அனுமதி

போக்குவரத்து கொடுப்பனவுகளை அதிகரிக்ககோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்திருந்த பணிப் பகிஷ்கரிப்பை இடைநிறுத்தும் வகையில் பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நீக்கியுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இருதய நோயாளி ஒருவர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கு குறிப்பிட்ட தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

இதேவேளை குறித்த மனுவை செய்த அஜித்த சேனக என்ற நோயாளியின் கட்டிலுக்குரிய மருத்துவ குறிப்பு அட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நீதிமன்றில் நேற்று நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்திருந்தது.

இதற்கமைய குறித்த குறிப்பு அட்டையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து நீதிமன்றம் பணிப் பகிஷ்கரிப்புக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை நீக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

# கஞ்சாவுடன் பெண் கைது

பொத்துவில் ஹிராநகர் பிரதேசத்தில் கஞ்சாவுடன் பெண் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினை அடுத்து நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் ஹிராநகர் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றை சோதனை யிட்ட போது 8 கிராம் கஞ்சாவுடன் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் பொத்துவில் நீதவான் நீதிமன் றத்தில் ஆயர்படுத்தப்பட்டுள்ள்னர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்புள்ள பள்ளிவாசல் தொடர்ந்தும் அதே இடத்தில்

## ஜனாதிபதி உறுதி



தம்புள்ள பள்ளிவாசல் ஒருபோதும் அகற்றப்படமாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸிற்கு உறுதிமொழி வழங்கியுள்ளார் என அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

தம்புள்ள பள்ளிவாசல் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கொண்டு வந்தபோதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பள்ளிவாசலின் அனைத்து நடவடிக்கைகளும் குறித்த இடத்திலேயே தொடர்ந்து இடம் பெறும் என அமைச்சர் றிசாட் தெரிவித்தார்.

குறித்த பள்ளிவாசலை தற்போதுள்ள இடத்திலிருந்து அகற்ற ஒருபோது அகில இலஙகை முஸ்லிம் காங்கிரஸ் அனுமதிக்காது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மீண்டும் மழை

தென்மேற்கு பருவ பெயர்சி காரணமாக, மேல் மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பலபகுதிகளில் இடியுடன் கூடிய மழை காணப்படும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மழையின் போது அதிக காற்றும் காணப்படும். இதற்கிடையில் இடி மின்னல் தாக்கங்களில் இருந்து பொது மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் காலநிலை அவதான நிலையம் பொது மக்களை கோரியுள்ளது.

# நெல் கொள்வனவு விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)



நெல் கொள்வனவு விலையை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாக கமநல சேவை மற்றும் வனவிலங்குகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்வனவு செய்யும் விலையை விரைவில் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அடுத்த போகத்தில் நெல் விலையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

# தேவநாயகம் மண்டபத்தில் தீ

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள தேவநாயகம் மண்டத்தில் திடீரென நேற்று முன்தினம் மாலை தீப்பிடித்துள்ளது. இத்தீ பரவியமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. மண்டபத்தில் போடப்பட்டிருந்த திரைச்சீலை உட்பட அங்கிருந்த சில தளபாடங்கள் எரிந்து சேதமாகியுள்ளன.

இம்மண்டபத்தில் எற்பட்ட தீயினையடுத்து அங்குவிரைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், தீ மண்டபத்தின் ஏனைய பகுதிகளுக்கு பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது .

சம்பவ இடத்திற்கு விரைந்த மட்டக்களப்பு தலைமையக பொறுப்பதிகாரி எம்.திஸாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஆரம்பக் கட்ட விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

இத்தீப்பிடிப்பு சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு இம்மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இத்தாலிய பூமியதிர்வினால் 25 இலங்கையர்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

இத்தாலியில் இடம்பெற்ற பூமியதிர்வினால் சுமார் 25 இலங்கையர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இதனால் இடம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கப்பட்டுள்ளதை இத்தாலியிலுள்ள இலங்கை தூதுவராலயம் உறுதிப்படுத்தியதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தேவையான உதவிகளை வழங்குவதற்காக பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள இலங்கை சமூகத்தினர் மற்றும் இத்தாலியின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றுடன் இலஙகை தூதுவராலயம தொடர்நது தொடர்புகளை பேணி வருகின்றது என வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்தது.

http://www.mea.gov.lk/images/stories/pdf/rome-list%20affected%20-24%20may12.pdf என்ற இணையத்தளத்தின் ஊடாக இத்தாலியில் இடம்பெற்ற பூமியதிர்வினால் இடம்பெயர்ந்துள்ள இலங்கையர்களின் பெயர்களை பார்வையிட முடியும்.

# எரிபொருள் விலையை குறைக்க அரசு முயற்சி

(கொழும்பு)

நட்டம் ஏற்படாத பட்சத்தில் எரிபொருளின் விலயை குறைக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ள நிலையில், அதனை இலங்கையில் குறைப்பது நட்டத்தை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நிலத்தில் ஊற்றவேண்டிய பாலுக்கு 50 ரூபா விலை நியாயமானது

(கொழும்பு)



நுவரெலிய மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பால் விநியோகிக்கும் திட்டத்தை தொடரச்சியாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாற்பண்ணையாளர்களிடமிருந்து நேரடியாக பாலை கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலளார் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் முகவர்களிடமிருந்து பாலை கொள்வனவு செய்யாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலக பிரிவு பாடசாலைகளுக்கு பால் விநியோகிப்பதை பால் சேகரிப்பு முகவ்ர்கள் இடைநிறுத்தியுள்ளனர்.

பாடசர்லைகளுக்கு விநியோகிக்கப்படும் பாலுக்கான விலை திருப்திகரமாக இல்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், கீழே ஊற்றுவதற்கு நேரிட்ட பாலுக்காக வழங்கப்படுகின்ற 50 ரூபா என்ற விலை மிகவும் நியாயமானது என நுவரெலியா மாவட்ட செயலளார் குறிப்பிடுகிறார்.

பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் ஒரு லற்றர் பாலுக்கு 65 ரூபா என்ற நியாயமற்ற விலை வழங்கப்படமாட்டாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் சவுக்கடி கடற்கரையில் பெரிய திமிங்கிலமொன்று வியாழக்கிழமை மாலை கரையொதுங்கியுள்ளது. இத்திமிங்கிலம் சுமார் 55 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்டதாகவுள்ளது. கரையொதுங்கியுள்ள இத்திமிங்கிலத்தை பார்வையிடுவதற்காக பெருந்திரளான மக்கள் வந்தவண்ணமுள்ளனர்.

# மகிந்தவின் “பொன்சேகா வியூகம்!”

கட்சி அரசியலில் முடிவெடுப்பதற்கான உரிமையை கோரி நிற்கும் சிங்கள புரட்சிக் குழுவினரின் அச்சுறுத்தலால் எந்தப்பக்கம் போவது எனத்தெரியாமல் குழம்பி நின்ற விக்கிரமசிங்கவுக்கு, அரசின் இப்போதைய கஷ்டங்கள் ஒரு நல்வாய்ப்பினை வழங்கியுள்ளது. அவர் தனது கட்சியின் சிங்கள புரட்சிக்குழுவினரை ஒருபக்கம் ஒதுக்கி விட்டு தன்னுடைய நடவடிக்கைகளை இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் (ரி.என்.ஏ) இணைந்து நடத்தி வருகிறார். யாழ்ப்பாணத்தில் நடத்திய மே தின பேரணி மூலம் ரி.என்.ஏ யுடன் இணைந்து பணியாற்றுவதற்கான ஒரு வெளிப்படையான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்.

தென்பகுதியில் தொழிற்சங்கங்கள் அணிதிரள்கின்றன, ஊதியம் பெறும் தொழிலாளர்கள் பொருளாதார பிரச்சினைகளால் ஆட்சிக்கு எதிராக சவால்விடுத்து நிற்கிறார்கள். வாக்கு வங்கிகளை கட்டியமைப்பதற்கு வெளிப்படையாகவே எதிர்ப்புகள் தோன்றியுள்ளன. இதற்கான சரியான வழியாக ஜனாதிபதி ராஜபக்ஷ புரிந்து வைத்திருப்பது, முழு நாட்டையும் சில மாதங்களுக்கு ஒரு தேர்தல் மனநிலையில் வைத்திருப்பதுதான் சிறந்த வழி என்று.

இது தொழிற்சங்கங்கள் ஊதிய உயர்வு கோரி நடவடிக்கைகள் மேற்கொள்வதை தடுப்பதோடு, விக்கிரமசிங்கவின் ஐ.தே.க இப்போது ரி.என்.ஏ உடன் இணைந்து பணியாற்றுகிறது என்று தெற்கினை விக்கிரமசிங்கவுக்கு எதிராகத் திருப்புவது மூலம் ஆட்சியை வலுப்படுத்திக் கொள்ளவும் உதவும். நல்லது! இந்த தெரிவினை நோக்கித்தான் ஜனாதிபதி வேலை செய்கிறார் போலத் தெரிகிறது, இதைத்தவிர அவர் ஏறுவதற்கு ஏற்ற வேறு எந்த அரசியல் மேடையும் கிடையாது.

இருந்தாலும் இரண்டாவது பதவிக் காலத்துக்கான சத்தியப்பிரமாணம் 2011நவம்பரில் இடம்பெற்றதால், 2015இற்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்துவதை அரசியலமைப்பு அனுமதிக்காது. எப்படியாயினும் ராஜபக்ஷ தனது ஆட்சியின் செல்வாக்கினை பரிசோதிக்காமல் இருக்கப்போவதில்லை. அதனால் அவர் அநேகமாக இப்போதிருந்து ஆறு மாதங்களுக்கிடையில் கிட்டத்தட்ட 2013ஆம் ஆண்டளவில் ஒரு பொதுத் தேர்தலையாவது நடத்துவதற்காக கணக்குப் போட்டிருப்பார்.

உண்மையில் வாக்காளர்களின் இப்போதைய மனநிலையை அறிந்து கொள்வதற்காக அவர் மாகாணசபை மட்டத்தில் பரிசோதனை மேற்கொள்ளவும் இப்போது முயற்சி செய்யலாம், ஆனால் அது அவரது பக்கம் சார்பாகவே இருக்கும், எனவே தேசிய மட்டத்தில்தான் அவர் முயற்சிக்க வேண்டும். ஆனால் அதற்கு தாக்குதலின் வேகத்தை குறைக்கும் ஒரு தாங்கி அவருக்கு தேவைப்படும், அதாவது தென்பகுதி சிங்களவர்கள் பக்கமிருந்து தனக்கு எதிரான வாக்குகள் ஐ.தே.க வுக்கு செல்வதைத் தடுப்பதற்குப் பயன்படுத்துவதற்காக.

மிகவும் பழமையான முறையில் கணக்கிட்டால், வாழ்க்கைச் செலவு முதற்கொண்டு சட்டம் ஒழுங்கு வரையான எண்ணற்ற பிரச்சினைகள் காரணமாக சமூகத்தில் அதிருப்தி பெருகி வருவதால் அவரது பொது சன ஐக்கிய முன்னணி ஏப்ரல் 2010இல் பெற்ற 60.3 விகித வாக்குகளிலிருந்து இப்போது குறைந்தது 52 முதல் 55 விகிதம் வரையான வாக்குகளைப் பெறமுடியும். ஐ.தே.க. தனது 29.3 விகிதம் மற்றும் ரி.என்.ஏ யின் 2.9 விகிதத்தையும் சேர்த்துப் பெறும். ஆனால் ஐ.தே.க. 35 விகிதத்துக்கு முன்னேறி, மற்றும் ரி.என்.ஏ 3.5 விகிதத்தையும் பெற்றால் எப்படியிருக்கும்?

அப்போது பொதுசன ஐக்கிய முன்னணி தனது ஆசனங்களில் அநேகமாக தற்போது அதனிடமுள்ள 144 ஆசனங்களில் 24 ஆசனங்களை இழந்து மொத்தம் 120 ஆசனங்களை பெறவேண்டிய நிலைக்கு தள்ளப்படும். அப்போதும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம்தான் அமையும். ஆனால் நாடாளுமன்றில் மிகவும் பலவீனமான ஒரு அரசாங்கமாக அது இருக்கும்,

இந்த இடத்தில்தான் ராஜபக்ஷ வரையறை செய்த அரசியல் நிபந்தனைகளுக்கு அமைவாக மீண்டும் அரசியலில் கைக்கு அடக்கமானவராக பொன்சேகா இடம் பெறுகிறார். 2010 தேர்தலில் ஜே.வி.பி மூலம் தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகளில் முழு இராணுவச் சின்னங்களுடன் சலாம் போட்டு நகரின் அநேக சுவர்களில் காட்சி தந்த போதும் அவரால் இராணுவ வெற்றி வீரராக முடியவில்லை. அவர் சிறையிலிருந்து ராஜபக்ஷவின் எதிரிகளின் நாயகனாக அவரது வழக்கமான கவர்ச்சிகரமான ஊடக குறிப்புகளோடு வெளியே வரமாட்டார். பதிலாக அவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை பெற்று, தனியார் வைத்தியசாலையிலிருந்து வெளிவருவார்.

ஜனாதிபதி விரும்பியபடி அவரது மகள்களில் ஒருவர் எழுதிய கடிதப் பிரகாரம், அவரது குடும்பத்தினரது முறையீடு காரணமாகவே அவர் விடுதலை செய்யப்படுகிறார். எப்படியிருந்தாலும், மொத்தத்தில் அது ஒரு ஜனாதிபதி மன்னிப்பு, அனோமா பொன்சேகாவின் அறிவிற்கு எட்டிய வகையில் ரிரான் அலஸ் பேரம்பேசி பெற்றது.

அப்படியான ஒரு பொன்சேகா வெளியே வரவேண்டுமானால் அதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அதன் பின்னர் ஐ.தே.க. வின் உட்கட்சி எதிர்ப்பாளர்கள் பொன்சேகாவை சுற்றி வளைத்துக்கொண்டு ஒரு சிங்கள பிரச்சாரத்துக்காக அவர்மீது சவாரி செய்ய முயலுகிறார்கள். ராஜபக்ஷ தன்னைவிட்டு விலகிச் செல்லும், வெறுப்பும் விரக்தியுமான தென்பகுதி வாக்குகளை, ரணில் விக்கிரமசிங்க



பெறுவதை தடுப்பதற்காக, பொன்சேகா, சஜித் பிரேமதாஸ, மற்றும் கரு ஜயசூரிய தலைமையிலான புதிய ஜனநாயக தேசிய முன்னணியை களத்தில் இறக்க நிச்சயம் முயற்சி செய்வார்.

பொன்சேகா, சஜித் பிரேமதாஸ, மற்றும் கரு ஜயசூரிய தலைமையிலான புதிய ஜனநாயக தேசிய முன்னணி இப்போது வர்ணம் பூசிய புதிய கட்டிடம், ஒரு நியாயமான தலைமையின் கீழ் செயற்படுகிறது என கணிக்கப்பட்ட அதற்கு ஐ.தே.கவை எதிர்ப்பதற்கும், தெற்கில் உள்ள ஐ.தே.க.வுக்கு எதிரான பிளவுபட்ட வாக்குகளை கோரவும் உரிமை உண்டு. ஜேவிபி இதில் இல்லாமலிருந்தால் 2010இல் அது பெற்ற 5.4 விகிதத்திலிருந்து குறைந்தது 3.5 விகிதத்தை இந்த அணி பெறுவதுடன், அதிருப்தி சிங்கள வாக்குகளில் 6 முதல் 7 விகிதம் வரையான வாக்குகள் மரபுவழி தலைமையிலான ஐ.தே.க.வுக்கு செல்வதையும் தடுக்கும்.

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒரு சிங்கள கூட்டு ஒப்பந்தத்துக்காக, பொன்சேகாவை மீளத் தயார்படுத்தும் ராஜபக்ஷவின் திட்டம் வேலை செய்யுமானால், அது அவரது சூதாட்டத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும். ஜனநாயக தேசிய முன்னணியும் அப்போது நாடாளுமன்றத்தில் ஒரு தாங்கியாக இருக்கும், அதற்கு கிடைக்கும் 6 - 8 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் காரணமாக இவர்களுக்கு ஒன்றோ அல்லது இரண்டோ அமைச்சு பதவிகள் எதிர்காலத்திலும் இவர்களின் தயவு இந்த தயார் படுத்தலுக்கு உதவும் என்பதற்காக தானமாக வழங்கப்படலாம்.

## ஐ.பி.எல் - கெய்ல்

இனி, கிறிஸ்கெய்ல் துடுப்பாடும் பொழுது பந்துவீச்சாளர்கள் பின்வருவனற்றைக் கடைப்பிடிக்கலாம்.

1. விக்கெட் கீப்பருக்குப் பின் திசையில் (ஃபைன் லெக்கில்) இருந்து ரன் அப் ஆரம்பித்து கிரவுண்ட் முழுக்க சுற்றிக் கொண்டே இருக்கலாம், பந்தைப் போடாமலே.
2. உருட்டி விடலாம். நான்கு ரன்களோடு போகும்.
3. நின்று அண்டர் ஆம்ஸ் போடலாம். எனர்ஜியாவது மிஞ்சும்.
4. ஓவர் ஆரம்பிக்கும் முன்னர் மார்பில் அடித்துக்கொண்டு அழுதுகாட்டினால், கெய்ல் மனம் இரங்கலாம்.

- நர்சிம்




# அன்றைய முன்னணிச் செயற்பாட்டாளர்களின் இன்றைய முன்னுதாரணம்?

- அரவிந்தன்

சம்பிரதாயமாக்கப்படும் எந்த நிகழ்ச்சியும் அதன் உயிர்த்துடிப்பை இழந்து விடுகிறது. ஒரு காலம் உறைந்து போயிருந்த யாழ்ப்பாண மக்களின் குரல்களை வெளியே கொண்டு வருவதற்காக அரங்க நிகழ்வாக - குரலற்றவர்களின் குரலாக எழுச்சியடைந்த பொங்குதமிழ் நிகழ்ச்சி அதனுடைய இரண்டாவது ஏற்பாட்டில் சருகாகக் தொடங்கியது. பின்னர் அது வெறும் அலங்கார நிகழ்வாக, உள்ளடக்கத்தையும் ஆன்மாவையும் இழந்ததாக மாறி அடங்கியது. பின்னர் நடந்த நிகழ்ச்சிகளில் இலட்சக்கணக்கான சனங்கள் திரண்டிருந்தாலும் அந்த நிகழ்ச்சியின் உயிர்த்துடிப்பும் முக்கியத்துவமும் இல்லாமற் போய்விட்டிருந்தது. ஆனால், பின்னர் நடந்த பொங்குதமிழ் நிகழ்வுகளைத்தான் பலரும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஊடக முக்கியத்துவம் கூட பிந்திய நிகழ்ச்சிகளுக்கே கிட்டியது.

தற்போது முள்ளிவாய்க்கால் நிகழ்ச்சிகளும் கூட அப்படியான ஒரு சம்பிரதாயத்தனத்திற்குள் - சடங்கிற்குள்தான் சிக்கியிருக்கிறது.

அந்த ஒருநாளில் - மே 18 இல் எல்லோரும் மெழுகுதிரிகளை ஏற்றுவதுடன் அவரவர் தங்களுடைய கடமைகளை நிறைவு செய்து விட்டதாகவே கருதிக் கொள்கிறார்கள். பொங்குதமிழின் போது ஒன்று திரண்ட மக்கள் போரின் தோல்விக்குப் பின்னர், ஒரு அரசியற் திரட்சியைக் கொடுக்க முடியாமல் திணறுவதைப்போல, அல்லது அவரவர் தம்பாட்டில் கடமை முடிந்தது என்று கருதியிருப்பதைப்போலவே இந்த நினைவு கூரல் நிகழ்ச்சிகளும் அமைகின்றன.

இதை இன்று யாரும் மறுக்கக் கூடும். ஆனால், இது அப்படியான ஒன்றே என்பதை உணர்வதற்கு அதிக காலம் தேவையில்லை, மிக விரைவிலேயே உணர்ந்து கொள்ள முடியும்.

பொங்குதமிழின்போது எப்படி தமிழ்த் தேசியம் என்றும் தேசிய உணர்வென்றும் முழங்கினார்களோ, அவர்கள் பின்னாளில் வன்னிக்கோ வாகரைக்கோ



சென்று பாதிப்புக்குள்ளான மக்களுக்குப் பணிகளைச் செய்ய முன்வரவில்லை. போரிலே பாதிக்கப்பட்ட குடும்பங்களை ஒருவரேனும் பொறுப்பெடுக்க முயற்சிக்கவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே அன்று பொங்குதமிழுக்காக கொடிகளைத் தூக்கிய மாணவர்கள், இன்று அரச பணிகளில் இருக்கிறார்கள்.


ஆனால், இவர்களில் எவரும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே சென்று வெளிமாவட்ட மக்களுக்கான பணிகளைச் செய்யத் தயாரில்லை. இன்னும் வீட்டுக்கருகில் உத்தியோகமும் சொந்தமாக இரண்டாவது தொழிலும் என்றே செய்து கொண்டிருக்கிறார்கள். சாதி பார்த்து, சீதனம் வாங்கித் திருமணம் செய்வது வரையில் இவர்களுடைய நாட்டுப் பற்றும் தேசிய உணர்வும் இருக்கிறது. இதைப் பட்டியலிட்டுக் காட்டுவதற்கு அதிக நேரம் தேவையில்லை.

அந்த அளவுக்கு முன்னணிச் செயற்பாட்டாளர்களின் முன்னுதாரணம் உள்ளது.

எதையும் உணர்வோடும் உண்மையோடும் செய்தால் அதை நாம் வரவேற்கலாம். ஆனால், கூட்டத்திற் கூடி நின்று கூடிப் பிதற்றலின்றி நாட்டம் கொள்ளரடியே கிளியே நாய்ச் சாதியடி என்ற மாதிரி இருந்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே என்றுதானே எழுத வேண்டியிருக்கிறது. இதை யார் குற்றம் சொல்ல முடியும்?




# சினிமா சினிமா




"பில்லா 2" படத்தையடுத்து ஏ.எம். ரத்னத்தின் தயாரிப்பு மேற்பார்வையில் விஷ்ணுவர்தன் இயக்கும் புதிய படத்தில் நடிக்கிறார் அஜித். இதில் அஜித்துக்கு நயன்தாரா, டாப்ஸி என இரண்டு ஜோடிகள். படத்தில் முதல் முறையாக அஜித்துடன் இணைகிறார் ஆர்யா. பெயரிடப்படாத இந்தப் படத்தின் படப்புடிப்பு மே 31ஆம் திகதி தொடங்குகிறது. யுவன் ஷங்கர்ராஜா இசையமைக்கிறார். அதுசரி, பில்லா 2 இல் அஜித் இலங்கை அகதியாக நடித்திருக்கிறாராமே!

பிரபல ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலியும் நடிகர் பிராட் பிட்டும் திருமணம் செய்து கொள்ளாமலே இணைந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது உலகறிந்த செய்தி. ஆறு குழந்தைகள் பெற்ற பின்பும் இதுவரை திருமணம் செய்யாமல் வாழ்ந்து வரும் இந்த ஜோடி, குழந்தைகளின் வற்புறுத்தலுக்கு இணங்கி விரைவில் திருமணம் முடிக்கவுள்ளனர். இதைக் கொண்டாடும் வகையில் தன்னுடைய அன்புக் காதலரும் வருங்காலக் கணவருமான பிராட் பிட்டுக்கு 25 கோடி ரூபாவில் ஒரு ஹெலிகொப்டரை வாங்கிப் பரிசளித்துள்ளார் ஏஞ்சலினா ஜோலி. அட சீதனம்தானா!




"வைகைப்புயல்", "கறுப்பு நாகேஷ்", "சின்னக் கலைவாணர்", "சனங்களின் கலைஞன்" என்றெல்லாம் அடைமொழி வைத்துக்கொண்டுள்ள வடிவேலு, விவேக் உள்ளிட்ட நகைச்சுவை நடிகர்களைப் போல தனக்கும் ஓர் அடைமொழியை வைத்துக்கொள்ள முடிவெடுத்துள்ளார் சந்தானம். இதற்காக தன்னுடைய உதவியாளர்களிடமும் நண்பர்களிடமும் தனக்கு ஏற்ற அடைமொழியைத் தேர்ந்தெடுக்க அன்புக் கட்டளையிட்டிருக்கிறார். "மறுத்தான் மன்னன்" பிடிக்குமோ என்னவோ!



மறைந்த நடிகர் ரகுவரனின் பெயரில் இந்த ஆண்டு முதல் விருது வழங்கத் திட்டமிட்டுள்ளார் அவரது மனைவியும் நடிகையுமான ரோகிணி. நடிப்பில் சிறந்து விளங்குபவர்களுக்கு மட்டுமே இந்த விருது. ரகுவரனின் பிறந்த தினமான டிசம்பர் 11ஆம் திகதி விருதுகள் வழங்கப்படுகின்றன. போதையில் வதைத்தாலும் புருஷன்!



சித்தார்த், ஸ்ருதிஹாசன், ஹன்சிகா ஆகியோர் இணைந்து நடித்த தெலுங்குப் படம், "ஓ மை ப்ரண்ட்!" இப்படம், "ஸ்ரீதர்" என்ற பெயரில் தமிழுக்கு டப் செய்யப்படுகிறது. தெலுங்குப் பதிப்பில் சித்தார்த்துக்காக பாடகர் பென்னி தயாள் பாடிய பாடலை, தமிழில் நடிகர் சிம்பு பாடியுள்ளார். இப்படத்தின் இசையமைப்பாளர் ராகுல்ராஜ் பாட அழைத்தபோது மறுத்த சிம்பு, பின்னர் சித்தார்த் அழைத்ததும், அவரது நட்புக்காக பாடிக் கொடுத்துள்ளார். இதுதான் "ஓ மை ப்ரண்டா?"



# இறப்பும் மறுப்பும்!

- நாகரத்தினம் கிருஷ்ணா -



**1945**ஆம் ஆண்டு நேசநாடுகளின் படைத் தளபதிகள் பெர்லினில் கூடினார்கள். இச்சம்பவத்திற்கு 28 மணிநேரத்திற்கு முன்பாக ஹிட்லர்வசமிருந்த ஜெர்மனி எவ்வித முன்நிபந்தனையுமின்றி சரணடைந்திருந்தது. ஏறக்குறைய இதற்கெல்லாம் முன்பாக ஒரு பாதாள அறையில் உலகனைத்தும் ஜெர்மனால் ஆளப்படவேண்டும் எனக் கனவுகண்ட ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டு விட்டாரென்று பேச்சு.

உலக அரசியலில் ஹிட்லர் மரணமென்ற வதந்தி ஒரு புகம்பத்தையே நிகழ்த்தியதெனலாம். வெற்றியின் களிப்பில் நேசநாடுகள் திளைத்திருந்தாலும் அதைக்காட்டிலும் உலக நாடுகளுக்கிடையான உறவில் பரஸ்பர நல்லெண்ணத்தையும், சுமுகமான நட்பையும் வளர்த்து அமைதியை நிலைநாட்டுவது அவர்களுக்கு முதற்பணியாக இருந்தது.

பத்திரிகையாளர்களும், இதழியலாளர்களும் முக்கியத்துவமறிந்து பெருந்திரளாக நேசநாடுகளில் இராணுவ தலைவர்களின் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். குறிப்பாக ரஷ்யப் படையின் தளபதி ஜூக்கோவ் அங்கே பத்திரிகையாளர்களின் கவனத்திற்குள்ளானார். காரணம் இவர்தான் ஹிட்லரின் இறுதி நாட்கள் குறித்து விளக்குவதற்கென பத்திரிகையாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார். நடிகை ஏவாவுடனான ஹிட்லரின் திருமணத்தை வெளி உலகிற்கு அறிவித்தவரும் இவரே. ஆனால் அன்றையதினம் ஒரு நடிகையுடனான ஹிட்லரின் திருமணத்தைக் காட்டிலும் பத்திரிகையாளர்களுக்கு ஈர்ப்பினை தந்த தகவல், அவரது மரணம் சம்பந்தமானது.

"நடந்ததனைத்தும் புதிராக உள்ளது. ஹிட்லரின் உடலை எங்களால் அடையாளப்படுத்த இயலாததால், அவருக்கு நேர்ந்த முடிவை உறுதிப்படுத்த முடியாவர்களாக இருக்கிறோம். பெர்லினிலிருந்து கடைசி நிமிடத்தில் எங்கேயாவது ஹிட்லர் தப்பித்திருக்கவும் சாத்தியமுண்டு" என்ற ஜூக்கோவின் வார்த்தைகள் முக்கியமானவை.

பெர்சாரின் என்ற மற்றொரு இராணுவ அதிகாரியின் குறுக்கீட்டிலும் இச்சந்தேகம் உறுதிப்பட்டது:

"முக்கியமான ஜெர்மன் அதிகார வட்டத்தைச் சேர்ந்தவர்களின் பிணங்களைக் கண்டோம். ஆனால் அப்பிணங்களில் ஹிட்லர் பிணமென்று எதனையும் குறிப்பிட்டுச் சொல்ல எங்களால் முடியாது. எனவே அவர் மரணத்தை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஐரோப்பாவில் எங்கோ ஓரிடத்தில் இன்னமும் பதுங்கியிருக்கலாமோவென சந்தேகிக்கிறோம். எங்கள் சந்தேகம் ஸ்பெயின் சர்வாதிகாரியான பிராங்கோ அவருக்கு அடைக்கலம் கொடுத்திருக்கலாமென்பது, அது அபத்தமாகக் கூட இருக்கலாம். இப்போதைக்கு எங்கள் நிலை இதுதான்."

இச்செய்தி ஐரோப்பிய அரசியல் சூழலைக் கலவரப்படுத்தியது. நேசநாடுகளின் படைகளிடம் பிடிபட்டால் அவருடைய தலைவிதி எப்படி முடியும் என்றறியாதவரல்ல ஹிட்லர். எனவே அவர் தப்பியிருக்கக்கூடுமென சோவியத் இராணுவத்தினர் அறிவித்தபோது பலரும் நம்பவே செய்தனர். ஆனாலும் யுத்தத்தின்போது அமெரிக்க இராணுவத்தின் தலைமையை ஏற்றிருந்த ஜெனரல் ஐசனோவர் அத்தனை சுலபமாக ரக்ஷ்யர்களின் பேச்சை நம்ப மறுத்தார். ஜூன் 9ஆம் திகதி வரை அவரைப் பொறுத்தவரை ஹிட்லர் உயிரோடிருக்கிறார் என்பதை நம்பத் தயாரில்லை. ஜூன் பத்தாம் திகதி நேரிடையாகவே ரக்ஷ்யர்களிடம் கேட்டார். "ரஷ்யர்களான உங்களுக்கு ஹிட்லர் இறப்பு பற்றிய திடீர் சந்தேகங்கள் தோன்றக் காரணமென்ன? என ஐசனோவர் வினவினார்.

முதல் நாள் தாம் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்த தகவலை ஜூக்கோவ் மீண்டும் உறுதிப்படுத்தினார். - கிடைத்த சடலங்களில் ஹிட்லரின் உடலைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதுதான் காரணம் - வேறென்ன சொல்ல, எனக் கூறிவிட்டு, ஹிட்லர் ஸ்பெயின் நாட்டிற்கோ அல்லது அர்ஜெண்டைனாவிற்கோ தப்பித்துச் சென்றிருப்பாரென நினைக்கவும் சாத்தியங்கள் நிறைய உண்டென்றார். இக்கூற்றை ஏற்கின்ற வகையிலிருந்தது பின்னர் "டைம்ஸ்" இதழுக்கு ஐசனோவர் அளித்திருந்த பேட்டி. நான்கு மாதங்களுக்குப் பிறகு ஒல்லாந்து நாட்டிற்குச்சென்றிருந்த அவர் தமது பேட்டியில், உண்மையில் ஹிட்லர் இறந்ததாக ஆரம்பத்தில் நம்பியது உண்மை, அவர் இப்போது உயிரோடிருக்க வேண்டுமென நம்புவதும் உண்மை, அதற்கான காரணங்களுமுண்டென தெரிவித்தார்.

ரஷ்யர்களைப் பொறுத்தவரை தொடக்கத்திலிருந்தே அவர் உயிரோடிருக்க வேண்டும் என்பதில் உறுதியாகவிருந்தார்கள். செப்டம்பரில் அவர்களின் இந்த சந்தேகம் ஆங்கிலேயர்களுடனான அவர்களின் உறவையே சீர்குலைக்கும் வகையில் வளர்ந்தது. "ஹிட்லரும் ஏவாவும் உங்கள் வசமிருக்கும் ஜெர்மனிலேயே ஒளிந்திருக்க வேண்டும்" என ஆங்கிலேயர்களைக், குற்றம் சாட்டினார்கள்.

இக்குற்றச்சாட்டை மறுதலிப்பதற்கான நடவடிக்கையாக ஆங்கிலேயர்கள் ஒரு பேராசிரியரை நியமித்து ஹிட்லரின் இறப்பு தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் திரட்டுமாறு வேண்டிக் கொண்டார்கள். இப்பேராசிரியர், பிராங்பர்ட்டிற்கு வந்திருந்த ஐசனோவரிடம், ஹிட்லர் இறந்துவிட்டாரென உறுதிப்படுத்த இயலாதெனினும் அவர் உயிரோடிருப்பதாக நம்புவதும் அபத்தமானதென்று, கூறியிருக்கிறார்.

மாறாக, ஸ்டாலின் அமெரிக்க அதிபரின் பிரதிநிதியிடம், ஹிட்லரும் அவரது சகாக்களான போர்மன் (Bormann), கோயபல்ஸ் (Goebells), கிரெப்ஸ் (Krebs) ஆகியோரும் தப்பித்து எங்கோ ஒளிந்திருக்க வேண்டுமென, கூறியிருக்கிறார், காரணம் சோவியத் தரப்பில் நுணுக்கமாக ஆய்வுகள் நடத்தப்பட்டதாகவும் அவர் இறந்திருப்பாரென சொல்வதற்கு எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லையெனவும் மீண்டும் தெள்ளத் தெளிவாகச் சொல்லப்பட்டது.

இதைப் படித்துக் கொண்டிருக்கும்போதே உலகில் எங்கேனுமொரு வரலாற்றாசிரியர் தோன்றி இரண்டாம் உலகப் போருக்குப் பின்னும் ஹிட்லர் உயிர்வாழ்ந்தார் என்று எழுதிக் கொண்டிருக்கலாம். ஏற்கனவே நேதாஜியைக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றுப் புனைவுகளுண்டு, நாளை புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சுற்றியும் வரலாறு கதைகள் எழுதலாம்.

ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வரலாறு அறிவியலல்ல, கலைப்பிரிவைச் சார்ந்தது. எனவே புனைவுகளுக்கு அங்கே பஞ்சமில்லை. ஜூக்கோவ் என்கிற ரஷ்ய இராணுவ தளபதியும், ஸ்டாலினும் ஹிட்லர் உயிரோடிருக்கிறாரென திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தபோது ஹிட்லர் இறந்துவிட்டாரென்பதும் உண்மை. அதனை ரஷ்யர்கள் அறிவார்களென்பதும் உண்மை என்கிறது மற்றொரு வரலாறு.

# கோடையிலும் பளபளக்க...



- எலுமிச்சம் பழத்தோலை காலின் அடிப்பாகம், கைமுட்டி, கணுக்கால், முகம் ஆகியவற்றில் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் கழுவினால் தேகம் பளபளக்கும்.
- வாரத்துக்கு ஒரு தடவை ஒரு சில துளி தேங்காய் எண்ணெயை உடலில் தேய்த்துக் குளித்தால் சருமம் மிருதுவாகும்.
- அதிக வெயிலால் மூக்கின் ஓரங்களில் அழுக்கு படியும். ஆவிபிடித்து பஞ்சால் மூக்கின் ஓரங்களை துடைத்தால் பலன் கிடைக்கும்.
- நல்ல கொதிக்கும் நீரில் முகத்தைக் காட்டி ஆவி பிடித்தால் நீராவியால் முகம் சுத்தமாகும்.
- வெயிலின் பாதிப்பால் கரும்புள்ளிகள் தோன்றினால் வெற்றிலை லேசாக அரைத்து அதனுடன் தேங்காய் எண்ணெயைக் கலந்து பூசினால் கரும்புள்ளிகள் மறையும்.
- கரும்புள்ளிகளுக்கு எலுமிச்சை சாற்றுடன் கிளிசரின் கலந்து பூசலாம். மருதாணியுடன் மஞ்சள் கலந்தும் தடவலாம்.
- கோடையில் அதிகமான வாசனையுள்ள நறுமண திரவியங்களைப் பயன்படுத்த வேண்டாம். பலவிதமான அழகு சாதனங்களை ஒரே சமயத்தில் பயன்படுத்த வேண்டாம்.
- கண் எரிச்சல் ஏற்பட்டால் உருளைக்கிழங்கை தோலுடன் சீவி பருத்தித் துணியில் இரண்டு சிறு மூட்டைகள் போன்று கட்டி குளிர்சாதனப் பெட்டியில் வைத்து குளிர்ந்ததும் கண்கள் மீது வைத்துக் கொண்டு பத்து நிமிடங்கள் ஓய்வெடுங்கள். கண்கள் புத்துணர்ச்சியாகும் கண்களுக்கு கீழ் பை போன்று தொங்கும் சதையும் நாளடையில் இறுகி இளமையாக தோற்றம் தரும்.
- இரவில் தூங்கப்போகும்போது சுத்தமான விளக்கெண்ணெய் இரண்டு சொட்டுகள் எடுத்து கண்களில் விட்டுக்கொண்டால் கண் எரிச்சல் வராமல் தடுக்கலாம் கண்களை சுற்றியுள்ள கருவளையமும் காணாமல் போகும் கண்கள் புத்துணர்ச்சியுடன் காட்சியளிக்கும்.

# கதை சொல்லும் மரபு தமிழ்மொழிக்கே உண்டு

## பேராசிரியர் சிவலிங்கராஜா

(யாழ்.நிருபர்)

உலக வரலாற்றிலே கதை சொல்கின்ற மரவு தமிழ் மொழிக்கே உரித்தானதன்று மேலைத்தேய, கீழைத்தேய மொழிகள் எல்லா வற்றிலும் கதைகூறும் மரபு இருந்து வந்துள்ளது. வேற்று மொழிகளில் உள்ள நல்ல கதை களை நல்ல இலக்கியத்தைத் தமிழுக்கு கொண்டு வரும் பணி யைச் சிறப்பாகச் செய்து வருகி றார் கவிஞர் சோ.பத்மநாதன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தெரிவிக்கை யில்,

கவிஞர் சோ.பத்மநாதனின் பர்மிய பிக்கு சொன்ன கதைகள் நூல் வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கல் மற்றும் பயிற்சி நிலை யத்தில் பேராசிரியர் கி.விசாக ரூபன் தலைமையில் நடைபெறறு இவ்வெளியீட்டு விழாவில் பேரா சிரியர் சிவலிங்கராஜா தெரிவித் துள்ளார்.

தமிழ்மொழியில் கதைகூறுல் மரபு தொல்காப்பியர் காலத்தி லேயே உள்ளது. ஒருவர் தான் கண்டவற்றை தனது அனுபவங் களைச் சொல்லிக் காட்டும் மரபில் இருந்தே நாடகம் தோன்றியது எனலாம்.

தொல்காப்பியர் காலத்திலிருந்து கதை சொல்லி வந்த மரபு பரி ணாம வளர்ச்சி பெற்று இன்று பாடப் புத்தகங்களிலும் விரிவ டைந்துள்ளது. பாலபாடக் கதை களில் மட்டுமன்றி கிராமியக் கதைகளிலும் இம்மரபு காணப் படுகின்றது. விரிவடைந்துள் ளது. பாலபாடக் கதைகளில் மட்டு மன்றி கிராமியக் கதைகளிலும் இம்மரபு காணப்படுகிறது.

பொய் சொல்லக்கூடாது, பேராசை கூடாது போன்ற நீதி நெறிகளை இக்கதைகள் எமக் குப் போதிக்கின்றன. சோதிடம், முழிவியளம், நம்பிக்கைகள் போன்றவற்றைக் கேலி செய் வனவாகவும் இக்கதைகள் அமைந்துள்ளன.

கவிஞர் சோ.பத்மநாதன் தான் படிக்கின்ற வேற்று மொழிக் கதைகளை தெளிவாகக் கற்று மற்றவர்களுக்கும் சொல்ல வேண டும் என்ற ஆர்வம் உள்ளவர் அவா சொல்கின்ற விடயங்களைச் சுவை யாகச் சொல்லுந்திறன் மிக்கவர் இனிய எளிய பாமர நடையில் அழகாகச் சொல்லுவர். பர்மிய பிக்கு சொனன கதைகள் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சமய குருமாரின் பாலியல் தொடர்பான கதைகள் சோ.ப வின் மொழிபெயர்ப்பில் மிக அற்புதமாக அமைந்துள்ளன.

யாழ். பல்கலைக்கழக கலைப பீடாதிபதி பேராசிரியர் நா.ஞான குமாரன் வாழ்த்துரை வழங்கினார்.

தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

பேராசியர் நா.ஞானக்குமாரன் நூலினை வெளியிட்டு வைக்க புரவலர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களின் பிரதிநிதி முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் கவிஞர் சோ.பத்ம நாதன் ஏற்புரை நிகழ்த்தினார். (10)

# நெல்லியடி - யாழ்ப்பாணம் காலைப் பேருந்து இடம்பெறுமா?

(வடமராட்சி)

நெல்லியடியிலிருந்து யாழ்ப் பாணம் நோக்கி காலை 6.45 மணிக்கு புறப்படும் தனியார் பேருந்து சேவை தற்போது தடைப்பட்டிருப்பதனால் யாழ்ப் பாணம் மற்றும் தூர இடங்களுக் குச் செல்லும் பயணிகள் உத்தி யோகத்தர்கள், பொதுமக்கள் பலரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

பயணிகளின் இட நெருக்கடி நிலையை தவிர்க்கும் வகையில் இப் பேருந்து சேவை ஆரம்பிக் கப்பட்டு நடைபெற்று வந்த போதி லும், திடீரென தடைப்பட்டத னால் பயணிகள் பலரும் கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ள னர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இத் தனியார் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென பயணிகளும் உத்தியோகத தர்களும், பொது மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.(100)

# வேலணை பொது நூலக அபிவிருத்திக் கூட்டம்

(வேலணை)

வேலணைப் பிரதேச சபை யின் பொது நூலகத்தின் வாசகர் வட்டக் கூட்டம் அண்மையில் உப அலுவலக பொறுப்பதிகாரி ப.பாலசுப்பிரமணியம் தலைமை யில் இடம்பெற்றது. இதில் சன சமூக அபிவிருத்தி உத்தியோகத் தர் பு.பாலசுப்பிரமணியம் நூல கர் செல்வி ச.வித்யா, நூலகர் உதவியாளர் திருமதி ம.ஜெயந்தா மற்றும் வாசக வட்ட உறுப்பினர் கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நூலகத்தின் அபிவிருத்தி சம்பந்தமான செயற் பாடுகளில் வாசகர் வட்ட உறுப் பினர்கள் செயற்படுதல்,

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வாசகர்களை தெரிவு செய்து கௌரவித்தல்,

டெங்கு ஒழிப்பு நடவடிக்கை யில் நூலகத்தினருடன் இணைந்து செயற்படல், நூலக முப்பரிமான கண்காட்சிக்கு தேவையான சான்றா தாரங்களை வழங்கி உதவுதல்,

புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்படவேண்டும் ஆகிய தீர் மானங்கள் எடுக்கப்பட்டன.

## வவுனியாவில் இன்றும் நாளையும் மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி

(யாழ்.நிருபர்)

வடக்கு மாகாணப் பாடசாலை களுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இம்முறை வவுனியா வில் நடைபெறவுள்ளன.

இன்றும் நாளையும் மாகாண மட்டப் போட்டிகள் நடைபெறும்.

இதேவேளை தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர் வரும் ஜூலை 7, 8 ஆம் திகதிக ளிலும், 14, 15 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. (10)

# அவுஸ்ரேலியாவில் வழக்குத் தாக்கல்

அவுஸ்ரேலியாவில் தஞ்சம் வழங்கப்பட்ட இலங்கை அகதி ஒருவர் தாம் காலவரையின்றி அங்கு தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அவுஸ்ரேலிய குடிவரவுத்துறை செயலாளர் அந்த துறைக்கான அமைச்சர், அவுஸ்திரேலிய கமன்வெல்த் அமைப்பு ஆகியவற்றுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கை அகதியின் சார்பில் அவுஸ் ரேலியாவில் உள்ள அகதிகள் நல அமைப் பொன்று தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள அமைப் பின் அதிகாரி ஒருவர் குறித்த அகதி அவுஸ் ரேலியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என தெரிவிக்கப்பட்டாலும் அது குறித்து சுயாதீன மான விசாரணை நடத்தப்படவில்லை என கூறியுள்ளார்.

இந்த நிலையில் தவறான பாதுகாப்பு மதிப்பீடுகளின் அடிப்படையில் ஒருவர் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை சட்டத்திற்கு முரணானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அரச பிரதேச வங்கி கடனுதவி




(வடமராட்சி)

யாழ். வர்த்தகத் தொழில் துறை வேளாண். மகளிர் ஒன்றிய அனுசரணை யுடன் பிரதேச அபிவிருத்தி அரச வங்கி யினால் யாழ. மாவட்ட முன்பள்ளி ஆசி ரிய ஒன்றியத்திற்கு அபிவிருத்தி முயற்சிக் கான கடன்பெறும் வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரிய ஒன்றியத்தின் நிறுவுநரும் தலைவருமான லயன் எஸ்.ஜே.செல்வராஜா தலைமையில் கடந்த வாரம் மருதனார்மடம் பிரதேச அபிவிருத்தி வங்கியில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் யாழ். மாவட்ட முன் பள்ளி ஆசிரியர்களில் வலிகாம பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.

இக் கூட்டத்தில் லயன் எஸ்.கே.செல்வராஜாவின் வேணடு கோளுக்கினங்க வங்கி முகாமை யாளர் லட்சுமண சர்மா வங்கிக் கடன் மூலம் முன்பள்ளி ஆசிரி யர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தை ஆதரித்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முயற்சிக் கடன் வழங்கும் திட்டத்தை பகிரங்கமாக அறிவித் தார்.

இதில் முதற்கட்டமாக வலிகாம முன்பள்ளி ஆசிரியர் களுக்கு அமுல் செய்வதென் றும், அத்தோடு ஆரம்ப கட்ட நடவடிக்கையாக ஆர்வமுள்ள ஆசியர்களின் முன்பள்ளிகளின் சிறார்களுக்கு இலவச கணக்கு ஆரம்பிக்கும் திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. முள்பள்ளி ஆசிரியர்கள் இதில் பயன் பெறலாம் எனவும் தெரிவித்தார்.

# முதலிடம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட ரீதியில் நடைபெற்ற 2012 ஆம் ஆண்டுக்கா[illegible] தமிழ்த்தினப் போட்டிகளில் தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மாணவன் செல்வன் செந்தில் நாதன் பிரசாந்தன் பிரிவு -ii தனி நடனப் போட்டியில் முத லாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மாகாண மட்டப்போட்டிகளில் இவர் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# வெளிச்சத்தில் வேலணை வீதிதோறும் மின்விளக்குகள்



(வேலணை)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்கள் தோறும் வீதி மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. வேலணைப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றது. வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சின்னையா சிவராசா மின்விளக்குப் பொருத்தும் பணிகளை பார்வையிடுவதைக் காணலாம. (85)

# தோட்டக் காணிகளில் வர்த்தக நிலையங்கள்

## விவசாயத்தைப் பாதிக்கும் என்கிறது வணிகர் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாயச் செய்கைகள் நடைபெற்ற தோட்டக் காணிகளில் வர்த்தக நிலையங்கள் பெருமளவு நிர்மாணிக் கப்படுவதால் மாவட்டத்தின் விவசாயச் செய்கை பாதிப்படையக் கூடிய வாய்ப்புகள் அதிகரித் திருப்பதாக யாழ். வணிகர் கழகம் சுட்டிக்காட்டி யுள்ளது.

யாழ். வணிகர் கழகத்தில் இடம்பெற்ற பத்திரி கையாளர் சந்திப்பிலேயே இவ்விடயம் சுட்டிக்காட் டப்பட்டது. அச்சந்திப்பில் வணிகர் கழகத்தால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

விவசாய நிலங்களில் வர்த்தக நிலையங்கள் கட்டப்படுவதினால் விவசாயச் செய்கை பெருமள வில் பாதிக்கப்பட்டு மாவட்டத்தின் பொருளாதார வளத்தைப் பாழாக்கி விடும். இங்கு விளைவிக்கும் உற்பத்திப் பொருட்களுக்காக பிற மாவட்டங் களை எதிர்பார்த்திருக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும். இதில் விவசாயிகளும், பொதுமக் களும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத் தித்துறை வீதி உள்ளிட்ட வீதிகளை அண்டியுள்ள விவசாய நிலங்களிலேயே இத்தகைய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

தற்போது மீளக்குடியமர்ந்த பகுதிகள் இத்த கைய வர்த்தக நிலையங்களை அமைக்க முற்படும போது விவசாய நிலங்களை கவனத்திற் கொண்டு கட்டடங்கள் அமைக்கப்படவேண்டும்.


எனவே மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சி யையும், விவசாய உற்பத்திகளையும் கவனத்தில் கொண்டு விளைநிலங்களில் கட்டங்கள் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு கைத்தொழில் முயற்சிகளில் கவனம் செலுத்தி பொருளாதார வளத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று வணிகர் கழகத்தினரால் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

**27 ஆம் 28 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள் சொற்சோடிகளின் பொருத்தப்பாட்டினை அறிந்து அடுத்துள்ள சொல்லின் சோடிச் சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.**


27) கடல் - வானம் மீன் -
1) அலை 2) நட்சத்திரம் 3) நண்டு

28) உணவு - நீர், பசி -
1) வறுமை 2) பட்டினி 3) தாகம்

**சற்று வித்தியாசமான விடையின் கீழ்க் கோடிடுக.**

29)


**மாணவன் என்ற சொல்லுடன் தொடர்பற்ற உருவின் கீழ் கோடிடுக.**

30)


**பின்வரும் வினாக்கள் ஐந்தும் ஒரு சம்பவத்துடன் தொடர்புடையவை. ஒவ்வொரு வினாவினதும் விடைகளை அறிந்து கோடிடுவதன் மூலம் சம்பவத்தைத் தொடர்ந்து செல்ல முடியும்.**

31) ஆதி காலத்தில் விலங்கின் நிலையிலிருந்த மனிதனுக்கு,
1) பாவங்கள் 2) தேவைகள் 3) சோதனைகள்


32) அதிகரிக்க அதிகரிக்க புதிய புதிய விடயங்கள்,
1) அறிவில்லை 2) இழந்தான் 3) கண்டுபிடித்தான்

33) இதன் காரணமாக ஆறாவது அறிவாகிய,
1) பகுத்தறிவு 2) கேட்டறிவு 3) பார்த்தறிவு

34) மேலும் மேலும் வளரத் தொடங்கியது அதன் பயனாக,
1) கோள்களை 2) கருவிகளை 3) நாடுகளை

35) கண்டு பிடித்து தனது அன்றாட வேலைகளைச் இலகுவாகச் செய்யத் தொடங்கினான்.

**அருகே உள்ள எண் எழுத்துக்களை அவதானித்து, கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையை அடைப்பினுள் எழுதுக.**




36) அதிகமாக உள்ளது எது?
1) A 2) B 3) D

37) அதிக எண்ணிக்கைக்கும், குறைந்த எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசத்திற்குச் சமமான எண்ணிக்கையுடைய எழுத்து எது?
1) A 2) B 3) C

38) B இன் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையுடைய மற்றொரு எழுத்து எது?
1) C 2) D 3) E




T.S. சுகுமாரன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012



# கல்வி முரசு

வெளியீடு **72**




**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01 தொடக்கம் 02 வரையான வினாக்கள் படங்களுடன் தொடர்புடையவை. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


01)



1) இது கற்றலுக்கு மட்டும் பயன்படுகின்றது.
2) இதனைக் கற்றலுக்கும் பயன்படுத்தலாம்.
3) இது சாப்பாட்டுக் கடைகளில் இருக்காது.

02)


1) இது ஒரு வீட்டு உபகரணமாகும்.
2) இது ஒரு தச்சுக் கருவியாகும்.
3) இது ஒரு வெட்டும் கருவியாகும்.

**பின்வரும் உருக்களின் போக்கை அவதானித்து, அடுத்து வரும் உருவைத் தெரிவுசெய்து அடிக்கோடிடுக.**

03)



04)



**பின்வரும் வினாக்களை வாசித்து அவற்றுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்து கீறிடுக.**

05) கீதன் எப்போதும் தாமதமாகவே பாடசாலைக்கு வருவான். எனவே அவனுக்கு அவனது வகுப்பாசிரியர் கூறக் கூடிய அறிவுரை என்ன?
1) நீ மேலும் தாமதமாகவே வா 2) நீ தாமதமாக வருவதை தவிர்த்துக் கொள்
3) நீ கடிகாரத்தைக் கட்டி வா 4) கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு வா

06) சுத்தம் தொடர்பாக இரு மாணவர்கள் உரையாடக் கூடியவற்றில் பிழையான கருத்து எது?
1) தெருவில் விற்கும் உணவுகளை வாங்கக் கூடாது
2) கையை சுத்தமாகக் கழுவி விட்டு உண்ண வேண்டும்
3) சமைக்கும்போது சுத்தமாகச் சமைக்க வேண்டும்
4) சுத்தமான உணவு என்று கேட்டு வாங்க வேண்டும்

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

07) ரூபனின் உண்டியில் 27 ரூபா பணம் இருந்தது. அவன் அதிலிருந்து தனது தேவைக்காக 1/3 பங்கு பணத்தை எடுக்க எண்ணினான். அதற்காக அவன் நான்கு குற்றி நாணயங்களை எடுத்தான். அவ்வாறாயின் அவன் எடுத்த குற்றி நாணயங்கள் எவை?


1) (5) (5) (2) (1) 2) (1) (1) (5)
3) (2) (2) (2) (1) 4) (5) (1) (1) (2)


**அருகே உள்ள எண், எழுத்துக்களை அவதானித்து, கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

08) மூன்று மாணவர்களிடம் 5 இற்குட்பட்ட எண்கள் கொடுக்கப்பட்டன. அவற்றில் 2உம், 4 உம் இல்லையென ஆசிரியர் கூறினார். அம் மூவரில் இரண்டு மாணவர்களை ஆசிரியர் அழைத்தார். அவர்களின் எண்கள் யாதாக இருக்கும்?
1) 2 உம், 3 உம் 2) 5 உம், 4 உம்
3) 3 உம், 5 உம் 4) 1 உம், 2 உம்


09) கீழே எழுதப்பட்டுள்ள 5 சொற்களிலும் ஒவ்வோர் எழுத்துக்கள் விடப்பட்டுள்ளன.
அடைக்க.........ம், ப...........வீனம், வி.........ங்குகள், த.......தாமாளிகை, மங்க.........ம்,
விடப்பட்டுள்ள எழுத்துகள் யாவும் ஒரே எழுத்தாகும். அவ்வெழுத்து யாது?
1) ள 2) த 3) ல 4) ட

**சரியான விடைக்குரிய ஆங்கில எழுத்தை அடைப்பினுள் எழுதுக.**

10) 
இவ்வாறு 8 கம்பங்கள் நடப்பட்டுள்ளன. ஒரு கம்பத்திலிருந்து இன்னொரு கம்பத்திற்கு கொடி கட்டுவதற்கு 100 மீற்றர் நூல் தேவைப்படுகிறது எனின், எட்டுக் கம்பத்திற்கும் கட்டுவதற்குத் தேவையான நூலின் அளவு யாது?
1) 800 m 2) 900 m
3) 1000 m 4) 700 m

11) 

K, B ஆகியவர்கள் மோட்டார் சைக்கிளில் S என்னும் ஆரம்பப் புள்ளியில் இருந்து ஒரே நேரத்தில் எதிர் எதிர் திசையில் பயணத்தை ஆரம்பித்தனர். இருவரும் 100 m சென்றதும் வலது பக்கமாகத் திரும்பி மேலும் 100 m சென்றதும் பயணத்தை நிறுத்திக் கொண்டனர். இப்போது K என்பவர் நிற்பது?
1) S இற்கு வடக்கு 2) S இற்கு வடகிழக்கு
3) S இற்கு வடமேற்கு 4) S இற்கு தென்கிழக்கு

12) 

ஒரு சதுர வடிவ மைதானத்தைச் சுற்றி கம்பி வேலி போடுவதற்கு 16 தூண்கள் சம அளவு தூரத்தில் நடப்பட்டுள்ளன. மைதானத்தின் A பக்கத்தில் நின்று பார்க்கும் ஒருவருக்கு அப்பக்கத்தில் மட்டும் எத்தனை தூண்கள் எண்ண முடியும்?
1) A தூண்கள் 2) 5 தூண்கள்
3) 3 தூண்கள் 4) 6 தூண்கள்

| | | | |
|---|---|---|---|
| | கு | தி | (A) |
| | ன | | |
| எ | (B) | ம | பு |
| | ன | | (C) |
| | இ | (D) | ழ் |

13) காலின் ஒரு பகுதியை குறிக்கும் இரண்டெழுத்துச் சொல் ஒன்று காணப்படுகின்றது. அது யாது? (....................................)

14) A, B, C, D ஆகியவற்றில் ஏதோ ஒரு இடத்தில் ஓர் எழுத்தை இடுவதன் மூலம் ஆறுகால் பிராணியின் பெயரைப் பெற முடியும். அப்பிராணியின் பெயர் யாது? (....................................)

15) C, D ஆகிய இரு இடங்களில் ஒரே எழுத்தை எழுதுவதன் மூலம் எதிர்ச்சொல் சோடி ஒன்றைப் பெற முடியும். அதற்காக எழுத வேண்டிய எழுத்து யாது? (....................................)

**கீழுள்ள வினாக்கள் இரண்டிலும் முதலில் தரப்பட்டுள்ள சொல்லுடன் எந்த வகையிலும் தொடர்பற்ற வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.**

16) செல்லப்பிராணி -
1) கிளிகளைக் கூட்டில் வளர்க்கின்றார்கள்
2) பன்றிகளைப் பண்ணையில் வளர்க்கின்றார்கள்.
3) நாய், பண்ணைகளை வீட்டில் வளர்க்கின்றார்கள்



17) அகராதி -
1) தமிழ், ஆங்கிலச் சொற்களின் கருத்துக்கள்
2) சொற்களின் ஒத்த கருத்துக்கள், எதிர்க்கருத்துக்கள்
3) பிரபலங்களின் முகவரிகள்


**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

18) பணம் எனும் சொல்லுக்குரிய மூன்று எழுத்துக்களையும் பெறக்கூடிய சொல் எது?
1) கபடத்தனம் 2) பட்டணம் 3) கட்டணம்

19) 
இக்குறியீட்டு எழுத்து காட்டி நிற்பது கப்பல் என்பதாகும். எனவே பகல் என்பதன் குறியீட்டு வடிவம் யாது?

1)  2)  3) 


**சரியான விடையை அடைப்பினுள் எழுதுக.**





20) இது ஓர் வெற்றி மேடையாகும். இதனைத் தயாரிக்க எத்தனை செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது? (......................................................)

21) வெற்றிபெறும் வீரர்கள் இம்மேடையில் ஏறிநின்று தான் மேடயங்களை வாங்குவார்கள். எனவே அதிக கற்களின் மீது நின்று வாங்கும் வீரரின் இலக்கம் யாது? (......................................................)

**கீழே சில நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. அவற்றினை ஒழுங்குபடுத்தி அவற்றுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக.**

22) 
A B C D

23) 

**பின்வரும் வினாக்களில் ? குறியீட்டுக்குரிய இடத்தில் வரவேண்டிய மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

24) 10, 2, 8, 4, ?, 6
1) 2 2) 4 3) 6 4) 8

25) 2 - 2 = ? + 3 = 3
1) 4 2) 0 3) 10 4) 1

26) 4 : 3, 6 : 5, 8 : 7, 10 : ?
1) 5 2) 8 3) 9 4) 4

# 25ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம்



(பகி.கிரு-சிகரம்)

யாழ்ப்பாணத்தில் வலுவிழந்தோருக்கான செயற்கை அவயவங்களைப் பொருத்துதல், மாற்று ஆற்றல் உள்ளவர்களுக்கு ஒரு ஆறுதல் நிறுவனமாகவும் சேவையாற்றிவரும் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் எதிர் வரும் ஜூன் மாதம் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடவுள்ளது.

1987ஆம் ஆண்டு கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ் கிளையாக ஆரம்பிக்கபட்ட ஜெய்ப்பூர் நிறுவனம் 2001ஆம் ஆண்டு முதல் சுதந்திரமான தன்னார்வத் தொண்டு நிறுவனமாக சேவையாற்றி வருகின்றது. யுத்தத்தினாலும் வேறு பல காரணங்களினாலும் அங்கவீனர்களாகவும் வலுவிழந்தும் செய்வதறியாது வீடுகளில் முடங்கியிருப்போரை மாற்று வலுவுள்ளவர்களாக சமுகத்தில் செயற்பட வைப்பதே இந்த நிறுவனத்தின் நோக்கமாகும்.

மாற்று ஆற்றல் உள்ளவர்களுக்கு நடமாடும் உபகரணங்கள், வாகனங்கள், கடன் திட்டங்கள், பயிற்சிகள், மற்றும் கல்விக்கான உதவித்தொகை என்பவற்றை வழங்கிவரும் இந்த நிறுவனத்தில் தற்போது, கால், கை இழந்தவர்கள், போலியோ மற்றும் பாரிசவாதம் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என பலவேறு வழிகளில் பாதிக்கபபட்ட 2500 இற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர்

இவர்களில் 75 வீதமானவர்கள் யுத்தம் மற்றும் நிலக்கண்ணி வெடிகளில் அகப்பட்டு தமது அவயங்களை இழந்துள்ளதுடன், போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களும் உள்ளனர் இவர்களும் ஏனையவர்களைப் போன்று நடமாடுவதற்கு பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்பட்ட செயற்கை அவயங்களைத் தயாரித்துப் பொருத்துவதுடன் அதில் ஏற்படும் பழுதுகளையும் இந்த நிறுவனம் சீரமைத்துக்கொடுக்கின்றது.

ஆரம்பகாலம் முதல் அலுமினியத்தால் செய்யப்படுவந்த செயற்கை அவயவங்களை சார்பு உறுப்புக்களையும், நடமாடும் உபகரணங்களையும் 1990 ஆம் ஆண்டு செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி) நிறுவனம் பொலிப்புறொப்பலீன் தொழில்நுட்பத்தினை யாழ் ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு அறிமுகப் படுத்தி ஐ.சி.ஆர்.சி மேலதிக நிதி பங்களிப்பினை வழங்குவதால் இந்த நிறுவனம் செயற்கை அவயவங்களை தற்போது ஆசிய சூழலுக்கு ஏற்ற வகையில், பிளாஸ்டிக்கில் தயாரித்து வழங்குகின்றது.

இந்த செயற்கை அவயங்களைத் தாயாரிக்கும் பணியில், உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சி பெற்ற பணியாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

இங்கு யாழ்.மாவட்டம் மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களில் இருந்தும் ஏராளமானோர் வருகைதந்து தங்கிநின்று பயிற்சிகளையும், உபகரணங்களையும் பெற்றுச் செல்கின்றனர். ஆண் பெண்களுக்கான தனி தனியான தங்குமிட விடுதிகள், உணவு என்பன இவர்களுக்கு இலவசமாகவே



இந்த நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது.

செயற்கைக் கால் பொருத்தப்பட்டவர்கள் நடந்து பழகுவதற்கு ஏற்றவகையில் மணல் பிரதேசங்கள், கடற்கரை போன்ற தரையமைப்பு பல்வேறு சிறப்பு அமைப்புகள் இந்நிறுவனத்துள்ளேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், விசேட தேவையுடையோர் நடமாடுவதற்கு தேவையான சக்கர இருக்கைகள் முச்சக்கர வண்டிகள், ஊன்று கோல்கள் போன்றவற்றை பொருத்தமான அளவுகளில் தயாரித்து வழங்குவதுடன் இயன்மருத்துவ சேவையைவழங்குவதுடன் சத்திரசிகிச்சைமூலம் அவயவங்கள் அகற்றப்பட்டோரை வாராந்தம் வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டு செயற்கை அவயவங்கள் பொருத்துவதற்கு வேண்டிய அவயவ முன்பராமரிப்பு ஆலோசனைகளையும் வழங்குகிறது

ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் பயனடைந்தவர்களுக்கு சுழற்சிமுறையிலான சுயதொழில் கடனுதவி பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா பணம் என்பன வழங்கப்படுகின்றன.

நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி.தி.யோகநாதன் தலைவர் வைத்தியர் திருமதி.ஜெ.கணேசமூர்த்தி பிரதித்தலைவர் திருமதி.சி..குணரட்ணம் திட்டச்செயலாளர்.திருமதி.எ.அலோசியஸ் உதவிச்செயலாளர்.டாக்டர்.திருமதி அ.சிறீதரன் பொருளாளர் டாக்டர்.திருமதி.செ.தேய்வேந்திரன் ஆகியோர் பணியாற்றுகின்றனர்

# வவுனியா அரச அதிபர் ஆளுநருடன் சந்திப்பு



(வவுனியா)

வவுனியா மாவட்டத்திற்கு புதிதாக நியமனம் பெற்ற அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர வட மாகாண ஆளுநர் ஜிஏ. சந்திரசிறியை வவுனியாவிலுள்ள ஆளுநர் உபஅவலகத்தில் கடந்த 21 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது வவுனியாமாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் நடைமுறையிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

புதிதாக நியமனம் பெற்ற அரச அதிபர்.எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸிடமிருந்து கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடையூறுகளை விளைவிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

## - பொதுமக்கள் விசனம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை மத்திய பேருந்து நிலையப்பகுதிகளில் கட்டாக்காலிகளாக திரியும் கால் நடைகள் பெரும் இடையூறுகளை விளை விப்பதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பேருந்து நிலையத்தில் அண்மையில் பயணி ஒருவர் சந்தையில் இருந்து மரக்கறிகளை வாங்கி வந்து பயணிகள் நிழல் குடை இல்லாத பட்சத்தில் வேப்பமர நிழலின் கீழ் மரக்கறி பையை வைத்துவிட்டு கவனயீனமாக கடைக்கு சென்ற சமயம் மரக்கறிகளை மாடுகள் உண்டு விட்டன. இதனால் அப்பயணி விசனமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இக்கால்நடைகள் உண்ண உணவின்றி பருத்தித்துறை நகரசபையினால் வைக்கப்பட்டிருக்கும் குப்பை தொட்டிகளில் இருக்கும் குப்பைகளை சாப்பிடுவதுமட்டுமன்றி குப்பைகளும் அங்காங்கே சிதறடித்து விட்டு செல்கின்றன. இதில் குறிப்பாக பொலித்தீன் பைகளையும் சேர்த்து சாப்பிடுவதால் உயிராபத்தும் ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கின்றனர். மேலும் சிறியரக மற்றும் கனரக வாகனங்கள் வீதிகளில் வரும்பட்சத்தில் இக்கால்நடைகள் குறுக்கே போவதால் விபத்தும் ஏற்படும் அபாயம் உள்ளதெனவும் போக்குவரத்துக்கள் சிரமத்துடன் இடம் பெறுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இடையூறு விளைவிக்கும் இக் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த சம்பந் தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் கேரிக்கை விடுத்துள்ளனர். (116)

# வடமராட்சி வலய மாணவர்களின் கல்விதரத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு

(வடமராட்சி)

2011ஆம் ஆண்டு கா.பொ.த சாதாரணப்பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் வடமராட்ச்சி கல்விவலயப் பாடசாலைகளின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இப்பரிட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து தோற்றிய பரிச்சாத்திகள் 54.3 வீதமானவர்கள் சித்தி எய்தியுள்ளதுடன் அதிலும் யாழ். மாவட்டத்தில் 12 வலயங்களிலும் வடமராட்சி வலயம் 5 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

குறிப்பாக வடமராட்சியில் 15 மாணவர்களே 9 பாடத்திலும் ஏ தரச்சித்தி பெற்றுள்ளனர். இதில் 14 மாணவிகளும், ஒரு ஆண் மாணவனுமே பெற்றுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு 50.47 வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ,2011 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் வடமராட்சி வலயம் மிக வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே 2012 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண பரீட்சையின் பெறுபேறுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் பிள்ளைகளின் கல்வியில் கவனயீனமாக இருக்கும் பெற்றோர்களை அழைத்து பாடசாலை மட்டத்தில் விழிப்படைய செய்தும் பெற்றோர்க்ளை கவனமெடுத்து தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை தூண்டுவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் வடமராட்சி கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் கல்வியிலும் சாதனை படைக்கும் நிலை உருவாவதற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# தனியார் பேருந்து சேவையால் நன்மை

(வரணி)

வரணி பொதுச் சந்தையில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் மக்களின் நலன் கருதி தனியார் பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பயணிகள் பெரும் நன்மையடைந்துள்ளனர்.

தினமும் காலை 10.30 மணிக்கு சேவையில் ஈடுபட்டு வரும் இப்பேருந்து சேவையால் யாழ்.வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் தாம் பெரும் நன்மையடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். (153)

# தொழில் திணைக்கள கூட்டுறவு பிரிவின் மாணவர்களுக்கிடையிலான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்கள சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவு பிரிவினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே கவிதை, கட்டுரை, சித்திரம், சுவரொட்டி, வீடியோ போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

போட்டியின் தலைப்புக்களாக

கலந்துரையாடல் ஊடாக வேலைத்தள கூட்டுறவை கட்டி எழுப்புவோர், கூட்டுறவே தொழில் அமைதிக்கான வழி. தொழில் அமைதியின் ஊடாக பொருளாதாரத்தைமேம்படுத்துதல், நிறுவனங்களின் கூட்டுறவும், உற்பத்தித் திறனும், உற்பத்தித்திறன், வினைத்திறனுடனான உற்பத்தியில் கலந்துரையாடலின் பங்கு,

சிறந்த வேலைச்சூழல் உற்பத்திநிலை மேம்படுத்தும்,

போன்ற தலைப்புக்களின் கீழ் கவிதை 05 கவிகளைக் கொண்டவையாகவும் கட்டுரை 750 தொடக்கம் 1000 வரையான சொற்களிலும், சித்திரம், சுவரொட்டி பிறிசில் அட்டையில் வரையப்படல்வேண்டும்,. அத்துடன் வீடியோ 5 தொடக்கம் 10 நிமிடம் கொண்டவையாகவும் எம்.பி. 4 பிளேயர் அல்லது இறுவெட்டில் பதியப்படல்வேண்டும்.

சித்திரம் வரையும்போது தாளில் சிந்திரம் ஒரு அங்குலம் சுற்றிவர இடைவெளி விட்டு வரையப்படுவதுடன் ஆக்கங்கள் கையெழுத்துப்பிரதியில் வழங்கப்பட வேண்டும். போட்டியாளர்கள் ஆக்கங்களை எதிர்வரும் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகம், நாவலர் வீதி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# ஆண்களை தகுதியில்லாதவர்களாக நினைக்கிறார் ஜெயலலிதா

## அன்புமணி குற்றச்சாட்டு

(சென்னை)

தாலிக்கு தங்கத்தை இலவசமாகக் கொடுத்து ஆண்களை தகுதியில்லாதவர்களாக நினைக்கிறார் முதல்வர் ஜெயலலிதா என்று பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.


விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலத்தில் திருமண விழா மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி கொடி ஏற்றல் நிகழ்ச்சிகளில் பேசிய அவர், வரும் சட்டமன்றத் தேர்தலில் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி கிடையாது.

தனித்துப் போட்டியிட்டு 2016 ஆம் ஆண்டில் பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சியை பிடிக்கும். அதற்கு இலட்சக்கணக்கான இளைஞர்களை கட்சியில் சேர்க்க வேண்டும். விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க கூடிய விரைவில் இல்லாமல் போய் விடும்.

தமிழ்நாட்டை வன்னியர்களும், தாழ்த்தப்பட்ட்வர்களும் தான் ஆள வேண்டும். திராவிட கட்சிகள் 46 ஆண்டுகளாக நம்மை ஏமாற்றி வருகின்றன. தமிழ்நாட்டில் 3 கலாசாரங்கள் உள்ளது. ஒன்று சாராயம் இரண்டு சினிமா, மூன்று இலவசம். இலவசத்தால் தமிழக மக்கள் பிச்சைக்காரர்களாக மாறினார்கள்.



மக்கள் ஆடு, மாடு, மிக்சி, கிரைண்டருக்கு கையேந்தி நிற்கிறார்கள். தமிழர்கள் தன்மானத்தோடு வாழவேண்டும். தாலிக்கு தங்கத்தை இலவசமாகக் கொடுத்து ஆண்களை தகுதியில்லாதவர்களாக நினைக்கிறார் ஜெயலலிதா. கரும்பு தொன் ஒன்றுக்கு ஜெயலலிதா அரசு ரூபா 2,500 வழங்குவதாக கூறினார். ஆனால் இதுவரை வழங்கவில்லை என்று தொடர் குற்றச்சாட்டுக்களை வைத்தார்.




# பெற்றோல் விலை உயர்வை அடுத்து டீசல், காஸ் விலை உயர்வு



பெற்றோல் விலை உயர்வால் நாடு முழுவதும் மக்கள் கொதித்து போயுள்ள நிலையில், டீசல், காஸ் விலையும் உயருகிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை நிலவரத்துக்கு ஏற்ப பெற்றோல் விலையை உயர்த்திக் கொள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதனால் பெற்றோல் விலை பல முறை உயர்த்தப்பட்டது. அதிலும் இதுவரை இல்லாத அளவாக லீற்றருக்கு ரூபா 7.50 என உயர்த்தப்பட்டது.


அதே சமயம் டீசல், சமையல் காஸ், மண்ணெண்ணை போன்றவற்றின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததாலும், ரூபாய் மதிப்பு சரிந்ததாலும், பெற்றோல் விலையில் லீற்றருக்கு ரூபா 8 வரை நஷ்டம் ஏற்பட்டதாக கூறி, அதன் விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தின.

பெற்றோலை விட அதிகமாக பயன்படுத்தப்படும் டீசலின் விலையில் லீற்றருக்கு ரூ.15.35 வரை நஷ்டம் ஏற்படுவதாக எண்ணெய் நிறுவனங்கள் கூறியுள்ளன. அதனால், டீசல் விலையையும் உயர்த்த கோரியுள்ளன. அதேபோல் காஸ் சிலிண்டர் விலையில் ரூ.479, மண்ணெண்ணை விலையில் லீற்றருக்கு ரூபா 32.98 என்ற அளவில் இழப்பு ஏற்படுவதாகவும், அவற்றின் விலையை உயர்த்த வேண்டுமென்றும் நிறுவனங்கள் கோரியுள்ளன. இதையடுத்து டீசல், காஸ், கெரசின் விலைகளை உயர்த்துவது பற்றி மத்திய நிதிய மைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் அமைச்சர்கள் குழு நேற்று விவாதித்தது. இதனிடையே நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து, பெற்றோல் விலையை குறைக்கலாமா என்று மத்திய அரசு சிந்தித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# ரஜனி ரசிகர் மன்ற செயலர் இடைத்தேர்தலில் வேட்பு மனு

(சென்னை)

புதுக்கோட்டை இடைத்தேர்தலில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள மன்றச் செயலர் ஸ்ரீதர் மீது நடிகர் ரஜினிகாந்த் அதிருப்தியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. புதுக்கோட்டை இடைத்தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் கார்த்திக் தொண்டைமான, தே.மு.தி.க சார்பில் ஜாகீர் உசேனும் போட்டியிடுகின்றனர். இந்நிலையில் ரஜனி இரசிகர் மன்றத்தைச் சேர்ந்த ஸ்ரீதர் என்பவரும் தேர்தலில் போட்டியிட மனுத்தாக்கல் செய்துள்ளார்.



இது ரஜினியை அதிருப்தி அடையச் செய்துள்ளதாக கூறப்படுகிறது. போட்டியிடுவதிலிருந்து வாபஸ் பெறுமாறு அவர் ஸ்ரீதரை அறிவுறுத்தியிருப்பதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரம் குறித்து ரஜினி இரசிகர் மன்ற பொறுப்பாளரான சுதாகர் என்பவர் கூறுகையில், இரசிகர்கள் யார் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம், எந்தக் கட்சிக்காகவும் தேர்தல் வேலை செய்யலாம். அதை ஒருபோதும் ரஜினிகாந்த் தடுத்ததில்லை.

ஆனால் தேர்தல் பணியில் ஈடுபடும் யாரும் ரஜினியின் பெயரையோ, மன்றக்கொடியையோ பயன்படுத்தக் கூடாது. முதலில் ரசிகர்கள் தங்களது குடும்பங்களைத்தான் கவனிக்க வேண்டும்.

இதைத்தான் எப்போதும் ரஜினி சொல்லி வருகிறார். இடைத தேர்தலில் ரஜினி இரசிகர் மன்றத்தைச் சேர்ந்த ஒருவர் போட்டியிடுவது எதிர்கால அரசியலில் புயலைக் கிளப்பும் என்று அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

# அப்பா முதல்வராக இருந்தார் மகன் சொத்து சேர்த்தார்

(ஐதராபாத்)

தனது தந்தை முதல்வராக இருந்தபோது அமைச்சர்களை அழைத்து பல சட்ட மீறல்கள் நடததி தனக்கு சாதகமாக செயறபட ஆட்சியை பயன்படுத்தி சொத்துக்களை குவித்த ஜெகன் மோகன் ரெட்டியை சி.பி.ஐ. பொலிஸார் கைது செய்யவுள்ளதாக தெரியவருகின்றது.

காங்கிரஸ் கட்சியில் இருந்து ஆந்திர மாநிலத்தில் மக்கள் மனதை கவர்ந்த வைய் ராஜசேகர ரெட்டிமுதல்வராக இருநத நேரத்தில் அவர் மீது மக்கள் அன்பும், மரியாதையும் அளவுககு அதிகமாவே வைத்திருந்தனர்.

2009 இல் ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கி பலியான போது ஆந்திர மாநிலமே கண்ணீர் விட்டு அழுதது. துயரம் தாங்காமல் பல விவசாயிகள் தற்கொலை செய்தனர். அந்த அளவிற்கு அனுதாபம் வீசியது. இவை அனைத்தையும் கீழ் நோக்கி கொண்டு தள்ளியிருக்கிறார் மகன்.

ஆந்திர கர்நாடக எல்லையில் சுரங்கம் முறைகேடுதொடர்பாக ரெட்டி சகோதரர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த சுரங்க முறைகேட்டில் ஜெகனுக்கும் தொடர்பு இருந்தது தெரிய வந்தது. இந்நிலையில் வருமான வரித்துறையினர் ஜெகன் சொத்துக்கள் குறித்து பட்டியல் எடுத்தனர். இதில் அளவுக்கு அதிகமான சொத்து சேர்த்தது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின் படி சி.பி.ஐ. தனது விசாரணையை ஆரம்பித்தது. அவருக்கு சொந்தமான சாக்சி டி.வி.,மற்றும் இவருடைய பங்களாவில் சோதனை நடத்தப்பட்டதில் ஜெகன் நடத்தி வரும் கம்பெனிகளுக்கு அரசு இடத்தை ஒதுக்கி முறைகேடு செய்தது. மற்றும் நகர்ப்புற சட்டங்களை மாற்றி தனக்கு சாதமாக பயன்படுத்தியது என பல்வேறு முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு பதியப்பட்டுள்ளது.



பல அமைச்சர்களை தவறான பாதைக்கும் அழைத்து சென்றுள்ளார். இதற்கிடையில் ஆந்திர முதலீடுமற்றும் உள்கட்டமைப்பு துறை அமைச்சர் வெங்கடரமணாவை சி.பி.ஐ. நேற்றுமுன்தினம் கைது செய்தது. இன்றும் ஒரு அமைச்சர் ராஜினாமா செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் திலீப் மரணம்


(மைசூர்)



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகரான திலீப் மாரடைப்பால் மரணம் அடைந்தார். தமிழ் திரையுலகில் 1980 களில் முன்னணி நடிகராக இருந்தவர் திலீப். திலீப் கடந்த சில நாட்களாக சிறுநீரக கோளாறால் அவதிபட்டு வந்தார். சிறுநீரக கோளாறால் திலீப்பை மைசூரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு டாக்டர்கள் அவருக்கு தீவிர சிகிச்சையளித்து வந்தனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் உடல்நிலை மிகவும் மோசமானது. டாக்டர்கள் திலீப் உயிரை காப்பாற்ற போராடினர். சிகிச்சை பலனின்றி நடிகர் திலீப் நேற்று மரணம் அடைந்தார். அவருக்கு வயது 52.

திலீப்புக்கு ஹேமா என்ற மனைவியும், பவ்யா, மவுரியா என மகனும், மகளும் உள்ளனர். திலீப் உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக மைசூரில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டு உள்ளது. நடிகர்-நடிகைகள் உள்ளிட்ட திரையுலகினர் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். வறுமையின் நிறம் சிவப்பு, தூங்காதே தம்பி தூங்காதே, சம்சாரம் அது மின்சாரம், பெண்மணி அவள் கண்மணி, மாப்பிள்ளை படங்களில் முக்கிய கேரக்டரில் நடிகர் திலீப் நடித்துள்ளார.

# ஒரு நாள் நிகழ்விற்கு 23 கோடி செலவு



கடற்படை அணிவகுப்பு மரியாதையை ஏற்க, ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் பங்கேற்ற ஒரு நாள் நிகழ்ச்சிக்காக, 23 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது: விருந்தினர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு மட்டுமே 12 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது.

இந்திய கடற்படையின் தயார் நிலை மற்றும் தளவாடங்களின் திறன் ஆகியவற்றை, ஜனாதிபதி நேரில் பார்வையிட்டு ஆயவு செயது, அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் சம்பிரதாய நிகழ்ச்சி, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிகழும். ஜனாதிபதியாக பிரதிபா பாட்டீல் பொறுப்பேற்ற பின், கடந்தாண்டு டிசம்பர் 20 ஆம் திகதி மும்பையில் இந்நிகழ்ச்சி நடந்தது.


கடற்படையைச் சேர்ந்த, 81 கப்பல்கள், நான்கு நீர்மூழ்கி, 44 கடற்படை விமானங்கள் மற்றும் இந்திய கடலோர பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை பிரதிபா பாட்டீல் ஏற்றுக் கொண்டார்.

இந்த ஒரு நாள், சம்பிரதாய நிகழ்ச்சிக்காக, கடற்படை சார்பில, எவ்வளவு பணம் செலவிடப்பட்டது என்பது குறித்த விவரங்களை தெரிவிக்குமாறு, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ், எஸ்.சி.அகர்வால் என்பவர் கோரியிருந்தார்.

இதற்கு கடற்படையின் மேற்கு கொமாண்டரின் தலைமையகம் அளித்துள்ள பதிலில், ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் பஙகேற்ற நிகழ்ச்சிக்காக மொத்தம், 23 கோடி ரூபாய் செலவானது. விருநதிற்கு வந்திருந்த விருந்தினர்களுக்கு தலா, 83 ஒரு லீற்றர் "மினரல் வோட்டர் போத்தல்கள் வழங்குவதற்காக மட்டும், 12 இலட்சம் ரூபாய் செலவானது.

ஒட்டுமொத்தமாக பணியாளர்களுக்கு கூலித்தொகைக்கு ஒரு கோடி ரூபாயும் செலவானது. கடற்படை அளித்த பதிலில் கூறப்பட்டுள்ளது. பண வீக்கம், விலைவாசி ஏற்றம், ரூபாய் மதிப்பு வீழ்ச்சி போன்ற பல்வேறு பிரச்சினைகளால் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், சம்பிரதாயத்துக்காக ஒரு நாள் நடக்கும் நிகழ்ச்சிக்கு, 23 கோடி ரூபாயை வீணடித்திருப்பது கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

# அணு விசை நீர்மூழ்கி கப்பலில் பயங்கர தீ விபத்து



அமெரிக்காவின் மேய்ன் மாகாணத்தில் உள்ள துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, அணு விசை நீர்மூழ்கி கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 பேர் காயமடைந்தனர். இந்த விபத்தில் அணு உலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. மியாமி கடற்கரைப் பகுதியில் உள்ள போர்ட்ஸ்மௌத் கடற்படைத் துறைமுகத்தில் இந்த அணு விசை நீர்மூழ்கிக் கப்பல் பழுதுபார்க்கும் பணிக்காக நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் புதன்கிழமை இரவு இந்தக் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டதாக துறைமுக செய்தித் தொடர்பாளர் டாமி ரெமிக் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கப்பலின் முன் பகுதியில் தீப்பற்றியது. இப் பகுதியில் ஊழியர்கள் தங்குமிடம் மற்றும் கட்டுப்பாட்டு அறை உள்ளது. கடற்படைக்குச் சொந்தமான இந்த நீர்மூழ்கியில் எவ்வித ஆயுதங்களும் இல்லை. பழுதுபார்க்கும் பணிக்காக நிறுததப்பட்டிருந்ததால், ஆயுதங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. தீ உடனடியாக அணைக்கப்பட்டதால் பெரும் ஆபத்து தவிர்க்கப் பட்டது என்றார்.

காயமடைந்தவர்களில் 5 பேர் தீயணைப்புப் படை வீரர்களாவர். இருவர் கப்பல் பணியாளர்களாவர். இதில் 6 பேருக்கு லேசான காயமும் ஒருவருக்கு மட்டுமே மருத்துவமனையில் தங்கி சிகிக்சை மேற்கொள்ளும் அளவுக்கு காயமேற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நீர்மூழ்கியில் உள்ள அணு உலையின் செயற்பாடு இரண்டு மாதங்களுக்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

# ஒரு செக்கனுக்கு வருமானம் 598 அமெரிக்க டொலர்



கினா ரினேஹார்ட் எனும் அவுஸ்ரேலியா சுரங்கத் தொழில் அதிபர் உலகப்பணக்காரப் பெண்கள் பிரிவில் இவ்வாண்டுக்கான உலகின் முதலாவது பணக்காரியாக தெரிவாகியுள்ளதாகக் அவுஸ்ரேலியாவின் பிஆர்டபிள்யு பத்திரிகை தெரிவித்துள்ளது. இதற்கு முன் 7 வருடங்களாக முதலாம் இடத்திலிருந்த கிரிஸ்டி வால்டோனிடமிருந்து முதலாமிடத்தை இவர் பறித்துக் கொண்டுள்ளார்.

ரினேஹார்ட்டின் சொத்து மதிப்பு 29.7 பில்லியன் டொலர்களாகும். 2 ஆம் இடத்திலுள்ள வால்டோனின் சொத்து மதிப்பு 26 பில்லியன் டொலர்களாகும். இதில் முதலிடம் வகிக்கும் ரினேஹார்ட் ஒவ்வொரு அரை மணித்தியாலத்திற்கு, பெறும் ஊதியம் 1 மில்லியன் டொலர்கள், ஒவ்வொரு செக்கனுக்கும் சம்பாதிக்கும் தொகை 598 டொலர்கள்.

உலகில் உள்ள பணக்கார ஆண்களில் முதலாவது பணக்காரராக அமெரிக்காவைச் சேர்ந்த மைக்ரோசா.:.ப்ட் கம்பெனியின் தலைவர் பில்கேட்ஸ் பல வருடங்களாக அசைக்க முடியாமல் இருநதார். ஆனால் இவ்வருடம் இவரைப் பின்னுக்குத் தள்ளி மெக்ஸிக்கோவைச் சேர்ந்த தொழிலதிபரான கார்லோஸ் ஸ்லிம் முதலிடத்தை பிடித்துக் கொண்டார். உலகப் பணக்காரர்களின் வரிசையில் முதலாவது இடத்தில் இருக்கும் ஆண், பெண் இருவரும் அமெரிக்காவிற்கு வெளியே என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் மகளிர் பாடசாலையில் விஷவாயு தாக்குதல்

ஆப்கானிஸ்தானிலுள்ள மகளிர் பாடசாலையொன்றில் விஷவாயு கசியவிடப்பட்டதால் 130 மாணவிகளும் 3 ஆசிரியைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானின் வட பிராந்திய மாகாணமான தாகாரின் டாலோகான் நகரில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மர்மமான இந்த விஷவாயுவை சுவாசித்த மாணவிகளும் ஆசிரியைகளும் மயங்கிவிழுந்ததாக மாகாணதத்தின் பொதுச்சுகாதார திணைக்களத்தின் தலைவர் ஹபிஸுல்லா சபி கூறினார். 55 மாணவிகள் சிகிச்சையின்பின் வீடு திரும்பியதாகவும் ஏனையோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஒரு மாதகாலத்தில் இடம்பெற்ற இத்தகைய 3 ஆவது சம்பவம் இதுவாகும்.

இச்சம்பவத்திற்கு தலிபான் அமைப்பினர்மீது ஆப்கானிஸ்தான் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர். பாடசாலைகளில் நஞ்சு கலப்பதன் மூலம் அவர்



கள் அச்சத்தை ஏற்படுத்த முனைகின்றனர். தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதை குடும்பங்கள் தவிர்க்கச் செய்யவதற்கு அவர்கள் முனைகின்றனர் என பொலிஸ் பேச்சாளர் கலிலுல்லாஹ் ஆஸிர் கூறினார். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியிலிருந்த காலப்பகுதியில் பாடசாலைக்கு மாணவிகள் செல்வது அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப் பிடத்தககது.

# அச்சுறுத்தும் போலியோ நோய்



ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் நைஜீரியாவில் போலியோ கடுமையாக பரவும் ஒரு நோயாகவே இருக்கிறது. இதேவேளை, போலியோ ஒழிக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்ட சில நாடுகளிலும் அது மீண்டும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போர் காரணமாகவும், தொற்றுநோய் தடுப்பு மருந்துகள் மீது போதுமான நம்பிக்கை இல்லாமை காரணமாகவும் சில நாடுகளில் மிகச் சிறிய அளவிலான குழந்தைகளுக்கு மாத்திரமே போலியோ பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும ஆசியாவில் கடந்த இரண்டு வருடங்களில் போலியோ நோய் கடுமையாக பாதித்துள்ளதை அடுத்து, உலக சுகாதார நிறுவனம் போலியோ குறித்து ஒரு உலக சுகாதார அவசர நிலையை பிரகடனம் செய்யவுள்ளது. போலியோவை ஒழிப்பதற்கான உலக முயற்சி தோல்வியடையுமானால், அந்த நோய் பாரிய அளவில் பரவுவதை காணக்கூடிய நிலை உருவாகும் என்று உலக சுகாதார நிறுவன அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

# ஐ.நா மனித உரிமைகள் தலைவராக நவநீதம்பிள்ளை தெரிவு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தலைவராக நவிநீதம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

இவர் இரண்டு ஆண்டுகள் மனித உரிமைகள் தலைவராக பதவி வகிப்பார். வாக்கெடுப்பு ஏதுமின்றி, ஒருமனதாக நவநீதம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். இவர் தென் ஆப்ரிக்காவில் முன்னாள் மூத்த நீதிபதியாக பதவி வகித்தவர். இதன் பின்னர் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் குழுவில் முக்கிய உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# நீதிமன்ற தீர்ப்பை மதிக்க வேண்டும் அமெரிக்காவிற்கு பாகிஸ்தான் தெரிவிப்பு

அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் இருப்பிடம் குறித்து அமெரிக்காவுக்கு தகவல் அளித்த மருத்துவர் ஷாகில் அப்ரிடிக்கு 33 வருட சிறைத் தண்டனை வழங்கி பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஒசாமா பின்லேடன் கடந்தாண்டு மே மாதம் அமெரிக்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது மறைவிடம் குறித்து அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புக்கு(சிஐஏ) மருத்துவர் ஷாகில் அப்ரிடி தகவல் அளித்ததாக கூறப்பட்டது. எனவே அப்ரிடி மீது வழக்கு பதிவு செய்ய்ப்பட்டது,

இந்த வழக்கில் அவருக்கு 33 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்புக்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்ததுடன், இதனை ஏற்க முடியாது, எனவே அப்ரிடியை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கூறியது.

ஆனால் இதைப் பாகிஸ்தான் ஏற்கவில்லை, இதுகுறித்து பாகிஸ்தான் வெளிவிகாரத்துறை செய்தி தொடர்பாளர் அகமது கான் கூறுகையில், சிஐஏவுக்கு உதவிய குற்றத்துக்கு சட்டப்படி தான் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதனால் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அமெரிக்கா மதிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.



பிரிட்டனின் மிகப் பெரிய மலர்க் கண்காட்சிகளில் ஒன்றான செல்ஸீ மலர்க் கண்காட்சி கடந்த செவ்வாயன்று ஆரம்பமாகியுள்ளது. 1913ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் ஐந்து நாட்களுக்கு இக்கண்காட்சி நடந்துவருகிறது. செல்ஸீ மருத்துவமனை திடலில் இது நடக்கிறது.

தாய்லாந்து பாணியில் அமைக்கப்பட்ட மலர்ப் பூங்கா இக்கண்காட்சியின் சிறப்பம்சமாகும்.

# கிரீன்லாந்தில் நில நடுக்கம்



கிரீன்லாந்து கடல் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க நிலயியல் ஆய்வு தெரிவித்துள்ளது.

இந்நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.5 ஆக பதிவானது. இந்நிலநடுக்கம் கிரீன்லாந்து கடலின் 11 கி.மீ ஆழத்தில் நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சினிமா....!** தமிழ் நாட்டின் மிகப பெரிய கனவுத் தொழிற்சாலை. ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு.. ஆயிரக்கணக் கானவர்களின் திறமைகள், ஆயிரக் கணக்கானவர்களின் கற்பனைகள், ஆயிரக்கணக்கானவர்களின் உழைப்பு கலந்த ஒரு மிகப்பெரிய முதலீடு.

எந்திரனின் 100 கோடி மதிப்பி லான தயாரிப்பு தமிழ் நாட்டு சினிமா முதலீட்டிற்கு சிறந்ததோர் உதாரணம். ஷங்கர், ரஜினி, ஐஸ் வர்யா ராய், ஏ.ஆர். ரஹ்மான், கலாநிதி மாறன் என்று அதியுட்ச பலங்களின் கூட்டணியில் வசூல் சாதனை படைத்தது.

வெற்றி பெற்ற சினிமாக்களின் முதுகெலும்பாக கதை



ஷங்கர், ரஜினி, ஐஸ்வர்யா ராய், ஏ.ஆர். ரஹ்மான், கலாநிதி மாறன் என்று அதியுட்ச பலங்களின் கூட்டணியில் வசூல் சாதனை படைத்தது.

புதுமாதிரியாக காட்டினால் தான் பார்வையாளர்களும் ஆர்வமாக பார்ப்பார்கள்.

அடுத்ததாக சினிமாவில் முக்கிய மானது எடிட்டிங் (Editing) என்று சொல்லப்படும் காட்சிகளை வெட்டி வெட்டி ஒட்டுவதாகும். ஒரு நேர்த்தி யான எடிட்டிங் உள்ள படம் தான் பார்வையாளரை சலிப்பில் இருந்து காப்பாற்றும்.

உதாரணமாக ஒரு காளைச்சண் டையை படமாக்கும் போது திக்கு திக்காகத் தான் படமாக்குவார்கள். பார்வையாளர்கள்; அவர்களின் முக பிரதிபலிப்பு; காளை மாடுகள்; அவை பிடிக்கப்படுவது; குத்துவது; இரத்தம்; இவ்வாறு பலதையும் படமாக எடுத்து எடிட்டர் கையில் கொடுத்தால் அவர் தான் அதை ஒரு 03 நிமிடமோ 02 நிமிடமோ ஓடக்கூடிய காளைச்சண்டை ஆக் குவார்.

காளை மாடுகளை யும், சண்டைகளையும், பார்வையாளர்களையும் மாறி மாறி ஒரு த்ரில் வரக்கூடிய வகையில்,

அன்பளிப்பு பணத்தை எடுப்பார்கள், சேலையை சரிசெய்வார்கள் இப்படி சகலதும் அங்கு வீடியோ ஆக்கப்படும் திரும்ப அதைப்பார்க்கும் போது, போதும் போதும் என் றாகி விடும்.

இதையே திறமையாக எடிட்டிங் செய்தால் 3 மணிநேர கல்யாண வீடியோ ஒன்றை ஒரு மணித்தியாலத்தில் சுவா ரஷ்யமாக காட்ட முடி யும். இதற்கு எடிட்டர் கற்பனை வளம் கொண்ட வராகவும் தொழில் நுட்ப அறிவு கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அடுத்ததாக சினிமாவில் முக்கி யம் பெறுவது ஒளிப்பதிவு. ஒளிப்ப திவு எனும் போது கமெராவின் கோணங்கள் முக்கியம் பெறுகிறது. ‘காதல்’ படத்தில் கதாநாயகன் பரத் தின் தயக்கத்தை, தரையில் கமெ ராவை வைத்து, அவரது கால்களின் அசைவை மட்டும் படம்பிடித்து ‘தயக் கத்தை’ திரைக்கதை ஆக்கினார்கள்.

நீண்ட நேரமாக காத்திருத்தலை



பொழுது விடிந்தது என்பதைக் காட்ட தூரதர்ஷன் அதி காலை ஒளிபரப்பும் கீதம் பின்னணியாக வருமாறு செய்து திரைக்கதை அமைத்தார்கள்.

என்பவை அன்றாடம் நாம் காணும் சம்பவங்களை கூர்மையாக கவ னித்து சிறப்பான திரைக்கதை மூலம் வெற்றி பெற்றவை.

அடுத்ததாக சினிமாவுக்கு பலம் சேர்ப்பது இசை, இதில் இரண்டு விதம் ஒன்று பாடல்கள், மற்றையது பின்னணி இசை. இவை இரண்டிற்கும் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு ஒஸ்கார் விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் எம்.எஸ்.விஸ்வநாதன் மற்றும் இளையராஜா ஆகியோர்

# செலுலோயிட் கனவு

- ஏ.கே.

இருக்கின்றதென்றாலும் அந்தக் கதையை செல்லும் விதம் அதா வது திரைக்கதை என்பது நிரம்ப வும் முக்கியமானது.

இந்த வகையில் சொல்லப்போனால மணிரத்னம், ஷங்கர், கே.எஸ்.ரவிக் குமார், சேரன், பார்த்திபன் போன் றோர் சிறந்த கதைசொல்லிகள் அதாவது சிறந்த திரைக்கதையா ளர்கள்.

கதைக்கும் திரைக்கதைக்கும் என்ன வித்தியாசம்? பொழுது விடிந்தது.. என்பதை கதையாக கொள்வோமானால் அதை பலவித மாக திரையில் காட்டலாம். ஒன் றில் உதய சூரியனைக் காட்டி பின்னர் பறவைகள் பறப்பது, கோவில் மணியோசை முதலிய வற்றை திரையில் காண்பிப்பது பொழுது விடிந்தது, என்பதற்கான திரைக்கதையாக இருக்கும். அல் லது ஒரு வீட்டைக்காட்டி சாம் பிராணி புகை, சுப்ரபாதம், காலை கோப்பி குடிப்பது முத லானவற்றையும் காட்ட லாம். அல்லது ஒரு கடிகாரத்தை கமெராவில் குவியப்படுத்தி (focus) நேரமாற்றத்தை காட்டு வதனூடாக பொழுது விடிந்தது எனக் காட் டலாம்.

‘சங்கீதஸ்வரங்கள் ஏழே கணக்கா... இன்னும் இருக்கா... என்னவோ மயக் கம்... என்ற பாடலில் பொழுது விடிந்தது என்பதைக் காட்ட தூர• தர்ஷன் அதிகாலை ஒளிபரப்பும் கீதம் பின் னணியாக வருமாறு செய்து திரைக்கதை அமைத்தார்கள்.

இவ்வாறு எளிய ஒரு கதைக்கும் விதவிதமாக திரைக்கதை அமைத்து பார்வையாளரை கட்டிப் போட லாம். கதையை விட திரைக் கதைக்கே அதிக நேரம் செலவிட வேண்டி வரும். எதையுமே

காட்சிகளை அளவாக வெட்டி ஒட்டி ஒரு 02 நிமிட காட்சியில் ஒரு மணி நேரம் படமாக்கப்பட்ட காளைச் சண் டையை மிகுந்த விறுவிறுப்புடன் காட்ட முடியும்.

எமது சாமத்திய வீடு, கலியாண வீடு வீடியோக்கள் சலிப்படைந்து போவதற்கும், ஓடவிட்டுப் (Forward) பார்ப்பதற்கும் காரணம் காட்சிய மைப்பு நீட்சி அடைதலே.

மணப்பெண் அலங்காரத்தைக் காட்ட வெளிக்கிட்டால் உத்தரவாத மாக அதே ஒரு அரைமணித்தியா லம் ஓடும். அதிலும் மகா கடுப்பேற் றுவது மணவறையில் வரிசையாக நின்று வீடியோ பிடித்துக் கொள் வது. ஒன்றுக்கு மூன்று தரம் கமெரா இடமிருந்து வலமாக, வலமிருந்து



‘காதல்’ படத்தில், தரையில் கமெராவை வைத்து, கதாநாயகனின் கால்களின் அசைவை மட்டும் படம் பிடித்து ‘தயக்கத்தை; திரைக்கதை ஆக்கினார்கள்.

இடமாக அசைந்து காட்சிப்படுத் துவார்கள். சிலர் விவஸ்தையே இல்லாமல் கொட்டாவி விடுவார்கள், மூக்கை நோண்டுவார்கள், ‘மறை வாக’ வைத்த இடத்திலிருந்து

வெற்று தேநீர் கிளாஸ், வெற்று பெப்சி போத்தல், சிகரெட் அடிக்கட் டைகள் என்பவற்றுக்கு அருகில் கமெராவை வைத்து அதை மையப் படுத்துவதன் மூலம் ஒரு ரீ, பெப்சி, பல சிகரெட்களை முடித்தும் காத்துக கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது.

இவ்வாறாக ஒரு கதையை எப்படி சொல்வது என்ப திலும், ஒரு காட்சியை எப்படி காட்டுவது என்ப திலும் சினிமாவின் வெற்றி தங்கியுள்ளது. வழமை யான கதையோடு ‘கில்லி’ என்ற விஜயின் படம் வெற்றி பெற்றதற்கு சிறந்த எடிட்டிங்கே காரணம். அடுத்த காட்சி என்ன என்பதன் விறுவிறுப்பு படத்தை இறுதிவரை பார்க்க வைத்து வெற்றி பெறவைத்தது.



வழமையான கதையோடு ‘கில்லி’ என்ற விஜயின் படம் வெற்றி பெற்றதற்கு சிறந்த எடிட்டிங்கே காரணம்.

பாரதிராஜா, பாலச் சந்தர், பாக்கியராஜ், பாண்டியராஜன் என்போர் வித்தியாசமான திரைக்கதை, வித்தி யாசமான காட்சிகளால் வெற்றி பெற்ற வர்கள். இதிலும் பாரதிராஜா முதன் முதலாக கிராமத்து மண்வாசனையை செலுலோயிட்டில் இழைத்தார்.

பாலச்சந்தர் சாதாரண கதை மாந் தர்களைக் கதாநாயகர்களாக்கி வெற்றி பெற்றார். பாக்கியராஜ், பாண்டிய ராஜன் ஆகியோர் கதாநாயகனுக் கான தேவைப்பாடுகளை உடைத் தெறிந்து வெற்றி பெற்றார்கள்.

சிக்கலான கதைகளையும் நேர்த்தி யாக சொல்லி உளவியல் வெற்றி பெற்றவர் இயக்குநர் பாலா. யதார்த் தமான கதைகளை பாசாங்கு இல் லாமல் சொல்வதில் இயக்குநர் ராதா மோகன் வெற்றி பெற்றவர். அழகிய தீயே, மொழி போன்ற படங்கள் அவ ரின் திறமைக்கு சான்று.

அண்மைய படங்களான குள்ளநரிக் கூட்டம், அங்காடித்தெரு, அழகர் சாமியின் குதிரை, சுப்பிரமணியபுரம

பாரம்பரியமான வாத்தியங்களை வைத்தும், இளம் இசையமைப்பா ளர்களான ஏ.ஆர்.ரஹ்மான், ஹாரிஸ் ஜெயராஜ் போன்றோர் இலத்திரனி யல் வாத்தியங்களை வைத்தும் இசை யில் ஒரு கலக்கு கலக்கினாகள்.

சினிமா இசை இல்லாத நாளே தமிழர் வாழ்வில் இல்லை என்று சொல்லுமளவிற்கு சினிமா இசை எம்முடன் இரண்டறக்கலந்துள்ளது. பக்தி இசை, கர்நாடக இசை எல் லாம் இரண்டாம் பட்சம் தான்.

மேற்குறிப்பிட்டவை சினிமாவில் முக்கிய இடத்தைப் பெற்றாலும் பாட லாசிரியர், நடனம், சண்டை அமைப் பாளர்கள், மக்கள் தொடர்பாளர்கள், ஒலிக்கலவையாளர் என்ற பல்வேறு கலைஞர்களின் கூட்டே ஒரு சினிமா வெற்றிக்கு காரணம்.

அந்த வகையில் சினிமா ஒரு பிரமாண்டமான மக்கள் தொடர்பு சாதனமாகும் (Mass Media). யாழ்ப்பா ணத்தில் தற்போது குறும்படங்களுக் கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டு அனுபவங்களையும் பெற்றுக் கொண் டால் சிறப்பான ஒரு சினிமாவை இலங்கைத்தமிழராலும் தரமுடியும்.

அது வரை சினிமா ஒரு செலுலோயிட் கனவுதான்.....!

# மனித உரிமை சட்டங்களை மீறியோருக்கு தண்டனை இல்லை

## அரசை குறைகூறுகிறது மன்னிப்புச் சபை

(ஜெனிவா)

இலங்கையில் மனித உரிமை சட்டங்களை மீறியோர் தொடர்பாக எவரும் தண்டிக்கப்படாமல் உள்ள பல சம்பவங்கள் உள்ளதாகவும், இவ்வாறு தண்டனை வழங்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமல் இருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

பல்வேறு நாடுகளில் உள்ள மனித உரிமைகள் நிலவரம் குறித்து தனது ஆண்டறிக்கையில் அந்த அமைப்பு விபரமாக குறிப்பிட்டுள்ளது.

அதில் இலங்கை குறித்து குறிப்பிடும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தன்னிச்சையாக மக்களைத் தடுத்து வைப்பதாகவும் சித்திரவதை செய்வதாகவும் முறையற்ற விதத்திலும் நடத்தி வருகிறது. அத்துடன் பொதுமக்கள் காணாமற்போதல் சம்பவங்களும் நடைபெற்று வருகிறது.

2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போரில் இரு தரப்பும் செய்த போர்க்குற்றச் சாட்டுக்களை அரசாங்கம் நிராகரித்து வந்ததால், அது குறித்து ஒரு சர்வதேச சுயாதீன விசாரணை நடத்துமாறு மன்னிப்புச் சபை கோரும் நிலைமை உருவானது என்றும் அது கூறியுள்ளது.

## சண்டிலிப்பாய்...

காணப்பட்டு பொலிஸாரிடம் அறிவிக்கப்பட்டு பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தான். வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் பரிசோதனை அறிக்கையுடன் மல்லாகம் நீதிமன்றில் இச்சிறுவன் நேற்று ஆஜர் செய்யப்பட்டான். இவனது தாயாரும் பிரசன்னமாயிருந்தார்.

வழக்கு விசாரணைகள் நடைபெற்றபோது பாதிக்கப்பட்ட சிறுவனின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி கே.சுகாஸ் அற்புதராஜ் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் சிறுவர்கள் கடத்தப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும், இக்கடத்தலில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுத்து அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ்வழக்கின் பிரதான சந்தேகநபர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரிவித்தபோது நீதவான் பிரதான சந்தேக நபரை உடனடியாக கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவின்பேரில் சிறுவன் மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு வைத்தியரினால் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் மல்லாகம் நீதவான் முன்னிலையில் கொண்டு செல்லப்பட்டு தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இவ்வழக்கில் அப்துல்லா மொகமட் ஜமீல், மொகமட் சுல்தான், மொகமட் றியாஸ், மொகமட் முஸ்தபா, மொகமட் நஜீம் ஆகியோர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நஜீப் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மற்றைய இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

மீண்டும் இவ்வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (137)

## ஒரு கிராமத்திற்கு...

செய்யப்பட்ட 80 பேரில் 37 அரச உத்தியோகத்தர்கள் அல்லாதோருக்கு தலா 2 இலட்சம் ரூபா மற்றும் 18 அரச உத்தியோகத்தர்களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா கடன் திட்டத்திற்கமைய முதற்கட்டமாக காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஏனைய 25 அரச உத்தியோகத்தர்களுக்கு விரைவில் காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

இதனிடையே அரச உத்தியோகத்தர்களுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சாதாரண வேலைத்திட்டத்திற்கமைய 19 புதிய வீடுகளுக்கும் 37 வீடுகள் தரமுயர்த்தப்படுவதற்கும் முதற்கட்ட காசோலைகள் வழங்கப்பட்டன.

அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் திட்டங்கள் மக்கள் வங்கியுடன் இணைந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரட்ணம், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் பத்மநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மனித உரிமை...

சிறைச்சாலைகளிலும் மோசமான நிலையே காணப்படுகின்றது. சிறைச்சாலைகளில் சனநெரிசல் காணப்படுவதுடன், அங்கு போதியளவு வசதிகளும் இல்லை.

படைத்தரப்பினராலோ அல்லது பொலிஸாராலோ கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுள் பலர் விசாரணைகளின் போது உயிரிழந்துள்ளனர். விசாரணைகள் இன்றி பல அரசியல் கைதிகள் நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஒன்றுகூடும் உரிமை மற்றும் நடமாடும் சுதந்திரம் போன்ற பொதுமக்களின் உரிமைகளில் அரசாங்கம் விதிகளுக்கு முரணாக கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. அத்துடன், பரந்தளவிலான சோதனைச் சாவடிகள் மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இலங்கையில் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தால் அரச வளங்கள் தேர்தல் விதிகளுக்கு முரணாக பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தேர்தல்கள் இரண்டும் நீதிக்கு முரணான வகையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தும் வகையில் நடத்தப்பட்டதாக சந்தேகங்கள் உள்ளன.

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்பாகுபாடுகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட எண்ணிலடங்காத தமிழ் மக்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள், சிறுவர் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவதும் காணப்படுகின்றது என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மனிதவுரிமை மீறல்கள் இடம்பெறும் நாடுகள் தொடர்பில் அமெரிக்கா உன்னிப்பாக கண்காணித்து வருகின்றது என்பதனை இவ்வறிக்கையின் மூலம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

## சஞ்சிகை வெளியீடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய கணித விஞ்ஞான மன்ற 'மதி' சஞ்சிகை வெளியீடும் சஞ்சிகை இணையத்தள அங்குரார்ப்பணமும் நாளைமறுதினம் பி.ப 12.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ச.திரவியராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (109)

## மட்டுவிலில் குடிநீர் விநியோகிக்க திட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி - மட்டுவில் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் நன்நீர் பிரச்சினையைத் தொடர்ந்து அப்பிரதேச மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்த கோரிக்கையை அடுத்து தற்போது மட்டுவில் பிரதேசத்திற்கு குழாய் ஊடாக நன்நீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. (153)

## இலங்கை...

நடத்தியிருந்தார். இதன் போதே ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இறைமையுள்ள ஒரு நாட்டின் மீது இத்தகைய அழுத்தங்களைப் பிரயோகிப்பது தவறானது எனக் குறிப்பிட்ட அவர், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விவகாரங்களை இலங்கையின் சொந்த ஆணைக்குழுக்களே கையாளும் என்றும் கூறியுள்ளார்.

## காணாமற்...

செலுத்தியிருக்கின்றனர். எனினும் குறித்த நபர் தெரிவித்தது போன்று காணாமற்போனவர் மீட்கப்படவில்லை.

இதனையடுத்து குறித்த பாதிக்கப்பட்டவர்கள் யாழ். மனித உரிமைக் காரியாலயத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். இதனையடுத்து இவ்விடயம் குறித்த தகவல் குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# சட்டவிரோத கள்ளு விற்பனை சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள கூழாவடி கிழக்கு ஒழுங்கையில் உள்ள உப ஒழுங்கை ஒன்றில் சட்டவிரோதமாக கள்ளு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள வெற்றுக்காணி ஒன்றில் வைத்தே இவ்வாறு கள்ளு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் மாலை நேரங்களில் அதிகளவான மதுப் பிரியர்கள் இங்கு கூடுகின்றனர். போதையில் அவர்கள் வீதியால் செல்பவர்களுடன் சேட்டை விடுவதுடன் தமக்குள்ளேயும் முட்டி மோதிக் கொள்கின்றனர்.

இதனால் மாலை நேரங்களில் இவ்வீதியூடாகச் செல்லும் பயணிகள் குறிப்பாக தனியார் கல்வி நிலைய மாணவிகள் பெரிதும் அச்சத்துடனேயே சென்று வரவேண்டிய நிலை உள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (54)

# பரந்தன் படுகொலை வழக்கு; மேலும் ஒருவருக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் கனேடிய நாட்டிலிருந்து வந்த நபரை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு நபர் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தால் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.


குறித்த பகுதியில் கனேடிய பிரஜையை குத்திக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு நீதவானால் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் குறித்த நான்கு பேரும் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் ஒரு நபர் கைதுசெய்யப்பட்டு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

விசாரணை மேற்கொண்ட மாவட்ட நீதிமன்ற நீதிபதி குறித்த நபரையும் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கே)

# முரளி விஜயின் அதிரடி மூலம் இறுதிப் போட்டியில் சென்னை

(சென்னை)



சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற இரண்டாவது தகுதிச்சுற்றுப் போட்டியில் முரளி விஜயின் அதிரடியான சதத்தின் மூலம் டில்லி டேர்டெவில்சை தோற்கடித்த சென்னை சுப்பகிங்ஸ் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி டேர்டெவில்ஸ் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனையடுத்து சென்னை சுப்பகிங்ஸ் துடுப்பெடுத்தாடியது. அவ்வணியின் மைக்கல் ஹசி, முரளி விஜய் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். இதில் முரளி விஜயின் ஆட்டத்தில் அனல் பறந்தது.

அவர் ஆரம்பம் முதலே சிக்ஸரும் பவுண்டரியுமாக விளாசினார். மறுபக்கத்தில் ஹசி 20, ரெய்னா 27, டோனி 10 பந்தில் 23 எடுத்தனர். பின்னர் வந்த பிராவோ, விஜயுடன் இணைந்து அதிரடியாக ஆடினர்.

இறுதியில் சென்னை சுப்பகிங்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 222 ஓட்டங்களைக் குவித்தது.

முரளி விஜய் போட்டியின் கடைசிப் பந்தில் ரன் அவுட்டானார். அவர் 55 பந்தில் 4 சிக்ஸர், 15 பவுண்டரிகளுடன் 113 ஓட்டங்களும், பிராவோ 12 பந்தில் 33 ஓட்டமும் (ஆட்டமிழக்காமல்) பெற்றனர்.

பந்துவீச்சில் ஆரோன் 2, உமேஷ் யாதவ், நெகி இருவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 223 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி அணி 16.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களை எடுத்து 86 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இதில் ஜெயவர்த்தன 55, ரெய்லர் 24, ரஸல் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 3, ஜகத்தி 2, ஹில்பென்ஹோஸ், மோர்கல், பிராவோ மூவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக முரளி விஜய் தெரிவானார்.

## மனிதாபிமான...

போதியளவு நன்கொடைகள் கிடைக்கப் பெறவில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த ஆண்டின் மே மாதம் 18 ஆம் திகதி வரையில் தேவையான மொத்த நிதியில் 13 வீதமே அதாவது 18.7 மில்லியன் அமெரிக்க டொலர்களே திரட்டப்பட்டுள்ளன.

என்ன காரணத்தினால் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பது பற்றிய விபரமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

## ஐ.தே.க.,...

முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றைய தினம் நியூசிலாந்து சென்ற ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர், எதிர்வரும் 6 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் மற்றுமொரு சந்திப்பும் இடம்பெறவுள்ளது.

இதன் அடிப்படையில் இந்தப் பெயர் பட்டியல் தயாரிக்கப்படும் என கூறப்படுகிறது.

# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி நம்பமுடியாததாக உள்ளது

## யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி வியப்பு



(வவுனியா)
கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு யு. என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி மைக்கல் ஸ்வாக் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்றைய தினம் விஜயம் செய்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது,

யுத்தத்தின் பின்னரான தற்போதைய நிலையில் கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றம் நம்ப முடியாததாக உள்ளது. சுப்பர் மார்க்கெட்டுகள், முறையான பொதுப் போக்குவரத்து வசதிகள் என்பன காணப்படுகின்றன.

நிரந்தர வீடமைப்புத் திட்டங்களின்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்து நாம் உதவவில்லை. ஆனால் முறையான பயனாளிகளை தெரிவு செய்வதிலும் வழிகாட்டல்களை வழங்குவதிலும் பெரிய நன்கொடையாளர்களுக்கும் அரசாங்கங்களுக்கும் நாம் உதவுகிறோம்.

இதேவேளை, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களைவிட, வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் குறித்து அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (யு.என்.எச்.சி.ஆர்.) அதிக கவனம் செலுத்துவதாக அவ்வமைப்பின் இலங்கைப் பிரதியான மைக்கல் ஸ்வாக் கூறியுள்ளார்.

காலம் செல்லச் செல்ல, உள்நாட்டில் இடம்பெயர்ந்து திரும்புவர்கள் தொடர்பான எமது ஈடுபாடு குறைவடைந்து, வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களில் கவனம் குவிக்கப்படும். இந்தியா, மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளிலுள்ள அகதிகள் இலங்கைக்கு இடம்பெயர்ந்து குடியமர்வதற்கு நாம் ஆதரவளிக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மலேசியாவில் அடிமை வேலை பண்டத்தரிப்பு இளைஞர் மீட்பு

(யாழ்ப்பாணம்)
மலேசியாவில் வேலையின்றி அங்கு வீடு ஒன்றில் அடிமையாக வேலை செய்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து துரிதமாக மீட்கப்பட்டுருக்கின்றார்.

சட்ட ரீதியான முறையில் மலேசியாவில் வேலை பெற்றுத் தருவதாக முகவர் ஒருவரினால் மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட குறித்த நபர் அங்கு வேலை கிடைக்காது அலைந்து திரிந்திருக்கின்றார். இறுதியில் வீடு ஒன்றில் அடிமையாக வேலை செய்திருக்கின்றார்.

தமக்கு நேர்ந்த கதி குறித்து வீட்டாருக்கு தகவலும் அனுப்பியிருக்கின்றார். உடனடியாகவே குறித்த இளைஞரது சகோதரி யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் காரியாலயத்தில் கடந்த 16 ஆம் திகதி இது குறித்து முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருக்கின்றார்.

இதனையடுத்து துரிதமாகச் செயற்பட்ட இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் இலங்கை வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு தகவலைக் கொடுத்திருக்கின்றது. இத்தகவலை வைத்துக்கொண்டு இலங்கை வேலை வாய்ப்புப் பணியகம் மலேசிய அரசுடன் தொடர்புகொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த இளைஞரை மீட்டு இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் குறித்த இளைஞர் வீடு திரும்பியதையும் முறைப்பாட்டுக்காரர் யாழ்ப்பாண உரிமை ஆணைக்குழுவின் காரியாலத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார். (பா)

# பொன்சேகாவைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் பிரசாரம்

## குற்றஞ்சாட்டுகிறது அரசாங்கம்

சில அரசியல்வாதிகள் சரத் பொன்சேகாவை பயன்படுத்தி தங்களது அரசியல் பிரசாரத்தை மேற்கொள்ள முயற்சிப்பதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளதுடன்

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக கடமையாற்றிய காலப் பகுதியில் சுமார் 7500 படைவீரர்கள் தண்டிக்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் எவருக்கும் மன்னிப்பு அளிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவிற்கு பூரண சுதந்திரம் கோரும் நபர்கள், சரத் பொன்சேகா காலத்தில் படையினருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் குறித்து கவனம் செலுத்தவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுதாப அடிப்படையிலேயே சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொன்சேகாவுக்கு சுதந்திரம் இல்லை என்கிறார் ரணில்

சரத் பொன்சேகாவிடம் இருந்து பறிக்கப்பட்ட ஜெனரல் தரம் மீண்டும் வழங்கப்படவில்லை என்பது, அவருக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, ஜெனரல் என்ற பதவியைப் பயன்படுத்த முடியாது என அமைச்சர் லக்ஷ்மன்யாப்பா அபேவர்தன தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக சரத் பொன்சேகாவுக்கு முழுமையான விடுதலை கிடைக்கவில்லை என்றே கொள்ளவேண்டி இருப்பதாக ரணில் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் தர பதவியை அவருக்கு வழங்காமையால், அவரது விடுதலையை ஒருவரையறுக்கப்பட்ட விடுதலை எனவே எடுத்துக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிசுவை கைவிட்ட தாயாருக்கு சிறை

(யாழ்ப்பாணம்)
பாசையூர் பற்றிமாதா தேவாலயம் அருகிலுள்ள வெற்றுக் காணியில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு நாள் சிசுவின் தாயார் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்.சிறுவர் பெண்கள் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் பிரிவினரால் நேற்று குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குறித்த பெண்ணை யூன் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

# அரச பாதுகாப்பை பெறும் தனிநபர் விபரம் தர மறுப்பு

மக்கள் பிரதிநிதிகளாக இல்லாமல் அரச பாதுகாப்பைப் பெறுபவர்களின் விபரங்களை வெளியிடுவதற்கு அரசாங்கம் நாடாளுமன்றத்தில் மறுப்புத் தெரிவித்தது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான தினேஷ் குணவர்தன பதிலளிக்கையில், மக்கள் பிரதிநிதியாக இல்லாத நிலையில் அரச பாதுகாப்பை பெறுபவர்கள் உள்ளனர் என ஏற்றுக் கொண்டார். ஆனால், அவர்களின் பாதுகாப்புக் கருதி அவ் விபரங்களை சபையில் வெளியிட முடியாது என அவர் கூறினார்.

இத்தகைய நபர்கள் குறித்து தகவல் நாடாளுமன்றத்திற்கு ஏன் மறைக்கப்படுகின்றது என தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

எம் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்பது தெரிந்த விடயம். இந்நிலையில் ஏனையவர்கள் குறித்த விபரங்களை குறைந்தபட்சம் இந்த சபைக்காவது ஏன் வழங்க முடியாது? என அவர் கேள்வி எழுப்பினார். நடிகைகள் உட்பட பலருக்கு அரச பாதுகாப்பு வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இத்தகைய பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் பொது மக்களுக்கு இடையூறாக அமைகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் அரச பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களைப் பயன்படுத்தி பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களை குறிப்பிட்டு கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த, நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாத சில அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறினார்.

இத்தகைய ஒரு நபர் குறித்து தான் ஒரு தடவை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதாகவும் ஆனால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார். இன்று அந்நபர் கப்பம் கோரல் விவகாரமொன்றில் சம்பந்தப்பட்டுள்ளார் எனவும் அவர் கூறினார்.

## பிரார்த்தனைக் கூட்டம் அனுமதியளித்தது நீதிமன்றம்

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மன்னார் ஆயருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தெரிவித்ததாகக் கூறப்படும் சில கருத்துக்களுக்கு எதிராக மன்னார் கத்தோலிக்கர்களினால் நாளை மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த பிரார்த்தனைக் கூட்டத்துக்கு மன்னார் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இத்தகைய கூட்டம் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை உள்ளடக்கியது என்றும் அதனால் பொது மக்கள் அமைதிக்கு பங்கம் ஏற்படலாம் என்று கூறி, அதனைத் தடுக்குமாறு மன்னார் பொலிஸார் நீதிமன்றத்தை அணுகியிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தின் ஏற்பாட்டாளர்களாக 5 கத்தோலிக்க மதகுருமார் அந்த மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்கள். இதனை நேற்று விசாரித்த மன்னார் நீதவான் யூட்சன் கூட்ட ஏற்பாட்டாளர்களால், இந்தக் கூட்டம் தமது அடிப்படை உரிமையை உள்ளடக்கியது என்று கூறப்பட்ட வாதத்தை ஏற்று, அதனை மன்னார் தேவாலயத்தில் நடத்தவும், கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றவும் அனுமதி வழங்கியுள்ளார்.

இருந்தபோதிலும், அங்கு ஊர்வலம் ஏதும் நடத்தப்படக்கூடாது என்று அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

## நாடு திரும்பினார் அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)
அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று அதிகாலை 2.00 மணியளவில் நாடு திரும்பினார்.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க அமைச்சின் செயலாளர் டப்ளியூ.பி.கனேகல உட்பட பலர் அமைச்சரை விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்பன் நகர வைத்தியசாலையில் 3 மாதங்களுக்கு மேலாக சிகிச்சை பெற்று வந்த அமைச்சர் உடல் நிலை தேறிய நிலையில் நாடு திரும்பி உள்ளார்.

நாடு திரும்பிய பின்னர் மீண்டும் தமது பணிகளை ஆரம்பிக்க உள்ளதாகவு அமைச்சர் குறிப்பிட்டார்

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீள்பரிசீலனை நிறைவு

கா.பொ.த உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான சூழ்நிலை தற்சமயம் இல்லை என பரீட்சைகள் ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

Z புள்ளி பிரச்சினை குறித்த வழக்கில் உயர் நீதிமன்றம் இதுவரை தீர்ப்பு வழங்காத நிலையில் பரீட்சை பெறுபெறுகளை வெளியிட முடியாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை மீள் திருத்த பெறுபேறுகளை வெளியிட முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் அண்டு உயர்தர பரீட்சை மீள் திருத்தத்திற்காக 140,000 மாணவர்கள் விண்ணப்பித்திருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்

# மரண அறிவித்தல்

## இரத்தினசபாபதி குணராசா



இரத்தின சபாபதி குணராசா(கைதடி ப.நோ.கூ சங்கக் கிளை முகாமையாளர்) 25-05-2012 இறைவனடிசேர்ந்தார். இரத்தினசபாபதி,சிதேவியினரின் அன்பு மகனும், கிருஜாவின் பாசமிகு கணவரும், பிரணவனின் அன்பு தந்தையும் இந்திராணியின் அண்ணாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 25.05.2012 அன்று நாற்குழி பிணமுருங்கை இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் ;
ஆ.நடராஜா,
ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்,
நாவற்குழி.
0776040655, 0213008285

(C/171)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.